KALKI 13.10.96 ரூ. 3.00

கல்கி



கல்யாணம் உள்ளவரை கச்சேரிகள் நடக்கும்!


மன்மதருபிணி
பண்டிகை வருவதோ
ஒருநாள்!
சாரதா'ஸிலோ –
தினமுமே திருநாள்!!
எப்பொழுதும்
புதுமைகளை
அள்ளித் தருவது
சாரதா'ஸ் !
சாரதா'ஸின்
இவ்வருடத்திய புதிய டிசைன்கள்...
யுகருபிணி
சாரதா'ஸ்
முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
827, அண்ணா சாலை,
சென்னை - 2
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி.ரோடு,
திருச்சி - 2
போன் : 27077



நமது பெண்களுக்கு என்னதான் ஆயிற்று?

நடிகைகள் ரேவதி, ரோகிணி, ரஞ்சிதா ஆகியோருடன் இணைந்து 'ஸ்வபிமான்' என்ற அமைப்பை நடத்தி வருகிறார், நடிகர் நாசரின் மனைவி திருமதி கமீலா நாசர். சமூக சேவை நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்வதும் அவற்றோடு இணைந்து செயலாற்றுவதும்தான் 'ஸ்வபிமான்' அமைப்பின் பணி. கமீலா நாசர் கூறுகிறார்....

''இப்போது என் மனத்தை உறுத்திக் கொண்டிருப்பது, ஒன்றல்ல; நான்கு விஷயங்கள். முதலாவது, டிராபிக் சிக்னல்களில் நிற்கும் போது, கையில் குழந்தைகளுடன் வந்து பிச்சை கேட்கும் பெண்கள். பிச்சை வாங்கியவுடன் சீறிப்பாயத் தயாராக இருக்கும் கார்களுக்கும், பிற வண்டிகளுக்கும் இடையில் திரும்பும் போது, இவர்கள் உயிருக்கு கேரண்டி கிடையாது. கடந்த சில வருடங்களாகவே இவர்களை நான் கவனித்து வருகிறேன். இவர்கள் கையில் இருக்கும் குழந்தைகளுக்கு மட்டும் வயதாகவே செய்யாதோ என்று நான் வியப்பதுண்டு. சமீப காலமாக, பருவப் பெண்களும் இப்படிப் பிச்சையெடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களைப் பிடித்துக் கொண்டு போய், அரசாங்கத்தால் மறுவாழ்வு கொடுக்க முடியாதா?

''அடுத்ததாக, பன்னிரண்டு வயதுக்குட்பட்ட, சிறுவர், சிறுமியரை வீடுகள், ஹோட்டல்களில், பணியில் அமர்த்தி வறுத்தெடுப்பது. இது மகா கொடுமை. இதுபோன்ற மழலைத் தொழிலாளர்களாக வேலை பார்க்கும் சிறுவர், சிறுமியரைச் சந்தித்து அவர்கள் மனத்தில் உள்ளதைத் திறக்கச் சொன்னால் அனைவருமே உருகிவிடுவார்கள். இப்போது நாங்கள் போகும் இடங்களில் எல்லாம் சொல்லி வருவது இதுதான். 'தயவுசெய்து பிஞ்சுகளை முடக்காதீர்கள்; அவர்கள் வாழ வேண்டியவர்கள்! என் வீட்டில் வேலை செய்யும் பெண்மணியின் மகன் படிக்க உதவுவது நான் தான். தயவுசெய்து அவர்களைப் படிக்க வையுங்கள்!'

''மூன்றாவதாக, இருசக்கர வாகனங்களில் செல்வோர் ஹெல்மெட் அணியாமல் செல்வது. ஹெல்மெட்டைக் கட்டாயப் படுத்திய அரசாங்கம், என்ன காரணத்தால் அந்த விதியை விலக்கிக் கொண்டது என்பது புரியாத புதிர். தலையில் சாதாரண அடிபட்டு, அவயவங்கள் செயலற்றுப் போகும் நிலையிலிருப்பவர்களைப் பார்த்தால் தான் ஹெல்மெட்டின் அவசியம் புரியும். ஆகவே, அரசு உடனடியாக ஹெல்மெட் அணிவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

''கடைசியாக, இன்றைய பெண்மணிகளுடைய விட்டேத்தியான போக்கு. ரங்கநாதன் தெருவில் உள்ள ஒரு துணிக்கடையில், அங்கு வேலை பார்க்கும் பையன்கள் வரும் பெண்களிடம், 'விஷமம்' செய்வதும், கிண்டலடிப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. தன்மானம் உள்ள பெண்கள் எதிர்ப்புக்குரல் கொடுத்தால் 'திருடி' பட்டத்தைச் சுமத்துவதும் தெரியவந்தது. இதுப்பற்றி எத்தனையோ கண்டனக் குரல்கள் எழுப்பியும் ஒரு பலனுமில்லை. செல்வாக்குப் படைத்த கடைக்காரர் விஷயத்தைச் சுலபமாக சமாளித்து விட்டார். ஆனால் நமது பெண்களுக்கு என்னதான் ஆயிற்று? அவர்கள் அந்தக் கடையை முற்றிலும் புறக்கணிக்க வேண்டாமா? ஆனால் இன்னமும் அங்கே கூட்டம் அலைமோதுகிறதே! ஏன்? நமது பெண்களுக்கு சூடு, சொரணையே கிடையாதா?''

சந்திப்பு : **ப்ரியன்**

வண்ணப்படம் : **பேஜர் கே. மூர்த்தி**

மனசுல இருந்தது, கொட்டிட்டேன் : கமீலா நாசர்

தானம் தந்து விட்டுத் தவிக்கிறார்கள்...

உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழியே இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்ட மைமூன் பீவிக்கு இருதயத்தைத் தந்தவர் ஒரு பாங்க் ஊழியர். இதற்கான ஏற்பாட்டைச் செய்து தந்தவர், பொது மருத்துவமனையைச் சார்ந்த டாக்டர் பிரம்மானந்தம் என்பவர். மைமூன்பீவி மாற்று இருதயத்துடன் புத்துயிர் பெற்று ஓர் ஆண்டு ஆகிவிட்டது. அந்த ஆண்டு நிறைவு 23.9.96 அன்று ஏறக்குறைய மறு பிறந்த நாளாகவே கொண்டாடப்பட்டது.

மைமூன்பீவி கேக் வெட்ட, உடன் இருந்து நிகழ்ச்சியை சிறப்பித்துத் தந்தவர் நடிகை ரேவதிமேனன். இதே நாளில் இருதய தானத்தைப் பற்றி வலியுறுத்தும் வகையில் மெட்ராஸ் மெடிகல் மிஷனில் விழிப்புணர்ச்சிக் கூட்டமும் நடத்தப்பட்டது.

இருதய மாற்றுச் சாதனையை நிகழ்த்திய பெருமையும் பாராட்டும் டாக்டர் கே.எம். செரியனுக்கு ஒரு பக்கம் இருக்க, மற்றொரு புறம் தம் மனைவியின் இருதயத்தைத் தானமாக அளிக்க முன்வந்த சுந்தர் ராஜனின் மனக்குமுறல்கள் மிகவும் வேதனைக்குரியதாக இருக்கின்றன.


இவர் ஒரு ரயில்வே ஊழியர். இவரது மனைவி தாம்பரத்திலுள்ள ஸ்டேட் பாங்கில் பதினைந்து வருட காலம் பணியாற்றி இருக்கிறார். இவர்கள் காதல் கல்யாணம் செய்து கொண்டவர்கள். சாலை விபத்தில் மனைவி மரணமடைந்து ஒரு வருட காலமாகியும் அவருக்கு பாங்கிலிருந்து கிடைக்க வேண்டிய பி.எப்., கிராஜுவிடி என்று எதுவுமே இன்னும் செட்டில் செய்யப்படவில்லை. இதுபற்றி பலமுறை பாங்குக்கு சென்று விசாரித்தும் இன்னும் சரியான தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும், முதல்வர் முதல் மூப்பனார் வரை எழுதிப் போட்டும் எந்தப் பலனும் இல்லை என்றும் சுந்தர்ராஜன் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

இவருக்கு இரண்டு குழந்தைகள். பன்னிரண்டு வயதான மூத்தவளுக்கு, அம்மாவுக்கு பதிலாக பாங்கில் வேலைக்குப் பதிவுசெய்து தரும்படி கேட்டும், பாங்க் தரப்பில் யாரும் செவிசாய்க்கவில்லை என்பது இவரது இன்னொரு அதிருப்தி.

டாக்டர் செரியனை விசாரித்தபோது தாமும் இது சம்பந்தமாக சுந்தர்ராஜன் குடும்பத்தினருக்குச் சேர வேண்டிய பணத்தை சீக்கிரம் செட்டில் செய்து தரும்படி பாங்க் அதிகாரிகளுக்கும், மேலிடத்திற்கும் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார். ஆயினும் பலனில்லை. சுந்தர்ராஜனின் அப்பா சொன்ன ஒரு விஷயம் நம்மை மேலும் அதிரவைக்கிறது.

"நாட்டுல நியாயம் கிடைக்கிறது கஷ்டமா இருக்கு சார். நாங்க நல்லதை செய்யப் போய்த்தானே இப்படியெல்லாம் நடந்துக்கிட்டிருக்கு. என் மருமக செத்துப் போனதுக்கு இன்னொரு முக்கியமான காரணம் சொல்றேன். அன்னிக்கு ஒரு வி.ஐ.பி. வர்றாங்கன்னு சொல்லி ரோட்டை பிளாக் பண்ணிட்டாங்க. மருமகளுக்கு மண்டையில அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு வண்டில கொண்டுட்டுப் போயிட்டிருந்த சமயத்துல கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இப்படி பிளாக் பண்ணிட்டாங்க. மண்டையிலே அடிபட்டு அஞ்சு நிமிஷம் தாமதிச்சாலே உயிரைக் காப்பாத்தறது கஷ்டம்னு சொல்றாங்க. அப்படியிருக்கும் போது ஒரு மணி நேரம் மண்டையில உள்காயத்தோட சிகிச்சையே இல்லாம இருந்தா என்ன சார் ஆகும்? இந்த முறைகேடான அக்கிரமத்தை யார் தட்டிக் கேட்கப் போறாங்க?"

சுந்தர்ராஜன் தேசிய அளவிலான ஒரு விளையாட்டு வீரர். 1982-ல் ஆசிய



* குழந்தைகளுடன் சுந்தர்ராஜன்

விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசும் பெற்றிருக்கிறார். இதுவரை சேர வேண்டிய பணம் கிடைக்காததற்கு உண்மையில் என்னதான் காரணம்? "எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலீங்க. நாங்க இருதய தானம் கொடுத்ததுக்காக ஈட்டுத் தொகையாவோ இல்லை அன்பளிப்பாவோ எதுவும் கேட்கலை. என் மனைவிக்கு நியாயப்படி சேர வேண்டிய பணத்தைத்தான் கேட்கிறோம். நாங்க பாங்க் அதிகாரிங்க யாருக்கும் தெரிவிக்காம அவங்க சம்மதம் ஏதும் இல்லாமலே 'ஹார்ட் டொனேட்' பண்ணிட்டோம்னு வேற பேசிக்கிறாங்க. எங்களுக்கு யார் மூலமா இதுக்கு ஒரு வழி பிறக்குமோ தெரியலீங்க!" என்றார் தழுதழுத்த குரலில்.

— எம்.டி. மனோகர்

படம் : பேஜர் கே. மூர்த்தி



பரிவுடன் பரிசீலிக்குமா அரசு?

• பூங்கா

'ஏழைகள் வாழ இடமே இல்லை...' - இது முதல்வர் கலைஞர் எழுதிய சினிமா பாடலொன்றில் வருகிற ஒரு வரி. இதற்கு அர்த்தம் என்ன? ஏழைகளுக்கான இடத்தையும் சேர்த்துப் பணக்காரர்களே ஸ்வாகா செய்து கொண்டு விடுகிறார்கள் என்பதுதான்.

இதற்கொரு சரியான உதாரணம்தான் சென்னை - அண்ணா நகரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா பூங்கா. அண்ணா நகரை உருவாக்கிய வீட்டு வசதி வாரியம் அமைத்துத் தந்த பூங்கா இது. சுமார் இருபத்து நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தப் பூங்காதான், அண்ணாநகர் வாசிகள் காலாற நடந்து மூச்சு விடுகிற இடம். குடும்பத்தோடு பீச்சுக்குப் போய் வந்தால் பஸ் சார்ஜே ஏகப்பட்டதாகுமே என்று கணக்குப் போடுகிற நடுத்தர மக்களுக்கு, பக்கத்திலிருக்கிற இந்தப் பூங்கா மிகப் பெரியதொரு வரப் பிரசாதம். அண்ணா



• டவர்ஸ் கிளப்பின் புதிய கட்டடம்

நகர... கலங்கரை விளக்கம் போல இருக்கிற இந்தப் பூங்கா டவரின் மீதேறி, குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டலாம்.

ஆனால், இப்போதோ, இந்த டவரின் மீது ஏறிப் பார்க்க, யாருக்குமே அனுமதியில்லை. காரணம், அடிக்கடி இந்த டவரின் மீது ஏறிக் குதித்துச் செய்து கொள்ளப்படுகிற தற்கொலைகள்.

இது ஒருபுறமிருக்க, டவரை ஒட்டி வெகு நீளத்துக்கு இருக்கிற செயற்கை நீரூற்றுகள், நீரைப் பார்த்தே வெகு காலமாகி விட்டதால் வறண்டு கிடக்கின்றன.

காரணம் என்ன?

அங்கு டியூட்டியில் இருந்த மாநகராட்சி ஊழியர் ஒருவரிடம் விசாரித்த போது, "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? விஜிலென்ஸிலிருந்தா? நீங்கள் எது கேட்டாலும் நான் சொல்ல மாட்டேன்!" என்றார்.

வறட்சி, செயற்கை நீரூற்றுக்குத்தானே தவிர, அந்த ஊழியருக்கல்ல. 'தண்ணி'யில் மிதந்தபடி இருந்தார்!

இவை எல்லாவற்றையும் மீறி, பூங்கா குளுமையாகத்தான் இருக்கிறது. ஆரம்பத்தில் வைக்கப்பட்ட மரங்களெல்லாம் வளர்ந்து செழிப்பாக இருக்கின்றன. புல் தரையில் புற்களும் இருக்கின்றன. எனவே, இப்போதும் ...து நடுத்தரக் குடும்பங்களின் செலவில்லாத பொழுதுபோக்கிடமாகத்தான் இருக்கிறது.

இதற்குத்தான் இப்போது ஆபத்து வந்துவிடும் போல் இருக்கிறது. ஆபத்தாக நின்று பயமுறுத்திக் கொண்டிருப்பது 'டவர்ஸ் கிளப்' – பணக்காரர்களின் பொழுதுபோக்கு மையம்!

கடந்த 89-ல் வெறும் முப்பது உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்த கிளப், இப்போது 927 உறுப்பினர்களுடன் ஜாம் ஜாம் என்று வளர்ந்திருக்கிறது. ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட சீட்டாட்ட மையம், பார், மற்றும் பலவிதமான உள் விளையாட்டு அரங்கங்கள் என்று பொழுதுபோக்க ஏகப்பட்ட வசதிகள். இந்த வசதிகளை மேலும் விஸ்தரிப்பதற்காகச் சென்ற மாதம் கூட ஒரு கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட பல மாடிக் கட்டடம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புதிய கட்டடம் கட்டுவதற்காக அரசிடம் ஒன்பது கிரவுண்ட் நிலம் கேட்கப்பட்டது. ஆனால் நான்கரை கிரவுண்ட்தான் ஒதுக்கப்பட்டதாம். அதனால், "மேலும் நான்கரை கிரவுண்ட் நிலத்தை ஒதுக்குவது பற்றி அரசு பரிவுடன் பரிசீலிக்கும்!" என்று புதிய கட்டடத் திறப்பு விழாவில் பேசியிருக்கிறார் மாநில சுகாதாரத் துறை மற்றும் மின்துறை அமைச்சரான

ஆற்காடு வீராசாமி.

நிலத்தை எங்கிருந்து ஒதுக்கப் பரிவுடன் அரசு பரிசீலிக்கப் போகிறது? விஸ்வேஸ்வரய்யா பூங்காவிலிருந்து! அதாவது சாதாரண ஏழை - எளிய மக்களின் பொழுதுபோக்காக விளங்கிக் கொண்டிருக்கும் பூங்காவிலிருந்து!

பூங்காவும் பொழுதுபோக்குவதற்குத்தான். கிளப்பும் பொழுதுபோக்குவதற்குத்தானே! இதில் என்ன பெரிய தவறு இருக்கிறது?

இந்தக் கேள்வியை அண்ணா நகரிலுள்ள நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த யாரிடம் கேட்டாலும் உதைக்க வருவார்கள். காரணம், அந்த கிளப் ஒன்றும் சாதாரண மக்களுக்கானதல்ல!

டவர்ஸ் கிளப் துவங்கப்பட்ட காலத்தில் அதில் உறுப்பினராகச் சேர ஆயிரம் ரூபாய் தான் வசூலிக்கப்பட்டது. பிறகு, சென்ற ஆட்சிக் காலத்தில் பணத்தின் மதிப்பு படுபாதாளம் என்கிற அளவுக்குக் குறைந்து போய், கோடிகளெல்லாம் சர்வ சாதாரணம் என்றாகி விட்டதாலோ என்னவோ, இப்போது அதில் உறுப்பினராக வேண்டுமானால் ஐம்பதாயிரம் ரூபாய் கட்டணம் கட்டியாக வேண்டும்.

'அடேயப்பா!' என்று யாரும் வாயைப் பிளக்க வேண்டாம்! இதில் அமைச்சர் ஆற்காடு வீராசாமி மற்றும் அவரது சகோதரர்கள் தவிர, ஏகப்பட்ட முன்னாள், இந்நாள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளெல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

இந்த டவர்ஸ் கிளப் ஆரம்பிக்கப்படுவதற்குப் பல்லாண்டுகள் முன்பே ஆரம்பிக்கப்பட்ட அண்ணா நகர் கிளப் என்று சொல்லப்படுகிற 'எலிபண்ட் கிளப்' (இதில் உறுப்பினராக இருபதாயிரம் ரூபாய்க் கட்டணம்!) பின் வளர்ச்சி படு சுமாராக இருக்கிற நிலையில், டவர்ஸ் கிளப்பின் வளர்ச்சி மட்டும் படுவேகத்தில் இருப்பதற்குக் காரணம், அரசியல் செல்வாக்குள்ளவர்களும் பெரிய பெரிய அதிகாரிகளும் இதற்கு போஷகர்களாக இருக்கிறார்கள் என்பதெல்லாம் நமக்கு ஒரு பெரிய விஷயமில்லைதான்.

மறந்து விடாதீர்கள்!

கல்கி – அனுபவ் குரூப் இணைந்து வழங்கும் கவிதைப் போட்டிக்கான கடைசி தேதி : அக்டோபர் 17.

தலைப்பு : சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

முதல் பரிசு ரூ. 10,000;
இரண்டாம் பரிசு ரூ. 5,000;
மூன்றாம் பரிசு ரூ. 3,000! தவிர, மூன்று கவிதைகளுக்கு ஆறுதல் பரிசாகத் தலா ரூ. 1,000.

உடனடியாக அனுப்பி வையுங்கள்!

— ஆர்.

ஆனால், கொழுத்த பணக்காரர்கள் மட்டுமே அனுபவிக்கக்கூடிய இந்த கிளப்புக்காக, நடுத்தர மக்களின் பொழுதுபோக்கிடமாக உள்ள பூங்காவிலிருந்து அரசு இடம் ஒதுக்குவது சரியா என்பதுதான் முக்கிய கேள்வி.

அதுவும் இந்தக் கிளப்பில் உறுப்பினராக உள்ள அமைச்சர் ஆற்காடு வீராசாமியே 'அரசு பரிவுடன் பரிசீலிக்கும்' என்று கூறுவது அதிகார துஷ்பிரயோகம் ஆகாதா? இதுதான் விஸ்வரூபமெடுத்து நிற்கும் கேள்வி.

இதுபோன்ற கேள்விகள் அமைச்சர் அன்பழகன் உள்ளத்திலும் எழுந்ததோ என்னவோ தெரியவில்லை. கிளப்பின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் அன்பழகன் பேசும்போது, "இந்த கிளப் உறுப்பினர்கள் வெறும் சீட்டாட்டத்திலேயே பொழுதுபோக்கி விடக் கூடாது. இலக்கியக் கூட்டங்கள் போன்ற பயனுள்ளவற்றையும் நடத்த வேண்டும். சீட்டாட்டத்தில் ஜெயிக்கிற பணத்தில் பத்து, இருபது சதவிகிதத்தை ஏழைகளுக்கு உதவுவதற்காகவும் ஒதுக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அன்பழகன் அமைச்சர் என்பதால், சக அமைச்சரும் சக உயர் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிற இந்த விஷயத்தில் வெளிப்படையாகப் பேச முடியாமல், நாசூக்காகப் பேசியிருக்கலாம். நாம் வெளிப்படையாகவே சொல்லி விட்டோம்.

"கிளப்புக்குப் பூங்கா நிலத்தை ஒதுக்குவது பற்றி அரசு பரிவுடன் பரிசீலிக்கும்!" என்று கிளப்பின் கோரிக்கைக்கு அமைச்சர் ஆற்காடு வீராசாமி கூறியது போலவே, ஏழை - எளிய, நடுத்தர மக்களின் சார்பாக நாம் விடுக்கும் மேற்கண்ட நமது கேள்விகளையும் முதல்வர் பரிவுடன் பரிசீலித்து விடைகாண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

— இளங்கோவன், ஸ்ரீநிவாசன்

படங்கள் : பேஜர் கே. மூர்த்தி



கல்யாணம் உள்ளவரை

மெல்லிசைக் குழுக்களின் இன்றைய நிலை என்ன? பிரகாசமான எதிர்காலம் இருக்கிறதா?

சென்னையில் தடுக்கி விழுந்தால் மெல்லிசைக் குழுக்கள். புதிதாக உருவாகும் குழுக்கள் சில என்றால், ஏற்கெனவே உள்ள வற்றிலிருந்து பிரிந்து வருபவை பல. ஆறேழு 'ராகாஸ்', ஏழெட்டு 'ஸ்ருதி'கள். 'இன்னிசை மழை'களுக்கும் குறைவில்லை.

"பல்லவன், திருவள்ளுவர் என்று போக்கு வரத்துக் கழக ஊழியர்கள் கூட தனியாக மெல்லிசைக் குழுவைத் தொடங்கி விட்டார்கள். சென்னை மட்டுமல்ல. பல வெளியூர்களி லும் கூட அங்கங்கே பல புதிய மெல்லிசைக் குழுக்கள். எங்களைப் போன்ற குழுக்களுக்கு வெளியூர் நிகழ்ச்சிகளினால் கிடைக்கும் வருமானம் சுமார் 70 சதவீதம் குறைந்து விட்ட தென்றே சொல்வேன்" என்கிறார் ஏ.வி. ரமணன். பல வருடங்களாகத் தமது 'மியூசி யானோ' மூலம் மெல்லிசை ரசிகர்களிடையே தனியிடத்தைப் பிடித்திருப்பவர்.

பாக்டீரியா போல் இப்படி மெல்லிசைக் குழுக்கள் பெருகக் காரணமென்ன?

பல குழுக்களிடம் பேசிப் பார்த்தபோது ஆத்ம திருப்தி, இசை ஆர்வம், திரையுலகில் நுழைவதற்கான முதல் அடி என்ற வார்த்தை களெல்லாம் அங்கங்கே அடிபட்டாலும்,



• கண்ணன்


பொருளாதாரம் முக்கிய பங்கு வகிப்பதை உணர முடிகிறது.

"ஒரு மாதத்திற்குக் குறைந்தது பதினைந்து நிகழ்ச்சிகள் நடத்துகிறோம். ஒரு நிகழ்ச்சிக்கு பதினைந்தாயிரம் ரூபாய் வசூலிக்கிறோம். தொடர்ந்து டிமாண்ட் இருக்கிறது" என்கிறார் மெல்கிராஜா இசைக்குழு அமைப்பாளரான விஜய் பீட்டர் எட்வின். இவரது இசைக் குழுவில் விக்டர், லாரன்ஸ், பெலிக்ஸ் ஆகிய இவரது சகோதரர்களும் பங்கு வகிக்கிறார்கள்.

பொதுவாக ஒரு மெல்லிசைக்குழு தனது 'ஸ்டேட்டஸு'க்குத் தகுந்தபடி ஐயாயிரத்திலிருந்து இருபத்தி ஐயாயிரம் வரை பெறுகிறது (ஒரு நிகழ்ச்சிக்குத்தான்). "அதிகப்படி லைட்டிங் மற்றும் எக்ஸ்ட்ரா இசைக்கருவிகள் என்று கேட்டால் மேலும் ஐயாயிரம் ரூபாய் டிமாண்ட் செய்வோம்" என்கிறார் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் 'லக்ஷ்மண் ஸ்ருதி' யின் அமைப்பாளரான லக்ஷ்மண்.

யினர்தான். திறமைசாலிகள் என்றாலும் இந்தப் புகழுக்கு முக்கியமான ஒரு காரணம், இவர்களது 'மார்க்கெட்டிங்' சாமர்த்தியம் என்பதை மறுப்பதற்கில்லை. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் பக்திப்பாடல்தான் என்றாலும் நிகழ்ச்சி கல்லூரி மாணவர்கள் மத்தியில் என்றால் கதையே வேறு. "கடவுளை நம்புவதை விட, காதலை நம்புவதே மேல்" என்று அறிவித்துவிட்டு ஒரு காதல் பாட்டை எடுத்து விடுகிறார்கள் - அவ்வளவுதான் அத்தனை இளம் ரசிகர்களும் இவர்கள் பக்கம்!

"எக்கச்சக்கமாக மெல்லிசைக் குழுக்கள் மலிந்து வரும் இந்தக் காலத்திலே மக்களை நம் பக்க



கச்சேரிகள் நடக்கும்!

வெகு காலமாகவே இசைக்குழு நடத்தி வரும் தம்பதியரான கண்ணன்-லதா வேறு சில காரணங்களையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

"பழைய சினிமாப் பாடல்களில் கோலோச்சிய டி.எம்.எஸ்., சுசீலா, ஜிக்கி, எல்.ஆர். ஈஸ்வரி ஆகியோரின் குரல்களுக்கு தனித்துவம் உண்டு. அவர்கள் குரலைக் கொண்டு வர சிலரால்தான் முடிந்தது. சித்ரா, சுவர்ணலதா போன்றவர்களின் குரலுக்கேற்ப மாற்றிக் கொள்வது அவ்வளவு கஷ்டமல்ல" என்பது லதாவின் கருத்து.

"மக்களும், நிகழ்ச்சி அமைப்பாளர்களும் மாறுதல் வேணும்னு நினைக்கிறாங்க. எவ்வளவு நல்லாப் பாடினாலும் மற்றொரு சான்ஸ் தருவதைவிட, 'இந்த முறை இவங்களைப் பாட வச்சோம், அடுத்தமுறை வேறொரு குழுவைப் போடுவோம்'கிற எண்ணம் அதிகமாயிடுச்சி. மெல்லிசைக் குழுக்கள் பெருக இதுவும் ஒரு காரணம்" என்று சுட்டிக் காட்டுகிறார் கண்ணன்.

எப்படியோ, கடும்போட்டி நிலவும் இன்றைய சூழலில் தாங்கள் நிலைத்து நிற்கப் பல்வேறு உத்திகளைக் கடைப்பிடிக்கின்றன மெல்லிசைக் குழுக்கள்.

இன்று 'பாப்புலாரிடி சார்ட்'டின் உச்சத்தில் இருப்பவர்கள் 'லக்ஷ்மண் ஸ்ருதி'

மாகத் திருப்ப புதுமைகளைக் கையாளணும்னு தீர்மானிச்சேன். 1989ல் 'இதயக்கனியின் பாடல்கள்'னு எம்.ஜி.ஆரின் பாடல்களை மட்டும் கொண்டு ஒரு நிகழ்ச்சி நடத்தினோம். பலத்த வரவேற்பு. பிறகு இப்படி 'தீமேட்டிக்காக' பல நிகழ்ச்சிகள். 36 மணிநேரம் தொடர்ந்து



* லதா



• ஆனந்த்

நிகழ்ச்சி நடத்தினோம்; பத்திரிகைச் செய்திகளால் மேலும் புகழ் கிடைத்தது'' என்கிறார் லக்ஷ்மண். (இந்தச் சாதனை இன்னும் கின்னஸில் இடம் பெற்றுவிடவில்லை என்றாலும் இது 'பரிசீலனையில் இருப்பதாக' கின்னஸ் குழுவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதாம்).

மேலும் சில டெக்னிக்குகளையும் தவறாமல் கடைப்பிடிக்கிறார்கள் இவர்கள் குழுவினர். ''பல குழுக்கள், மக்கள் மத்தியிலே பாபுலராகாத பாடல்களைக் கூட, பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்களின் திறமையைக் காட்டுவதற்காக மட்டுமே நிகழ்ச்சியில் சேர்த்து விடுவதுண்டு. நாங்கள் அந்தத் தவறைச் செய்வதில்லை. நேரம் தவறாமை, குழுவில் அத்தனை பேரும் சீருடையில் தோன்றுவது - இவை எங்கள் பலங்கள். இனி வரப் போகும் படங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட பாடல்கள் என்றால் மட்டுமே விவரங்களை அறிவிப்போம். மற்றபடி மக்களை அடைந்த பாட்டுக்கள்தானே நிகழ்ச்சியில் இடம் பெறப் போகுது; அவற்றுக்கு 'இன்னார் இயக்கிய படத்தில் இன்னார் வாயசைத்த இன்னார் பாடியது' என்று அறிவிப்பது அபத்தம். தவிர நம்ம வீட்டுக் குழந்தைகள் எந்த மாதிரிப் பாட்டுகளை விரும்பறாங்கன்றதை தெரிஞ்சு வச்சுக் கிட்டு, அதுக்குத் தகுந்தா மாதிரி நம்ம தேர்வுகளை மாத்திக்கணும். அப்போதான் நிலைச்சு நிக்க முடியும்'' என்கிறார் லக்ஷ்மண்.

என்றாலும் மெல்லிசை நிகழ்ச்சிகளில் புதுமைகளைப் பரவலாகப் புகுத்தியது. லக்ஷ்மண் ஸ்ருதிதான் என்று முற்றிலுமாகச் சொல்லிவிட முடியாது. ''எங்கள் மியூசியானோவைத் தொடங்கிய முதல் பத்து வருடங்களில் பல புதுமைகளைச் செய்திருக்கிறேன். வடக்கே கிஷோர்குமார், உஷா உதுப் என்றால் தென்னிந்தியாவில் 'மைக்'கைக் கையில் பிடித்தபடி நகர்ந்தபடியே பாடும் வழக்கத்தை அறிமுகப்படுத்தியது நான்தான். பி.ஏ., எம்.ஏ., என்று படித்தவர்கள் பலர் எங்கள் குழுவில் உண்டு. எட்டு மொழிகளில் பாடக்கூடியவர்கள் நாங்கள்தான். சினிமா தியேட்டர்களில் மெல்லிசை நிகழ்ச்சிகளை நாங்கள்தான் நடத்தத் தொடங்கினோம். மிட்லண்ட் தியேட்டரில் எங்கள் நிகழ்ச்சிகளுக்கு பலத்த வரவேற்பு. ஒலியின் நுணுக்கங்கள் புரிந்து acoustics விதிகளை அறிந்து கட்டப்பட்டதால் சினிமா தியேட்டர்களில் நிகழ்ச்சிகள் அற்புதமாக எடுபட்டன. ஆனால் சினிமா போலவே, இவற்றுக்கும் கேளிக்கை வரி செலுத்த வேண்டும்னு அரசு சட்டம் போட்டதால், தியேட்டர்காரர்கள் மெல்லிசை நிகழ்ச்சிகளுக்கு 'நோ' சொல்லி விட்டார்கள்'' என்கிறார் ரமணன்.



• ஏ.வி. ரமணன்

அதே சமயம் வேறு சில 'காம்ப்ரமைஸ்'களுக்குத் தாம் உடன்படாததையும் குறிப்பிட்டார். ''நிகழ்ச்சிக்கு மூன்று மணி நேரத்துக்கு முன்பே நான் போய் இசைக் கருவிகளைத் தயார் செய்யத் தொடங்கிடுவேன். அப்போதுதான் பர்ஃபெக்ஷன்



நீர் நோக்கி ஓடுவதே தண்ணீரின் இயற்கை. ஆனால் கதிரவனின் கிரணங்கள் அதனை ஆவியாக்கி வானில் உயர்த்துகின்றன. அது போன்று மனமும் இழிந்த பொருள்களான விஷயசுகங்களை நாடிப் போவது இயற்கை. ஆனால் கடவுளின் அருள் மனத்தை மேலான பொருளை நாடிச் செல்லும்படி உயர்த்துகிறது.

— அன்னை சாரதா தேவி.

தகவல் : வயலூர் ஆர். பார்த்திபன்

கிடைக்கும்ன்றது என் கருத்து. எனவே வேறு நிகழ்ச்சிகளுக்கு இடையே என் நிகழ்ச்சின்னா மறுத்திடுவேன்.' அதே போல் தெருவில் மேடை போட்டு, அதில் நிகழ்ச்சி நடத்தச் சொல்வதையோ, கோவில் கச்சேரிகளையோ (அவற்றில் சினிமாப் பாடல்களைப் பாடுவது முறையில்லை என்பதால்) தவிர்ப்பதுண்டு. சில கல்யாணச் சத்திரங்கள் மெல்லிசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவை அல்ல என்பதால் கூட அந்த வாய்ப்புகளைத் தட்டிக் கழித்ததுண்டு" என்பவர், "மெல்லிசையைக் கொண்டு செய்ய நினைத்த சாதனைகளில் இதுவரை ஐந்து சதவீதத்தைத்தான் நிறைவேற்றியிருக்கிறேன், என்றாலும் பொதுக் காரியங்களுக்காக நான் இலவசமாக நடத்திக் கொடுத்த பல நிகழ்ச்சிகளை மனத்தில் கொண்டு, ரோடரி கிளப் தனது மிக உயர்ந்த விருதான 'For the sake of Honour' விருதை சமீபத்தில் எம்.எஸ்.எஸ். கரங்களால் வழங்கிய போது நெகிழ்ந்தேன்" என்கிறார்.

பெருகி வரும் போட்டி காரணமாக மெல்லிசையில் 'புதிய பாதைகளை'த் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களும் உண்டு.

கண்ணன்-லதா இப்போது தினமும் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஒரு உணவகத்தில் இசை நிகழ்ச்சி நடத்துகிறார்கள். "சீரான வருமானம். தவிர கஜல், அந்தக் கால இந்தி ஹிட்கள் போன்றவற்றைப் பாடுவதால் திருப்தியும் கிடைக்கிறது" என்கிறார்கள்.

"1975ல் தொடங்கப்பட்ட எங்கள் 'சிவராஜ்-ஆனந்த்' குழு பல வருடங்கள் தொடர்ந்து டாப்பிலே இருந்தது. 1990ல் நாங்கள் பிரிந்தவுடன் லேசான தேக்க நிலை. இந்த சமயத்திலேதான் சிங்கப்பூரிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. அஷோக் மியூசிகல் லவுன்ஜ்ன்ற இடத்திலே தினமும் நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்று. ஒத்துக் கொண்டோம். சிங்கப்பூரில் ஆறு மாதம், இங்கே ஆறு மாதம் என்று நாலு வருடங்களாக நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறேன்' என்கிறார் ஆனந்த்.

மதுபானக் கடைக்கு வருபவர்கள் மது அருந்திக் கொண்டே இந்த இசையை ரசிப்பார்களாம் ('புதிய பறவை' படத்தில் வரும் 'பார்த்த ஞாபகம் இல்லையோ?' பாடல் காட்சியில் வரும் இதுபோன்ற இடங்களை 'Pub' என்பார்கள்).

"பதினெட்டு வயதுக்குக் கீழே உள்ளவர்கள் அங்கு வரத் தடை உண்டு. உறுப்பினர்களுக்குத்தான் அனுமதி. குடித்துவிட்டு வரம்புமீறி நடந்து கொள்வது குறைவுதான். 'போனால் போகட்டும் போடா' மாதிரி தத்துவப் பாடல்களுக்குத்தான் கிராக்கி. தன் சகோதரரோடு சண்டை போட்டு விட்டு நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஒருவர், "அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே" பாட்டை நாங்க பாடியதும் ரொம்ப எமோஷனலாயிட்டார். வருபவர்களும் சேர்ந்து ஸ்டெப்ஸ் கொடுப்பதற்காக நடுநடுவே வேகமான பாட்டுக்களையும் பாடுவோம்" என்கிறார் ஆனந்த்.


தினமும் இரவு 9 மணியிலிருந்து காலை 2 மணி வரை நிகழ்ச்சியாம். பாடகர்களுக்குத் தொண்டை கட்டிக் கொள்ளாதோ? "அதை விட அந்த ஏ.ஸி. அரங்கில் சிகரெட் புகையை சுவாசிப்பதுதான் பெரிய பிரச்னை. ஆனா பழகிட்டதாலே இதுக்குக் கூட 'இம்யூன்' ஆயிட்டோம்னு நினைக்கிறேன்" என்கிறார்.

சிங்கப்பூரில் நல்ல வரவேற்பு, சீரான கொழுத்த வருமானம். இதெல்லாம் சரி, இந்தியாவில் வசிக்கும் 'காடாறு மாதத்தில்' இசை நிகழ்ச்சிகளுக்கான வாய்ப்புகள் எப்படி?

எறும்பார் கடிக்கிறார்...

"தர்மம் ஒருநாள் வென்றே தீரும்!"

- கைது செய்யப்பட்டபோது முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அறிக்கை.



"ஃப்ராங்கா சொன்னா குறைவுதான். பாதி நாட்கள் வெளிநாடுன்றதாலே பலர் மறந்துட்டாங்க. தவிர இங்கே தங்கும் காலமென்பது கல்யாணங்கள் அவ்வளவா நடக்காத 'வீன் சீஸன்'" என்று பதில் கிடைக்கிறது!

மெல்லிசைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பாடகிகளின் டிமாண்டும் அதிகமாகிறதாம்.

பொதுவாக மெல்லிசைக் குழுவில் அதிக ஊதியம் பெறுவது கீ-போர்ட் இசைப்பவர் (சுமார் ரூ. 750/-. அடுத்து பாடகிகள் (ரூ. 400/-).

நேர்மைக்கு இந்த ஆபத்தா?

"**ஊ**ழல் செய்த அதிகாரிகளை எந்த விதத்திலும் பாதுகாக்கக் கூடாது. இதனால் சில காலம் நிர்வாகத்தில் இடைஞ்சல்கள் வந்தாலும் பரவா யில்லை" என்று முதல்வர் உறுதியாகச் சொல்லி விட்டதால், உமாசங்கர் உட்பட இளம் அதிகாரிகளுக்கு ஏக சந் தோஷம். மிகவும் உற்சாகமாக பல அதிகாரிகளின் ஊழல் விஷயங்களைக் குடைந்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் உமாசங்கரை அந்த துறையில் இருந்து விரட்ட, சில சீனியர் அதிகாரிகளால் தொடர்ந்து சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அதற் காக அந்த அதிகாரிகள் தங்களுக்கு வேண்டிய பத்திரிகையாளர்களை பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதா வது, உமாசங்கரை ஹீரோவாக சித்திரித் துப் பத்திரிகைகளில் செய்திகள் வரச் செய்கிறார்கள். அந்தச் செய்திகளால் முதல்வர் எரிச்சல் அடைந்து உமாசங் கரை வேறு துறைக்கு மாற்றிவிட மாட்டாரா என்கிற நப்பாசை!

இதற்கு உதாரணமாக அண்மையில் ஒரு பத்திரிகையில் உமாசங்கரை பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டதைச் சொல் கிறார்கள். அக் கட்டுரையில் உமாசங்கர் சொன்னதாக வெளியான எந்த ஒரு விஷயம் பற்றியும் அவர் பேசவேயில் லையாம். அந்த பத்திரிகையாளர் உமா சங்கரை வெறுமனே சந்தித்ததோடு சரியாம். இதனால் மிகவும் கடுப்பாகி இருக்கிறாராம் உமாசங்கர்.

"பழைய ஆட்சியில் கூட நிம்மதி யாக என்னால் தூங்க முடிந்தது. ஆனால் இப்பொழுது என்னைக் கதாநாயகனாக வைத்துக் கட்டப்படும் செய்திகளை நினைத்தால் கவலையாக இருக்கிறது" என்று சக அதிகாரிகளிடம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாராம் உமாசங்கர்.

ஆனாலும், "முதல்வர் மிகவும் நம் பிக்கையோடு உமாசங்கரை விஜிலன்ஸ் துறையில் நியமித்திருக்கிறார். ஊழல் பற்றிய பல புகார்கள் நேரடியாகவே முதல்வர் அலுவலகத்திலிருந்து விசா ரிக்க வேண்டி உமாசங்கருக்கு வருகின் றன. இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு எந்த ஒரு மாநிலத்திலும் இவ்வளவு பெரிய விசாரணையில் விஜிலன்ஸ் துறை இறங்கியதில்லை. அதேபோல் இப்படி ஏகப்பட்ட ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரி களும் மாட்டிக் கொண்டதில்லை" என் கிறார்கள்.

— ப்ரியன்

"என்னைப் பொறுத்தவரை எந்தப் பிரச் னையுமில்லை. கௌரவமாகவே நடத்தப்பட்டு இறேன்" என்கிறார் உமா ரமணன்.

"சபாக்களில் பாடினால் மரியாதையாகப் பார்ப்பார்கள். தெருவோரக் கச்சேரி என்றால், கொஞ்சம் அலட்சியமான பார்வைகளையும் சந்திக்க வேண்டி வரும். சென்னையைவிட வெளியூர்களில் -- முக்கியமாக கிராமங்களில் அதிக கௌரவத்துடன் நடத்துவார்கள். "சோளி கே பீச்சே" போன்ற பாடல்களைப் பாட சங்கடமாகத்தான் இருக்கும். என்ன செய்ய? அவை பாப்புலர் ஆயிடுச்சே. ஆனா ஒண்ணு, எந்தத் துறையிலேதான் பெண் களுக்குப் பிரச்னை இல்லே?" என்கிறார் லக்ஷ்மண் குழுவிலும், அதற்குப் பிறகு அவரது மனைவியாகவும் இடம் பிடித்த மாலதி.

இவை மட்டுமல்ல. இரவு பத்துப் பதி னோரு மணிக்குத்தான் வீடு திரும்ப முடியும் என்பதும் குரல்வளம் உள்ள பெண்களில் பலரைத் தயங்க வைக்கிறது. "எங்களுடைய 'லேடீஸ் ஸ்பெஷல்' நிகழ்ச்சிக்காக பெண் இசைக்கலைஞர்களைத் தேடினேன். அற்புத மான கலைஞர்கள் இருந்தாங்க. பியானோவில் நான்காவது கிரேடு முடிப்பதே கஷ்டம். ஆனால் ஏழாவது கிரேடு பாஸ் செய்த பெண் மணியைக் கூட சந்திக்க முடிந்தது. ஆனாலும் 'மேடையா? வேணாமே', 'அப்பா ஒத்துக்க மாட்டார்' என்றெல்லாம் சொல்லி மறுத்துட் டாங்க" என்றார் லக்ஷ்மண்.

கைக்கும், வாய்க்குமாக வாழும் மெல் லிசைக் குழுக்களுக்கும் குறைவில்லை. குறைந்த இசைக்கருவிகளைக் கொண்டு (அதுவும் வாட கைக்கு) எப்படி நல்ல ரிசல்ட்டைக் கொடுப்ப தாம் என்று ஆதங்கப்படுகிறார்கள். சில குறிப் பிட்ட இசைக்கருவிகள் இல்லாத குறையும் தங்கள் மெல்லிசை 'வல்லிசை'யாக (காது ஜவ்வு கிழியும் டெஸிபலில்) மாற்றப்படக் காரணமா கிறது என்று ஒத்துக் கொள்கிறார்கள்.

வருங்காலத்தில் மெல்லிசைக் குழுக்களின் நிலை எப்படி இருக்கும்?

"நாகரிகம் என்ற பெயரில் பெண்கள் அணி யும் ஜாக்கெட்டின் கை ஏறுவதும் இறங்குவது மாக இருப்பதில்லையா? அது போல எங்களைப் போன்ற குழுக்களின் பெருமையையும் உணரும் காலம் மீண்டும் வரும்" என்கிறார் கண்ணன்.

"கல்யாணங்கள் இருக்கும்வரை மெல் லிசைக் கச்சேரிகளுக்குக் குறைவிருக்காது" என்று ஆனந்த் அடித்துச் சொல்கிறார்.

— ஜி.எஸ்.எஸ்.

அட்டையில் 'லக்ஷ்மண் சுருதி' குழுவினர்; வண்ணப்படம் : **யோகா.**



கிருஷ்ணருக்கு



• கிருஷ்ணர்

"அம்மா, பகவான் கிருஷ்ணருக்கு மீசை இருந்ததா, இல்லையா?"

கிருஷ்ணருக்காவது மீசையாவது! நமக்குத் தெரிந்த கிருஷ்ணரெல்லாம் மழமழவென்று என்.டி.ஆர். போல மீசை இல்லாமல் இருந்தவர்தானே. அதுவும் நம் கடவுள்களில் எத்தனை பேருக்கு மீசை இருக்கிறது? நம்மில் யார் இந்த மாதிரி கேள்விகளைக் கேட்பார்கள்?

ஆனால் சம்ஹிதாவிற்கு இந்தச் சந்தேகம் வந்தது.

சம்ஹிதா?

"ஒரு குழந்தையின் பார்வையில் மகாபாரதம்" என்கிற ஆங்கிலப் புத்தகத்தைச் சமீபத்தில் எழுதியவள்தான் சம்ஹிதா ஆர்னி.

"சிறிய வயதில் புத்தகம் வெளியிடுவது ஒன்றும் இப்போது பெரிய காரியமில்லைதான். ஆனால் காலம் கடந்து நிற்கும் ஒரு புராணத்தை, 'தனது - பார்வையில்' என்று எழுத யாராக இருந்தாலும், தைரியம் தேவைதான்" என்று கூறுகிறார் இப்புத்தகத்தை வெளியிட்டிருக்கும் தாரா பதிப்பகத்தின் உரிமையாளர்களில் ஒருவரான வா. கீதா.

"சம்ஹிதாவிற்கு நான்கு வயதாக இருக்கும் போது, நாங்கள் கராச்சியில் இருந்தோம். பொழுதுபோக்காக சம்ஹிதாவிற்கு நான் மகாபாரதக் கதைகளை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன்" எனத் துவங்குகிறார் சம்ஹிதாவின் தாய் காஞ்சனா ஆர்னி. சம்ஹிதாவின் தந்தை கராச்சி தூதரகத்தில் வெளியுறவு அதிகாரியாகச் செயல்பட்டதால், மகாபாரதத்தின் எல்லா படைப்பாளர்களின் புத்தகமும் சுலபமாகவே கிடைத்து விட்டன!

"நான் முதன் முதலில் ராஜாஜியின் மகாபாரதக் கதைத்தான் தொடங்கினேன். அதிலிருந்து நான் பல்வேறு ஆசிரியர்களின் மகாபாரதக் கதைகளைப் படிக்கத் தொடங்கி விட்டேன்" என்று கூறுகிறார் சம்ஹிதா.

"மகாபாரதத்தை எழுத வேண்டும் என்கிற ஆவலே என் அம்மா மூலமும், என் பாட்டி மூலமும்தான் ஏற்பட்டது. மகாபாரதத்தின் ஒவ்வொரு கதையையும் ஒவ்வொரு நாள் சொல்வார்கள். கதை முடிந்தவுடன் என்னை மீண்டும் அப்படியே சொல்லச் சொல்வார்கள். நான் சொல்வது மட்டுமல்லாமல், கிடைக்கும் எந்தத் தாள்களிலும் எழுத ஆரம்பித்து விட்டேன்" என்று கூறும் சம்ஹிதா, "அப்போதெல்லாம் புத்தகமாக வெளியிடும் நோக்கமேயில்லை" என்கிறார்.

"அவள் எழுதத் தொடங்கியவுடன் வீடு முழுவதும் தாள்கள், டைரிகள், தபால் அட்டைகள் என்று இரைய ஆரம்பித்து விட்டன. அப்போது தான் நான் சம்ஹிதா எழுதியதை ஏன் ஒரு புத்தகமாகப் போடக்கூடாது? என எண்ண ஆரம்பித்தேன். அதன் முடிவில்தான் சென்னை தாரா பதிப்பகத் தின் கீதா வுல்ஃப் மற்றும் வா. கீதாவுடனான தொடர்பு" - காஞ்சனா.

"சத்யவதியின் பிறப்பிலிருந்து, பாண்டவர்களின் வனவாசம் வரை" சம்ஹிதா ஏற்கெனவே எழுதி வைத்திருந்தாள். அதுவரை எழுதியிருந்ததை அப்படியே முதல் பாகமாகவும், மீதியை இரண்டாம் பாகமாகவும் எழுதினாள்"



• சம்ஹிதா

மீசை உண்டா?

சிந்திக்க வைக்கிறாள் ஒரு சிறுமி!

* பகாசுரன்



என்கிறார் கீதா வுல்ஃப்.

ஒரு மிகப் பெரிய புராணத்தைத் தன் பார்வையில் என்று எழுதக் கூடிய மனத்திடம் இருக்கும் சம்ஹிதா மற்ற குழந்தைகளைப் போலவே பழகுகிறாள்.

"அதிக ஆற்றலும் திறனும் கொண்ட சாதாரணச் சிறுமி தான் சம்ஹிதா'' என்று கீதா கூறுவதைப் போலவே, இந்த வயது ஒத்த சிறுமிகளின் ஆசைகளும் விருப்பங்களும் சம்ஹிதாவிடமும் உள்ளன.

''எனக்கு ஸ்கூல் பிடிக்கவேயில்லை. இங்கு இருக்கும் சட்டங்களும், பாடத் திட்டங்களும் என்னை ரொம்பக் கட்டிப் போடுகின்றன. பள்ளிகளில் என்னால் சுதந்திரமாக இருக்கவும் முடிவதில்லை'' என்னும் சம்ஹிதா, எல்லாவற்றையும் விட அதிகமாக வெறுப்பது டிராயிங் வகுப்பு தானாம்!

''படம் வரைந்தவுடன், நாம் வரையும் படத்திற்கு மதிப்பெண் போடுகிறார்கள். இது எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. எனக்கு படமே போடத் தெரியாது என்பதல்ல. இந்தப் படங்களை ஜட்ஜ் செய்வதுதான் எனக்கு வெறுப்பாக இருக்கிறது'' என்கிறாள்.

தனது நூலுக்குத் தானே படங்களும் வரைந்திருக்கிறாள் இவள்.

"சம்ஹிதா, படங்களை வெறுமனே மேம்போக்காக வரைந்து விடவில்லை. அதில் உள்ள மிகவும் நுணுக்கமான விஷயங்களையும் பார்த்துப் பார்த்து வரைந்துள்ளாள். அதில் ஒன்றுதான், கிருஷ்ணர் மீசையுடன் காட்சி அளிப்பது. "இதற்காகவே சென்னை பார்த்தசாரதி கோவில் உட்பட பல கோயில்களை ஏறி இறங்கினாள்" என்கிறார் வா. கீதா.

எழுத வேண்டும் என்கிற முடிவு எடுத்தவுடன், கமலா சுப்ரமணியத்தின் மகாபாரத கதை முதல் இன்றைய பீட்டர் புருக்ஸின் மகாபாரத நாடகம் வரை எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் படித்துத் தீர்த்திருக்கிறாள் இந்தப் பெண்.

அப்படி என்னதான் சம்ஹிதாவின் புத்தகம் மாறுபட்டு நிற்கும் வகையில் உள்ளது?

''பதிப்பகத்தார் என்கிற வகையில் நாங்கள் சம்ஹிதாவின் எழுத்தில் உள்ள ஜீவனையும், சக்தியையும் கண்டு கொள்ள முடிந்தது. மற்ற எழுத்தாளர்களைப் போலவே சம்ஹிதாவும் மகாபாரதக் கதையில் அவளுக்குத் தோன்றிய பாணியிலும், அவளது பார்வையில் எது சரி எது தவறு என்றும் எழுதியுள்ளாள். இன்றைய குழந்தைச் சமுதாயம் மகாபாரதம் போன்ற புராணக் கதைகளை எளிதில் புரிந்து கொள்ள, கதைகளின் நடுவே இந்நாளைய பொருட்களான மின்விசிறியும், புத்தக ஷெல்ஃபும் வருகிறது. இதை ஒரு புதுமை என்கிற வகையில் நாங்களும் ஆதரித்தோம்'' என்றும் கூறுகிறார் கீதா.

சம்ஹிதாவின் மகாபாரதத்தில் கர்ணன் அவ்வளவு ஒன்றும் கெட்டவனில்லை. ஏகலைவன் விரல் இழப்பும், அபிமன்யுவின் மரணமும் ஒரு குழந்தை மனத்திற்கு உண்டான பச்சாதாபத்துடன் கையாளப்பட்டிருக்கின்றன. அதே சமயம், திரௌபதி மிகுந்த மனத்திடம் படைத்தவளாக சித்திரிக்கப்படும்போது

("துகிலுரியும் போது கடவுளை பிரார்த்திக்க யாருக்கு மனசு வரும்" என்கிறார் சம்ஹிதா.) பெண்களின் சமஉரிமைப் போராட்டத்திற்குக் குரல் கொடுக்கும் பக்குவம் தெரிகிறது.

சம்ஹிதா மகாபாரதக் கதையை அப்படியே எழுத மட்டுமில்லை. பாத்திரங்களின் செயல்களையும் எடைபோட்டிருக்கிறாள். துரோணரின் மரணத்திற்கு தர்மரைச் சாடுகிறாள்.

"வியாசர் காலத்திலிருந்தே, அந்தந்த ஆசிரியர்கள் அவர்களின் பார்வையில்தான் மகாபாரதத்தை எழுதியிருக்கிறார்கள். அதே போலத்தான் நானும் எழுதியுள்ளேன். இதனால்தான் மகாபாரதம், அன்றிலிருந்து இன்று வரை கேட்க, படிக்க மனத்திற்குப் பிடிக்கிறது. இல்லையென்றால், ஒரே கதையை யார் மீண்டும் மீண்டும் இவ்வளவு காலமாகப் படிக்க முடியும்?" என்று நம்மைக் கேட்கும் அளவிற்கு சம்ஹிதாவிற்கு முதிர்ச்சி உள்ளது.

இதெல்லாம் சரி. குழந்தையாக இருக்கும் போது ராமாயணமும் சொல்லியிருப்பார்களே. ஏன் ராமாயணத்தைப் பற்றி எழுதவில்லை. எதற்காக மகாபாரதம்?

"ராமாயணத்தில் எல்லோரும் ரொம்பவும் ஆதர்ச புருஷர்களாகவும், நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். மகாபாரதத்தில்தான் கடவுள் கூட மனிதனாக இருக்கிறார். மனிதனின் எல்லா குறைபாடுகளும், எல்லோருக்கும் இதில் உண்டு. மேலும் மகாபாரதத்தில்தான் கெட்டவை அதிகம்!" என்று ஆச்சரியப்படுத்துகிறாள் சம்ஹிதா.

அதனால்தான் கடா மீசையுடன் கிருஷ்ணரையும், புத்தக அட்டைப்படத்தில் பகாசுரனையும் போட்டிருக்கிறாள் போலும்!

மகாபாரதம் எழுதும் போது, நம்மூர் டீ.வியில் ஒளிபரப்பிய மகாபாரதம் பார்ப்பதுண்டா என்றதும் உடனே பொரிந்து தள்ள ஆரம்பித்து விட்டாள்.

"எக்கச்சக்க சினிமாத்தனம்தான் என்னை அதிலிருந்து விலக்கியது. நாளாக நாளாக சகிக்க முடியாமல் பார்ப்பதை நிறுத்தி விட்டேன்" என்கிறாள் இந்தப் பன்னிரெண்டு வயதுப் பெண்!

இந்தப் பெண்ணின் பார்வையைப் பலரால் ஒப்புக் கொள்ள முடியாமல் இருந்தாலும் இந்த வயதில் இப்படியொரு பார்வை வியப்பூட்டத்தான் செய்கிறது.

- ராஜு

தேசப் பிதாவை அடிகள் ஆக்கியவர்...



தேசப்பிதா காந்திஜியை முதன் முதலாக 'காந்தியடிகள்' என்று குறிப்பிட்டு பத்திரிகைகளில் எழுதியவர் திரு.வி.க. அவர்கள் தான். சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தியடிகளைப் பற்றி படித்த போது பாபுஜி அவர்களை 'காந்தி அடிகள்' என்று குறிப்பிட வேண்டும் என தமக்குத் தோன்றியதாகப் பத்திரிகைகளில் குறிப்பிட்டிருந்தார்.


ஆதாரம் : சுதந்திரச் சுவடுகள்
தகவல்: எஸ்.எஸ். பூங்கதிர்

ஆப்பிரிக்க நாடான டான்ஸானியாவில் ஒரு கிராமப் பள்ளியில் வகுப்பு ஆசிரியரின் பேச்சைக் கேட்ட சில மாணவர்கள் சிரிக்க ஆரம்பித்தனர். அது மற்ற மாணவர்களுக்கும் தொற்றிக் கொள்ள வகுப்பறையே சிரித்தது. அது அப்படியே பரவி பள்ளிக்கூடமே சிரிக்க ஆரம்பித்து, என்ன காரணம் என்று தெரியாமலேயே! நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர பள்ளி நிர்வாகிகள் விடுமுறை அறிவித்து மாணவர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டனர். மாணவர்கள் சிரித்தபடியே தத்தம் வீடு திரும்ப, அவர்களின் பெற்றோர்களும் சிரிக்க, அந்தக் கிராமமே சிரிப்பு அலையில் மூழ்கி விட்டது. அதீத சிரிப்பால் சோர்ந்து, நாவறண்டு போன அந்த கிராம மக்களை மீட்க செஞ்சிலுவை சங்கத்தினர் உதவ வேண்டியிருந்தது!

ஆதாரம்: 'ஹிந்து'
தகவல் : என். கே. பாலசுப்ரமணியன்

பக்திமான் ஒருவர் கனவுகண்டார். அது அவருக்கு அதிர்ச்சி அளித்தது. அரசன் சொர்க்கத்திலும் துறவி நரகத்திலும் இருப்பது அவரது கனவில் புலப்பட்டது. இயற்கைக்கு முரண்பட்ட இந்நிலை அவருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. உடனே அவர் ஒரு மகானிடம் நடந்ததைச் சொல்லி விளக்கம் கேட்டார். அதற்கு மகான் சொன்னார், "உண்மைதான் அப்பா. துறவியிடம் காட்டிய அன்புக்காக அரசனுக்கு சொர்க்கம் வழங்கப்பட்டது. அரசனிடம் தொடர்பு கொண்டிருந்தமைக்காக துறவிக்கு நரகம் வழங்கப்பட்டது.

– ஆர்.ஆர்.பூபதி





1996 அக்டோபர் 13
தாது புரட்டாசி 27
மலர் : 55
இதழ் : 11

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



முழுமை பெறட்டும் தெலுங்கு கங்கை!

சென்னை நகரின் நீண்ட நாளைய கனவு நனவாகியிருக்கிறது - தெலுங்கு கங்கைத் திட்டம் நிறைவேறியதால்.

உள்ளாட்சித் தேர்தல் சமயத்தில் இத் திட்டம் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டதாகக் குற்றம்சாட்டுவது அர்த்தமற்றது. பல்லாண்டுகளுக்கு முன்பே தொடங்கிய பணி, இன்று நிறைவேறியிருக்கிறது; அவ்வளவே.


எலியட் என்கிற ஆங்கிலேய அதிகாரிதான் இந்தத் திட்டத்தை முதன் முதலில் தீர்க்கதரிசனத்துடன் தீட்டினார் என்பது புதிய செய்தி. தமது முந்தைய ஆட்சிக் காலத்தில், எலியட்டின் இத் திட்டத்தை மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் கருணாநிதி.

பின்னர், எம்.ஜி.ஆர். காலத்தில் இந்திரா காந்தி தலைமையில், ஆந்திர முதல்வர் என்.டி.ஆரின் ஒத்துழைப்புடன் திட்ட ஒப்பந்தம் கையெழுத்தாகி, பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பிறகு ஜெயலலிதா ஆட்சியிலும் பணிகள் தொடர்ந்து, இப்போது மீண்டும் கருணாநிதி தலைமையில், கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இத்திட்டத்தை, 'எம்.ஜி.ஆர். ஆசி பெற்ற திட்டம்', 'ஜெயலலிதா வளர்த்த திட்டம்' என்று அரசியல் காரணங்களுக்காகக் கைவிட்டு விடாமல், ஆட்சிக்கு வந்ததுமே சுறுசுறுப்பாக இயங்கியுள்ளார் முதல்வர்.

பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகனை முடுக்கிவிட்டு, திட்டத்தின் இறுதிக் கட்டத்தை நிறைவேற்றச் செய்து, சென்னைக் குழாய்களில் கிருஷ்ணா நீரை வரவழைத்தாகி விட்டது.

இதற்காக தி.மு.க. அரசைப் பாராட்டுவதுடன் வீராணம் திட்டத்தைக் கைவிட்டதற்காகவும் தனியாகப்



பாராட்ட வேண்டும். தங்களால் ஆரம்பிக்கப்பட்டது என்றபோதிலும், வீராணம் நடைமுறைக்குகந்ததல்ல என்ற நிபுணர் அறிக்கையை ஏற்று நடக்கும் பக்குவம் இந்த ஆட்சிக்கு இருந்திருக்கிறது.

தண்ணீர் வரத்துப் பாதையில் வெடிப்புகள் ஏற்பட்டு, திட்டம் துவங்கிய ஓரிரு நாட்களுக்குள்ளாகவே பிரச்னை கிளம்பியிருக்கிறது. இதைப் போன்ற பெரிய திட்டங்களின் ஆரம்ப நிலையில் சில சில்லறைப் பிரச்னைகள் எழுவதைத் தவிர்க்க முடியாது.

பாதையில் ஏற்பட்டுள்ள வெடிப்பு ஆந்திர எல்லைக்குட்பட்டது என்பதால் ஆந்திர அரசாங்கமே அதற்குப் பொறுப்பாகிறது. செப்பனிடும் பணிகளை உடனே மேற்கொண்டு, பிரச்னையைச் சீர்செய்வது பெரிய காரியமில்லை.

உண்மையிலேயே பெரிய பிரச்னை, பருவ மழைக்காலத்தில் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய உபரி நீரை எவ்வாறு சேமித்து வைத்துக் கொள்வது என்பதுதான்.

அதற்கு உடனடியாக, இரண்டு பெரிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த நூறு கோடி திட்டம் நிறைவேறும் போது, அங்குள்ள மக்களை அப்புறப்படுத்தி, நஷ்டஈடு கொடுத்து, வேறு இடத்தில் புனர்வாழ்வு அமைத்துத் தர வேண்டும்.


வெகு விரைவில் இதை நிறைவேற்றாவிட்டால், தெலுங்கு - கங்கை மூலம் கிடைக்கக்கூடிய உபரி நீர் வீணே கடலில் கலந்து, திட்டத்தில் முதலீடான கணிசமான பணமும் விரயமாகும்.

ஃபாரூக் : கத்தி மேல் நடக்கும் வித்தை!

காஷ்மீர் தேர்தல்கள் அமைதியாக நடந்து முடிந்தது, தேர்தல் கமிஷனுக்கு மட்டுமல்ல, ஜனநாயகத் துக்கே கிடைத்த பெரிய வெற்றி. அந்த வெற்றிக்கு ஈடானது, தேசிய மாநாடு கட்சிக்கு அத் தேர்தலில் கிடைத்துள்ள அமோக வெற்றி.

வெற்றி பெற்ற கையோடு அக்கட்சியின் தலைவர் ஃபாரூக் அப்துல்லா, வெளியிட்டுள்ள அறிவிப்பு களும் நம்பிக்கையூட்டுவனவாகவே அமைந்திருக்கின்றன.

மாநிலத்தில் முழு அமைதி திரும்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்; பிரிவினை



வாதமும் பயங்கரவாதிகளின் ஊடுருவலும் அனுமதிக்கப்பட மாட்டாது; தீவிரவாத கோஷ்டிகளுடன் பேச்சு வார்த்தைகளுக்குத் தயார்; வளர்ச்சிப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றெல்லாம் பேசியிருக்கிறார் ஃபாரூக் அப்துல்லா.

நிர்வாக ரீதியான இந்த அறிவிப்புகள் தவிர, அரசியல் ரீதியாகவும் சாதுர்யமான அறிவிப்புகளை அவர் வெளியிட்டிருக்கிறார். மத்திய அரசில் அங்கம் வகிக்க முன்வந்ததுடன் அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட தமது கட்சிப் பிரதிநிதியின் பெயரையும் வெளியிட்டிருக்கிறார்.

முதல்வர் ஃபாரூக் அப்துல்லாவை எதிர்நோக்கியுள்ள பணி எளிதானதல்ல. பாகிஸ்தான் எல்லையிலுள்ள மாநிலமான காஷ்மீரில் இன்னமும் ராணுவத்தைத் தயார் நிலையில் நிறுத்தி வைத்திருக்க வேண்டியுள்ளது. ராணுவம் நிரந்தரமாகக் காவல் புரியும் ஒரு மாநிலத்துக்கு, அதன் காரணமாகவே பிரச்னைகள் (மனித உரிமை மீறல்) தொடர்ந்தவண்ணம் இருக்கும். எனினும் ராணுவத்தை வெளியேற்றக்கூடிய முழு அமைதிச் சூழல் இன்னமும் உருவாகவில்லை. மாநிலத்துக்கு மேலும் கூடுதலான அதிகாரங்களைக் கோருவது ஃபாரூக் அப்துல்லாவின் கொள்கை என்னும்போது, ராணுவம் யாருக்குக் கட்டுப்படுவது....? மத்திய அரசுக்கா? காஷ்மீர் அரசுக்கா? என்ற பிரச்னை எழும். முதல்வரின் நிர்வாகப் பொறுப்பு, கத்தி மேல் நடக்கும் வித்தையாக இருக்கும்.

தேர்தல் நல்லவிதமாக நடந்ததில் அமெரிக்காவிடம் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானிடம் 'ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்துமாறு' அமெரிக்கா கேட்டுக் கொண்டிருக்கிறது. 'காஷ்மீர் தேர்தல் வெறும் கண்துடைப்பு' என்று ஒட்டுமொத்தமாக வர்ணிப்பது தவறு; ஏற்க முடியாத கருத்து' என்றும் அமெரிக்கா சொல்லியிருக்கிறது. இதனால் சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பும் காஷ்மீரின் நிலையும் உயர்ந்துள்ளன. இதுவே ஜம்மு - காஷ்மீரின் புதிய முதல்வருக்கு உற்சாகமளிக்கக்கூடிய டானிக்.

காஷ்மீரத்திலுள்ள தீவிரவாதிகளையும் பிரிவினைவாதிகளையும், தற்போதைய தேர்தலின் வெற்றிச் சாதனைகளை விளக்கிச் சொல்லியும் அதற்கு மக்களின் ஆதரவை எடுத்துக்காட்டியும் ஜனநாயகப் பாதைக்குத் திருப்ப, ஃபாரூக் அப்துல்லா முயற்சி செய்ய வேண்டும். இதுவே அவரை எதிர்நோக்கும் அதிமுக்கியமான பணி.

24.7.94 கல்கி இதழில் வெளியான சந்திரலேகா பேட்டியி லிருந்து சில பகுதிகள்....

"உங்கள் அரசியல் பிரவே சத்துக்கு முக்கியக் காரணமான 'ஆஸிட் வீச்சு'க்கு ஜெ.தான் கார ணம் என்பீர்களா?

"ஆமாம்! என் மீது ஆஸிட் வீசப்பட்ட சம்பவத்துக்குப் பின் னால் இருப்பவர் ஜெயலலிதா தான். இதன் காரணமாகத்தான் விசாரணை ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. கை யோடு பிடித்துக் கொடுத்த மூன்று குற்றவாளிகளை ஜாமீனில் விட்டு விட, அவர்கள் காணாமல் போய் விட்டார்கள். சுவாமியின் செல் வாக்கால் பம்பாய் போலீஸ் மூலம் பிடிபட்ட சர்லா என்பவனின் வாயை அடைக்கும் முயற்சியும் நடந்தது. இந்த ஆட்சியில் எனக்கு நீதி கிடைக்காது. அதனால்தான் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறேன். ஏழுமலை கொலை விவகாரத்தில் ஜெயலலிதா, சட்டமன்றத்தில் என்ன சொன்னார்? "இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்படாத தாலும், கொலையுண்டவரின் வாரிசுகள், மாநில போலீஸின் விசாரணையே போதும் என்று சொல்லி விட்டதாலும், சி.பி.ஐ. விசாரணை கிடையாது" என்று சபையில் பதில் சொல்லி விட்டார். ஆனால் என் விஷயத்தில் குற்றவாளிகள் இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்டவர்கள். போதாததற்கு, பாதிக்கப்பட்ட நானே, மாநில போலீஸின் மேல் நம்பிக்கை யில்லாமல் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறேன். ஜெ.யின் வாதப் படி பார்த்தால் என் விஷயத்துக்கு சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டுமே! ஏன் தயங்குகிறார்? தன் சதி அம்பல மாகி விடும் என்றுதானே?"

"உங்களைத் தனிப்பட்ட முறையில் பிடிக்காதவர்கள் செய்த சதி என்று சொல்லப்படுவது பற்றி..."

"எனக்குத் தனிப்பட்ட முறையில் விரோதிகள் யாரும் கிடையாது. சரி ஸார், உங்க சந்தேகம் அப்படியே இருந்தா லும், நடுநிலையான ஒரு விசாரணையில் விஷயம் வெளிப் படட்டுமே! அதற்கும் நான் தயார்தான். சி.பி.ஐ. விசாரணை வைக்க ஜெயலலிதா தயாரா?"

"உங்கள் மீது ஆஸிட் வீச ஜெ. ஏற்பாடு செய்ய வேண் டிய அவசியம் என்ன?"

"ஸ்பிக் நிறுவனத்தில், உள்ள தமிழக அரசின் பங்குகளை அடிமாட்டு விலைக்கு விற்க ஜெயலலிதா முயன்றதை டிட்கோ தலைவராக இருந்த நான் தடுத்தேன். "எனக்கு முட்டுக்கட்டை போட இவன் யார்?" என்று அவருக்குக் கோபம். என்போன்று நேர்மையாகச் செயல்படும் அதிகாரி களுக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றுதான் ஆஸிட் வீச்சுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இப்போது அதிகார வர்க்கம் இரண்டாகப் பிரிந்து நிற்கிறது. மனசாட்சிப்படி செயல்படும் நல்லவர்கள் மௌன சாமிகளாகிவிட, அ.தி.மு.க. ஆட்களோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிக்க ஒரு கூட்டம் உருவாகி விட்டது. இந்தக் கூட்டத்தைச் சேர்ந்

சந்திரலேகா பேசுகிறார்!



தவர்தான் இன்பசாகரன். பாண்டா வீட்டில் நடந்த சம்பவம், கொள்ளையில் பங்குக்காக நடந்த மோதலின் விளைவே!"

"ஒருகாலகட்டத்தில், நீங்கள் ஜெ.யுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தீர் கள்...."

"1982-ல் ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். மூலம் அர சியலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அப்போது கடலூரில் நான் மாவட்ட ஆட்சியாளராக இருந் தேன். எம்.ஜி.ஆர்.தான் எனக்கு அவரை அறி முகம் செய்து வைத்தார். எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு மிக நல்ல முறையில் பழகினார் அவர். தலைக் கனம் ஏதும் அப்போது கிடையாது. அரசாங்க செயல்முறைகள் பற்றி அவருக்கு விளக்கியிருக்கிறேன். பதவிக்கு வந்த பிறகு எல்லாமே மாறிவிட்டது."

ஜெ. பக்கம்!



அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

உங்கள் 29.9.1996 தேதியிட்ட கல்கி இதழில் வெளிவந்துள்ள திருமதி. சாரதா விஸ்வநாதன் அவர்களின் பேட்டியைப் படித்தேன். உண்மைக்குப் புறம்பான சில தகவல்களும், மனதைப் புண்படுத்தும் சில கருத்துக்களும் அதில் கூறப்பட்டுள்ளன. இவை என்னைப் பற்றி ஒரு தவறான அபிப்ராயத்தை உங்கள் வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதனால் என் மறுப்பினை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1. நான் உறவினர் அல்லாத யாரையும் ஆண்ட்டி, அங்கிள், மாமி, மாமா என்று கூறி அழைக்கும் வழக்கம் உள்ளவளல்ல; திரு, திருமதி என்ற அடைமொழியோடுதான் நான் யாரையும் அழைப்பது வழக்கம். நிச்சயமாக திருமதி சாரதா விஸ்வநாதனை 'ஆண்ட்டி' என்று நான் அழைத்தது கிடையாது. மேலும், திருமதி சாரதா விஸ்வநாதனை நான் சந்தித்ததே கிடையாது என்பது தான் உண்மை.

2. "உங்கள் பொண்ணை ஐ.ஏ.எஸ். படிக்க வச்சிட்டீங்க... எங்க அம்மா பாருங்க... என்னை நடிகையாக உருவாக்கிட்டாங்க" என்று நான் சொன்னதாக அவர் பேட்டி அளித்திருப்பது 100% கற்பனையே! அன்று, மேற்படிப்பு படித்து 'நானி பால்கிவாலா' போல ஒரு தலைசிறந்த வக்கீலாக வேண்டும் என்பதுதான் என் ஆசையாக இருந்தது, உண்மை. ஆனால் நடிகையான பிறகு, திரைப்படத் துறையில் ஒரு academic interest உடன் ஈடுபட்டு, சினிமாத்துறை பற்றிய அனைத்து விஷயங்களிலும் ஆர்வம் செலுத்தி, நிறைய படித்து என் அறிவுப் பசியை தீர்த்துக் கொண்டேன். அதற்குப் பின்னர், என்றும் மற்ற தொழில்களைப் பார்த்து நான் ஏங்கியதுமில்லை, பொறாமைப்பட்டதுமில்லை.

3. "கர்லா தன் வாக்குமூலத்தில் தெளிவாகவே ஆசிட் வீசச் சொன்னவர் ஜெயலலிதாதான் என்று சொல்லியிருக்கிறான் என்று சொல்கிறார்கள்" என்று அவர் கூறுவதன் மூலம் அந்த அசம்பாவிதத்திற்கும், எனக்கும் தொடர்பு இருப்பது போல் கூறியிருக்கிறார். அந்தச் சம்பவம் மிகவும் காட்டுமிராண்டித்தனமான ஒரு செயல் என்று எண்ணுபவள் நான். உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி, மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்குட்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி இப்படி சிறுபிள்ளைத்தனமாக கருத்துத் தெரிவித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அந்த கேவலமான -- கோழைத்தனமான செயலைச் செய்தவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்தாலும் அதற்கான தெய்வத்தின் தண்டனையையாவது அனுபவித்தே தீருவார்கள்.

4. மருத்துவமனையில் போய்ப் பார்க்கவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளார். சம்பவம் நடப்பதற்கு 2 வாரங்கட்கு முன் அவரை பதவி மாற்றம் செய்திருந்த நான், வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச விரும்பவில்லை என்பதே அதற்குக் காரணம்.

5. "யாரும் அவரை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்க வில்லை, இன்று தாமாகவே வந்து ஆதரிக்கிறார்" என்று அவர் கூறியிருப்பது, அவர் அறியாமையை எடுத்துக் காட்டுகிறது. குடும்ப அரசியலை எதிர்த்து, மு.க. ஸ்டாலினுக்கு எதிராக ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று திரு. சுப்பிரமணியன் சுவாமி விடுத்த அறைகூவலுக்குப் பின்னர், அதற்கு ஆதரவாக பல முன்னணி காங்கிரஸ் தலைவர்களும், மூத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் என்னிடம் வந்து முறையிட்ட பின்னர், அரசியல் சாணக்கியத்தனத்துடன் நான் எடுத்த முடிவு இது. தி.மு.க. – த.மா.கா.வின் சந்தர்ப்பவாத கூட்டணியைத் தோற்கடிக்கவும், ஒரு 'சரியான போட்டி'யை ஏற்படுத்தவும் எடுத்த அரசியல்ரீதியான முடிவு இது. தன் மகள் மேயராவதற்கு எவ்வளவு அருமையான சந்தர்ப்பத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அளித்துள்ளது என்பது புரியாமல் பேசுகிறார் திருமதி சாரதா விஸ்வநாதன். நான் இவர்களிடமிருந்து நன்றியை எதிர்பார்க்க வில்லை. இப்படி சிறுபிள்ளைத்தனமாக பேசாமலாவது இருக்கலாம் அல்லவா? இதுதான்" ஒரு தாய் மகளுக்கு ஆற்றும் நல்லுதவியா?"

திருமதி சாரதா விஸ்வநாதனுக்கு தன் குஞ்சு பொன் குஞ்சாக இருந்துவிட்டுப் போகட்டும்! அதற்காக என்னைப் பற்றி ஏன் அவர் அவதூறு பேச வேண்டும்? கற்பனையில் கதாபாத்திரங்களை சிருஷ்டிக்கும் திருமதி சாரதா விஸ்வநாதன், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள என் போன்றோரைப் பற்றிப் பேசும்போது, தான் நிஜ உலகில் தான் இருக்கிறோம் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

கல்கி ஆசிரியரும், இதுபோன்ற விஷமத்தனமான பேட்டிகளையும், கேள்வி பதில்களையும், வாசகர் கடிதங்களையும் என் பேரைக் களங்கப்படுத்தும் வண்ணம் அடிக்கடி எழுதி வருவது பத்திரிகை தர்மமல்ல என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

ஜெ. ஜெயலலிதா
பொதுச் செயலாளர்,
அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம்,
முன்னாள் தமிழக முதலமைச்சர்.

ஹலோ, சுகமா?

பாதங்களைப் பாதுகாப்போம்!

டிவியிலே அடிக்கடி ஒரு விளம்பரம் பார்த்திருப்பீர்களே... ஒரு அழகான பொண்ணு பரதநாட்டியம் ஆடிட்டே இருந்து, திடீர்னு 'ஐயோ, கால்வலி'ன்னு உட்கார்ந்துடும். அப்புறம் 'ஸோ அண்ட் ஸோ' - ஆயின்மென்ட் பத்தி சொல்வாங்க.

பரதநாட்டியம் ஆடறவங்களுக்குத்தான்னு இல்லை. பொதுவாவே நம்ம கால்கள் இருக்கே, அவை ரொம்ப கவனிக்கப்பட வேண்டிய உறுப்புகள்.

நம்மோட வெயிட் மொத்தத்தையும் தாங்கிக்கிட்டு நடக்குது, ஓடுது, குதிக்குது, எல்லாம் பண்ணுது. ஆனா, நாம அதுக்கு என்ன பண்றோம்?

பாதத்துல வெடிப்பு வந்தாலும், ஆணி வந்தாலும், வெறுமனே வலிச்சாலும் சரி - பெரிசா கண்டுக்கறதில்லை. அதிகபட்சம் ஒத்தடம் குடுக்கறதோட சரி. ஆனா இது தப்பு.

பாதங்கள், வெடிப்புகள், வீக்கம், மேடு பள்ளங்கள் இல்லாமல் இருக்கறது அவசியம். காரணம், நம்ம முக துவாரங்கள் மூலமா உள்ளே போகிற கிருமிகளை விட பாத வெடிப்புகள் மூலமா கிருமிகள் உள்ளே போச்சுன்னா ஆபத்து அதிகம்.

ஓட்டம் குறைந்து, அந்த ஏரியா தசைகள் இறுகி, மரத்துப் போனா, ஒரு சின்ன அழுத்தத்தாலே கூட வெடிப்பு உருவாயிடும்.

இதைப் போக்கறது சுலபம். அந்தக் காலத்துல வீட்டுல, குளிக்கற ரூம்ல எல்லாம் ஒரு கல்லு வெச்சிருப்பாங்க. மஞ்சள் உரைக்கறதுக்கு மட்டுமில்லை. குளிக்கும் போது, பாதங்களையும் அதுல இதமா தேய்ச்சா வெடிப்புகள் மறைஞ்சு போகும்.

மஞ்சள், மருதாணி இதையெல்லாம் கால்லயும் தடவறாங்களே, எதுக்குன்னு நினைச்சீங்க? அழகுக்காகவா? நெவர்! மருதாணியைக் கால்ல தடவினா கிருமி அண்டாது, அந்த வாசனைக்கு. தவிர, வெடிப்புகள் வராது. வெடிப்பு இருந்ததுன்னா, உடனே மறைஞ்சுடும்.

அப்புறம் ஆணி. 'கால் ஆணி'ன்னா இரும்பு ஆணி இல்லை. எக்ஸ்ட்ரா சதைதான் கால்ல வந்து சேர்ந்துக்கும். நடக்க முடியாம வலி உயிர் போயிடும்.

ஒரு சின்ன, மைனர் ஆபரேஷன் மூலமா இந்த எக்ஸ்ட்ரா சதையை நீக்கிடலாம்தான். ஆனா மறுபடி வரவே வராம பண்றது அதைவிட பெஸ்ட் இல்லியா?

என்ன பண்ணணும்?

தினசரி ஒரு கிலோ மீட்டராவது நடக்கறது நல்லது. உடலுக்கு நல்லதுங்கறது ஒரு பக்கம்; கால்கள்ல அதனால ரத்த ஓட்டம் சீராகி, எக்ஸ்ட்ராவா எதையும் வளர விடாது.

உதாரணமா, இப்ப ஒருத்தருக்குப் பித்த வெடிப்பு ஏற்படுதுன்னு வெச்சிப்போம். நடக்கும்போது ஊசியோ, ஆணியோ, முள்ளோ குத்தி, ரத்தம் வந்து, அதோட கிருமிகள் கலந்துட்டா பெரிய பிரச்னை ஆயிடும். டாக்டருக்கு நிறைய தட்சணை வெச்சாகணும். தவிர வைரஸ், பாக்டீரியா கிருமிகளால வரக்கூடிய இதர நோய்களுக்கு ஃப்ரீ பாஸ் குடுத்தா மாதிரி ஆயிடும். இதைத் தவிர்க்கணும்னா கொஞ்சம் சீரியஸா கால்களை தினமும் கவனிக்கணும்.

வெடிப்புகள் ஏன் வருது? அதிகம் அலையறதால. தவிர பித்தம் மாதிரி உடல் கோளாறுகளினாலும் வரும். பாதத்துல ரத்த

அப்புறம் இந்த ஹை-ஹீல்ஸ் செருப்புகள் போடறதாலேயும் கால் வலி, வீக்கம் வர வாய்ப்பு இருக்கு. ஸோ, அதிக உயரமில்லாத, வளைவுகள் இல்லாத செருப்புகள் பெட்டர்.



நாப்பது வயசுக்கு மேல

பெண்கள், வீட்டுல இருக்கும் போது கூட ரப்பர் செருப்போட நடக்கறது நல்லதுன்னு டாக்டர்கள் சொல்லுவாங்க.

அதுக்குக் காரணம் என்ன தெரியுமா?

ஒரு ஆண் வெளியில வேலைக்குப் போயிட்டு வரதுக்குள்ள எவ்வளோ தூரம் நடக்கறானோ, அது மாதிரி ஏழு பங்கு, பெண்கள் வீட்டுக்குள்ளேயே நடக்க வேண்டியதாயிருக்குன்னு ஒரு கணக்கு உண்டு. செருப்பு போட்டுட்டு நடக்கறதால கால்களுக்கு 'ஸ்ட்ரெயின்' குறையுது.

ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி, பாதம் அடிக்கடி பிரச்னை குடுக்கத்தான் செய்யும். கொஞ்சம் நடந்தாலே வலிக்கும். இழுக்கறாப்பல இருக்கும். குறிப்பா ஷுகர் கம்ப்ளெயிண்ட் உள்ளவர்களுக்கு இந்த பிரச்னை நிச்சயம் வரும். இப்ப உள்ள விஞ்ஞான வளர்ச்சியினால, அதுக்குச் சில கருவிகள் கண்டுபிடிச்சிருக்காங்க. 'மஸாஜர்'னு பேரு. நூறு, இருநூறுக்குள்ளதான் விலை. (நிறைய கம்பெனிகளோட தயாரிப்புகள் வருது. டாக்டரை கன்ஸல்ட் பண்ணிட்டு வாங்கறது பெட்டர்.) அசப்புல ஹேர்-டிரையர் மாதிரி இருக்கும். அதால பாதத்துல ஒத்தடம் குடுத்தா இதமா இருக்கும். ட்ரை பண்ணிப் பாருங்க.

- சுமி



''சார் நூறு ரூபாய்க்குச் சில்லறை இருக்கா?''

''இருக்கே, நோட்டை எடுங்க தரேன்.''

''ஹி..ஹி... அந்தச் சில்லறையைக் கடனா கொடுத்துடுங்க. எங்கே, இல்லைன்னு சொல்லிடுவீங்களோன்னு தான் இப்படி கேட்டேன்.''



- பா.ஜெயக்குமார்

✉ 'குட்டிச்சுவராகும் கூட்டுறவுத் தத்துவம்' தலையங்கம் சரியான நேரத்தில் தரப்பட்ட தகவல். என்னதான் கலைஞர் நேர்மையாக இருங்கள், தவறுகள் நடக்கக்கூடாது என்று கூறினாலும் ஆங்காங்கே சிறு சிறு அசம்பாவிதங்கள் நடைபெற ஆரம்பித்து விட்டன. இதை ஆரம்பத்திலேயே கலைஞர் சரிசெய்ய வேண்டியது அவசியம்.
கோவில்பட்டி, என். ஜெயராமச்சந்திரன்.

✉ கூட்டுறவுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலில் நடைபெற்ற ஊழலைத் தலையங்கத்தில் படித்ததும்.... எனக்கு நெஞ்சு வலிப்பது போலாகி விட்டது. தலையங்கம் கலைஞரை அடைந்திருக்கும்; தகுந்த நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.
சென்னை - 33, தி. சுபாகரன்.

ஆதங்கம் சரி! கருத்து தவறு!

✉ 'சத்தியத்துக்கு சோதனை' என்ற எறும்பாரின் சிறந்த சிந்தனைக்கசடி, வெடிச் சிரிப்பை வரவழைத்து விட்டது.
காளவாசல், எல். எம். மங்கை.

✉ 'போயஸ் தோட்டத்தில் நீ சிரித்தால்' படு சூப்பர். படித்து, மீண்டும் படித்து நாங்கள் எல்லோரும் சிரித்தோம்.
நாகப்பட்டினம், கே. நீலவண்ணன்.

✉ 'வேண்டாதவர் வந்து விட்டால் துரத்தி விட முடியுமா?' என்று சொல்லும் சாரதா விஸ்வநாதனின் இரக்கப்படும் குணம் 'ஜெ'யின் நடத்தைக்குத் தேவை இல்லாத ஒன்று.
காயக்காடு, ப. ராமகிருஷ்ணன்.

✉ நாடகத் துறையின் நலிவு பற்றி எவரும் கண்டுகொள்ளாத இந் நேரத்தில், இதுபற்றிய தங்களின் வேதனையை வெளிப்படுத்திய செம்பியனுக்கும், சுஜாதாவுக்கும் பாராட்டுகள்.
சென்னை - 43, வி. பிரசன்ன கிருஷ்ணன்.

✉ 'அரசியல் கும்மியில் வாழப்பாடியாரும் உண்டு. அவரை கும்மியடிக்கும் கூட்டத்தில் மறைத்து விட்டதேன்?'
கமுதி, ஜே.வி.ஆர்.

✉ 21 வருஷங்கள் பாடுபட்டு திரு. தூரனும் அவரது குழுவினரும் உருவாக்கிய கலைக்களஞ்சியம், மறுபதிப்பு செய்யப்படவில்லை என்பது தமிழ் மொழிக்கே ஏற்பட்ட பெரும் அவமானம். கல்கி மூலம் இந்த விஷயத்தை ரா.கி.ர. வெளிக்கொணர்ந்து விட்டார். தமிழ் மீது ஆர்வம் கொண்டுள்ள கலைஞர் அவர்களும் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களும் இது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம்.
நாமக்கல், வி. ராமகிருஷ்ணன்.

✉ கவிஞர் நா. காமராஜனின் ஆதங்கத்தை வரவேற்கிறேன். ஆனால் கவிஞர் கண்ணதாசன், திரைப்பாடல் மற்றும் உரைநடையில் தான் சிறந்து விளங்கினாரே தவிர, ஒரு சிறந்த கவிஞராக விளங்கவில்லை என்று அவர் கருத்துத் தெரிவித்திருப்பது ஏற்புடையது அல்ல.
விழுப்புரம், வெ. ஆனந்தி.

✉ கவியரசர் கண்ணதாசனை ஒரு சிறந்த கவிஞர் இல்லை என்று குறிப்பிட்ட நா. காமராசன் அவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள்!
வேலூர் - 6, எல். கோபாலகிருஷ்ணன்.

✉ 'ஐயோ பாவம், ஆதிபுரீஸ்வரர்!' கட்டுரை படித்தேன். ஆதிபுரீஸ்வரர் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள கோவில்களில் சரிபாதிக்கு மேல் இப்படித்தான் இருக்கின்றன.
திருச்சூர், சி. பி. கே. சாமி.

✉ பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை. மதன், விளம்பரத்திற்காகச் செய்திருப்பதாகத் தராசு கூறியிருப்பது முற்றிலும் தவறு. மதனையும் விகடனையும் தெரியாமல் யார் இருக்கிறார்கள்?
அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

✉ 'அலுவலக நாகரிகம்' என்ற கவர் ஸ்டோரி, ஒரு சில 'ஜொள்ளு பார்ட்டி' அதிகாரிகளுக்கு செமத்தியான சாட்டையடி! அதே சமயம், நீங்கள் பெண்களுக்கு வழங்கியுள்ள அறிவுரைச் செய்திகள் தெளிவான படிப்பினை...!
சென்னை - 39, கி. பாஸ்கரன்.

✉ அலுவலகத்தில் பணிபுரியும் ஆண்கள் மற்றும் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை அழகாக வழங்கியுள்ளீர்கள். இது போன்ற அன்றாட வாழ்க்கைக்கு உதவக்கூடிய விஷயங்களை 'கல்கி'யில் தொடர்ந்து வெளியிட வேண்டும்.
கோவை-11, ப. சதீஷ்.



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

Lintas Cl CAC 2 2013 Tm

வித்தகர் :

பாம்பே சாணக்யா

நாடகம் நாடகம் நாடகம்தான்!

"ஓ... பாம்பே சாணக்யா! நானே உங்களைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பினேன்" என்று கே. பாலசந்தர் சொன்னபோது மகிழ்ச்சியால் அதிர்ந்து போனார். அதுதான் சாணக்யாவுக்கு அவருடன் ஏற்பட்ட முதல் சந்திப்பு.

'இரண்டாம் சாணக்கியன்' என்ற இவரின் மேடை நாடகத்தைப் பார்த்த நண்பர் வி.ஆர். எஸ். -- சோவின் குழுவில் இருந்தவர். 'இந்த நாடகத்தை பாலசந்தர் பார்த்தாரா?' என்று கேட்டார். இல்லை என்று தெரிந்ததும் அவரே கே.பியிடம் அழைத்துப் போனார். அப்போதுதான் பாலசந்தர் இப்படிச் சொன்னாராம். பாம்பே சாணக்யாவின் நாடகங்களைப் பற்றிய விமர்சனங்களைப் படித்து, அவரைக் கவனித்திருக்கிறார் கே.பி.

சாணக்யா அழைத்ததன் பேரில் நாடகம் பார்க்க வந்தார் கே.பி. அடுத்த நாடகத்தை அவரே செய்தித்தாளில் நிகழ்ச்சி விவரம் படித்து, தம் மனைவியோடு வந்து பார்த்தார். இப்படி நாற்பது நாட்களுக்குள் சாணக்கியாவின் ஐந்து நாடகங்களைப் பார்க்க நேரம் ஒதுக்கிக் கொண்டார் கே.பி.!

அதே போல் சோவும் இரண்டு நாடகங்களைப் பார்த்து, ஊக்கமளித்ததுடன் ஒரு பத்திரிகைப் பேட்டியிலும் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது லேட்டஸ்ட்டாக, சுஜாதா பக்கத்தில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது!

அன்றாட நிகழ்வுகளை வித்தியாசமான கோணத்தில் கதையாக்கி, நாடகங்கள் எழுதி இயக்குகிறவர், தஞ்சாவூர்க்காரரான பாம்பே சாணக்யா என்னும் ஜே. ரகுநாத். பிறந்தது, வளர்ந்தது, படித்தது, வேலை பார்த்தது எல்லாம் மும்பையில்தான்! பள்ளி கல்லூரி நாட்களில் முளைவிட்ட நடிப்பு ஆர்வம். நாடக ஆசிரியர், தயாரிப்பாளராக உயர உதவியது பெற்றோர் மட்டுமில்லை, அவர்களுக்குச் சமமாக இவர் மதிக்கும் பள்ளியாசிரியை ராஜம்-விஸ்வநாதன் தம்பதியினரும்தான்.

திருமதி ராஜம் மும்பையில் இவர் நாடகங்கள் நடத்தியபோது இவருக்குத் தாயாராக நடித்தவர்! அந்தத் தொடர்பு இவர் 'அம்மா' என்றே அழைத்து மகிழும் அளவுக்கு நெருக்கமானது.

மும்பையில் 'கலைவாணி' என்ற அமைப்பின் மூலம் 'புதை மணல்' என்ற தம்முடைய முதல் நாடகத்தை எழுதி இயக்கினார் சாணக்கியா. அதற்கு முன்பே வேறொரு நண்பருக்காகத் தயாரித்த நாடகம் ஒன்று உண்டு.

"நான்கைந்து நாடகங்களிலேயே, எப்படியும் சென்னைக்கு வந்து 'கொடி நாட்ட வேண்டும்' என்கிற எண்ணம் ஒரு வெறியாகப் பரிணமித்தது'' என்கிறார். சென்னையிலிருந்து மும்பை வந்த நாடகக் குழுக்கள் நடத்திய நாடகங்களை, மராட்டி, ஹிந்தி நாடகங்களோடு ஒப்பு நோக்கிப் பார்த்ததால் இந்த உணர்வு மேலும் வலுப்பட்டதாம்.

"திருப்பித் திருப்பி மாமியார், மருமகள் பிரச்னை, காதல் விவகாரம் என்றே வைத்து ஏன் எழுத வேண்டும்? துணிச்சலான மையக் கருவை வைத்து ஏன் யாரும் எழுத முன் வருவதில்லை?" என்றெல்லாம் யோசித்ததன் வினைவே இவருடைய நாடகங்கள். 'நெருடும் உறவுகள்' நாடகம், விலைமகள் ஒருத்தியின் மகளாகப் பிறந்த ஒரு பெண், திருமணச் சூழலில் ஏற்கப்படாமலிருந்தது பற்றியது. 'அக்னி வார்ப்புகள்', 'மேரா பாரத் சஹான்' (தலைப்பு மட்டும் தான் ஹிந்தி.), 'சூர்ய வம்சம்' என்று வித்தியாசமான நாடகங்கள் அரங்கேற்றினார். கதையில் மட்டுமின்றி மேடை, காட்சி அமைப்பு போன்றவற்றிலும் புது முயற்சிகள் இவை.

சென்னைக்கு வருவதற்கு முன் சில ஆண்டுகள் வளைகுடா நாடுகளில் வேலை பார்க்க வாய்ப்புக் கிடைத்தது. இருந்தும் நாடக



ஆனால் இவரை அங்கு தொடர்ந்து வேலை பார்க்க இடந்தரவில்லை. அந்த நாட்டில் இவரால் தமிழ் நாடகங்கள் நடத்த அனுமதி கிடைக்கவில்லை என்ற போதிலும், நாடகங்கள் எழுதுவதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஒரு கட்டத்தில், அங்கு சம்பாதித்தது போதும் என்கிற நிறைவோடு நாடகத் துறை பணிகளைத் தொடர்வதற்காகச் சென்னை வந்து சேர்ந்தார்.

முதலில் மெரீனா நாடகக் குழுவில் சேர்ந்தார். பணி, ஒரு நிதி நிறுவனத்தில். முழு நேரமாக நாடகத்துறையில் ஈடுபட விரும்பிய போது, மெரீனா சொன்னது: ''நன்றாக யோசித்து விட்டுப் பார்க்கிற வேலையை விட்டு விலகு. நாடகத்திலேயே சாதனை பண்ண முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் செய்...''

விலகினார். ஆத்மதிருப்தி தருவது இந்தத் துறைதான் என்ற முடிவு. இதன் மீது இளம் வயது முதலே ஏற்பட்ட வெறித்தனமான பிடிப்பு. எல்லாம் சாணக்யாவை வளர்த்தன. ஆனாலும், ''எதையும் நான் செய்தேன் என்று மார்தட்டிக் கொள்ள விரும்பவில்லை. எல்லாம் நடக்க வேண்டும் என்கிற நியதியின்படியே நடைபெறுகின்றன. 'எல்லாம் அவன் செயல்' என்பதில் எனக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு'' என்கிறார் சாணக்யா.

சென்னை வந்த புதிதில் 'கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ்' நடத்திய நாடக விமர்சனப் போட்டிக்கு விமர்சனங்கள் எழுதிய போது புனைந்து கொண்ட பெயர் சாணக்யா. அதுவே பின்னால் 'பாம்பே சாணக்யா' ஆயிற்று. அந்த வரலாற்று நாயகனின், அறிவாற்றல் மீதிருந்த பற்று அவன் பெயரையே சூடிக் கொள்ள வைத்தது.

மேற்கத்திய, ஹிந்துஸ்தானி இசை பிடிக்கும் என்றாலும் தம்முடைய நாடகங்களில் கர்நாடக சங்கீதத்தையே பயன்படுத்துவது என்று வைத்திருக்கிறார்.

நாடகங்களுக்கான கருப் பொருளை எப்படித் தேர்வு செய்வது, எப்படி மேடையில் தருவது என்கிற நுட்பங்களை பாலசந்தர் கையாளும் முறை இவரை அதிகம் பாதித்திருக்கிறது. அவருடைய 'புன்னகை', 'அரங்கேற்றம்' போன்ற படைப்புகளின் அழுத்தம், அவர் மீது ஒருவிதமான பிரேமையை ஏற்படுத்தியிருக்கிறது.

அதே கே.பியிடமே இணைந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்திருப்பதில் இவருக்கு நியாயமான பெருமிதம் உண்டு. 'கல்கி' படத்தின் உதவி இயக்குநராக அறிமுகமாகிறார். முன்பே தொலைக் காட்சித் தொடராக ''காதல் பகடை''யை எழுதியிருக்கிறார். கே.பியின் கையளவு மனசு தயாரான நாட்களில் ''சும்மா வெறுமனே வந்து பார்த்துக் கொண்டிருங்கள்'' என்று அழைத்தாராம் கே.பி.

மராட்டி, ஹிந்தி, சமஸ்கிருதம், ஓரளவு அரபி மொழி தெரியுமாம் சாணக்யாவுக்கு. மிகவும் ஆசாரமான குடும்பச் சூழலில் பிறந்து வளர்ந்தவர். அப்பா ஜயராமனின் சம்ஸ்கிருத ஞானம், வேதங்களின் பால் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. 'மாக்ஸ்முல்லர்' மொழிபெயர்த்த நூல்கள் பலவற்றைப் படித்து அறிவைப் பரவலாக்கிக் கொண்டுள்ள பாம்பே சாணக்யா, அடுத்து மேடையேற்றப் போகிற நாடகம் 'மீண்டும் அவர்கள்'. நவம்பர் கடைசியில் மேடையேறும்.

நாடகங்கள் என்றால் பொழுது போக்கும் 'துணுக்குத் தோரணங்கள்'தாம் என்கிற கமர்ஷியல் நிலையை விட்டு முற்றிலுமாக விலகி, 'கலை கலைக்காகவே' என்கிற நோக்கில் நாடகங்கள் தயாரிக்கும் மும்பை சாணக்யா (பம்பாய் 'மும்பை' என்று பெயர் மாற்றம் பெற்று விட்டதால் இவரும் மாற்றிக் கொள்ள வேண்டாமோ!) தமது சிந்தனையும் ''நாடகம்... நாடகம்... நாடகம்தான்!'' என்கிறார்.

— சுப்ர. பாலன்



தரையில் புதைத்த பெரிய கல்லுரலின் குழி மேல் பித்தளைத் தவலையை இருத்தியிருந்தாள் சுகன்யா. அதன் மேல், கொலுப் படி செட்டியார் பொம்மையை உட்கார்த்தியது போல் குட்டையாய் குண்டாக ஒரு வெண்கல கூஜா. அதன் மூடியைக் கழற்றிவிட்டு, தண்ணீர் நிரப்பி, மணி பிளான்ட் கிளைகளைப் போட்டு வைத்திருந்தாள். அவை இந்த மூன்று மாத காலத்தில் நீண்டு வளர்ந்து, தவலை மேலிறங்கி கல்லுரலைத் தொட முயன்று கொண்டிருந்தன. ஜன்னல் வழியே வந்த வெயில் வெளிச்சம் இந்த நூதன பூரண கும்பத்தில் பட்டு, பளபளத்தது. கல்லுரலின் கருமையும், தவலையின் பொன் நிறமும், கொடிகளின் பசுமையும் போட்டி போடுவதை ரசித்தபடி மதிய டீயை உறிஞ்சிக் கொண்டிருந்தாள் சுகன்யா.

தனிக்குடித்தனம் வந்த பிறகும் வேலைக்குப் போவதில்லை என்ற முடிவு தொடர்ந்தது.

"அலுப்பாயிருக்கு ஸ்ரீராம்... அவசியமா தோணலை... வீட்டிலேயே இருக்கேன். நிறைய படிக்கலாம், அப்புறம் புதுசா ஏதாவது கத்துக்கலாம்..."

"இனிமே நீ கத்துக்கக் கூட ஏதாவது பாக்கியிருக்கா...?"

"இருக்கே. நிறைய இருக்கு. பாட்டு கிளாஸ் போவேன்... அப்புறம்... மூச்சைப் பிடிச்சுக்கோ! டான்ஸ் கூட கத்துப்பேன்!"

"ஐயோ!" மயக்கம் வருவது போல் அவன் நடிக்க, அப்படியே நாட்டிய போஸில் தாங்கிக் கொண்டதை எண்ணி, இப்போதும் சுகன்யாவுக்குச் சிரிப்பு வந்தது.

நாட்டிய வகுப்புக்குப் போகத் துணிவு வரவில்லை. ஆனால், பக்கத்துத் தெருவில் நடந்த பஜன் கிளாஸில் சேர்ந்து விட்டாள். அங்கே வகுப்பு நடத்திய மாமிக்கு ஒரு பெங்காலி பாட்டும் கற்றுக் கொடுத்தாகிவிட்டது!

இப்போது டீ குடித்து முடிந்ததும் அங்குதான் போக வேண்டும்...

கடைசி மிடறை உறிஞ்சிவிட்டு தம்ளரைக் கழுவியபோது, பக்கத்து வீட்டிலிருந்து பானுவின் குரல் கேட்டது.

"சுகீ! சுகன்யா... உனக்கு போன் வந்திருக்கு..."

முன் கதவைப் பூட்டிக் கொண்டு அவசரமாகப் பக்கத்து வீட்டுக்குப் போகையிலேயே கொஞ்சம் கவலை வந்தது.

ஸ்ரீராம் அலுவலகத்தில் சாங்ஷன் கொடுத்தும் இன்னும் போன் இணைப்பு வரவில்லை. அவசரமானால் கூப்பிடலாம் என்று பக்கத்து வீட்டு நம்பர் ஸ்ரீராமுக்கும் அவன் பெற்றோருக்கும் மட்டுமே தரப்பட்டிருக்கிறது.


வரலாமா?
?
பிரபஞ்சன்

இருவரில் யார்...? எதற்குக் கூப்பிடுகிறார்கள்...? ஒருவேளை ஸ்ரீராம் அவசரமாக டூர் போக வேண்டியிருக்கிறதோ...? இல்லை அப்பா... அம்மா...! ஏதாவது உடம்பு சரியில்லாமல்...? அப்படியானால் ஸ்ரீராமுக்குத்தானே போன் செய்வார்கள்...?

ஓடிப்போய் ரிசீவரை எடுத்துப் பேசிய போது மூச்சிரைத்தது. மறுமுனையில் மாமனார் குரல் கேட்டது.

"நான் ராமநாதன் பேசறேன்..."

"சொல்லுங்க அப்பா... நான் சுகன்யா..."

"ஸ்ரீராம் ஆபீஸுக்கு போன் பண்ணி, பண்ணிப் பார்த்தேன்மா. அங்க என்ன பிரச்னைன்னு தெரியலே... லைனே கிடைக்கலை. விஷயம் இதுதான்; வசந்திக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு. நாளைக்கு நிச்சயதார்த்தம். மாப்பிள்ளை வீட்லே... ஸ்ரீராம்கிட்டே சொல்லிடு இரண்டு பேரும் வந்துருங்கோம்மா...."

கடந்த ஞாயிறு போயிருந்த போது கூட கல்யாணம் பற்றி எந்தப் பேச்சும் இல்லை. இப்போது திடீரென்று... தொடர்ச்சியாக எழுந்த கேள்விகளை ஒதுக்கிவிட்டு, சுகன்யா கேட்டாள். "மாப்பிள்ளை யாருப்பா...?"

"மாப்பிள்ளை பேரு சந்திரசேகர், சேகர்னு கூப்பிடறது. சேகர் அசோஸியேட்ஸ்னு விளம்பர ஏஜென்ஸி நடத்தறார். நாளைக்கு மூணு மணிக்கு ஃபங்ஷன். நீங்க இரண்டு பேரும் இங்கேயே வந்துட்டீங்கன்னா சேர்ந்து போயிடலாம்..."

"வசந்தியைக் கூப்பிடுங்கப்பா... நான் ஒரு நிமிஷம் பேசறேன்..."

சுகன்யா இதைச் சொல்வதற்குள் லைன் துண்டிக்கப்பட்டு விட்டது.

பானுவிடம் அனுமதி கேட்டு, ஸ்ரீராம் அலுவலக நம்பரை முயன்று பார்த்தபோது லைன் உணர்வற்றுக் கிடந்தது. ஒருகணம் யோசித்து, மீண்டும் வீட்டுக்கு ஓடிப் போய், ராஜுவின் பேஜர் நம்பரைக் குறித்து வந்து, அந்த எண்ணில் தகவல் கொடுத்தாள்.

"ஸ்ரீராமை உடனே தொடர்பு கொள்ளச் சொல்லவும் - நன்றி - சுகன்யா."

பானுவின் நம்பருக்கு ஸ்ரீராம் போன் செய்வான் என்று பத்து நிமிடம் காத்திருக்க முடிவு செய்தாள். பதினைந்து நிமிடம் கூட ஆகி விட்டது. எதிர்பார்த்த போன் வரவில்லை...

'மீண்டும் பேஜரில் தகவல் சொல்லலாமா?' என்று யோசிக்கையிலேயே ஸ்ரீராமுடைய கார் ஹார்ன் சப்தம் கேட்டது.

பானுவுக்கு தாங்க்ஸ் சொல்லிவிட்டு ஓட, ஸ்ரீராம் இலேசாக அரண்டு போன முகத்துடன் நின்றிருந்தான்.

"என்னாச்சு... சுகி?" வீட்டைத் திறந்தபடியே சென்னாள். "நல்ல செய்திதான் ஸ்ரீராம். வசந்திக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கு..."

"ஓ...!"

"என்ன ஓ...! எவ்வளவு சந்தோஷமான செய்தி சொல்றேன். மீன் குஞ்சு மாதிரி 'ஓ'ங்கறியே!"

"என் பதற்றம் உனக்கெங்க புரியப்போறது? இந்த மாதிரி சமயத்துல உன்னைத் தனியா வீட்ல விட்டுட்டுப் போறமேன்னு ஏற்கெனவே குற்றஉணர்வு எனக்கு... இதுல நீ பேஜர் மெசேஜ் வேற குடுக்கறே..."

"இந்த மாதிரி'ன்னா எந்த மாதிரி சமயத்துல?"

"அதான் இந்த மாதிரி..." அந்த சின்ன ஹாலில் இருந்த ஒரே இரட்டை சோபாவில் உட்கார்ந்து, சுகன்யாவையும் பக்கத்தில் இருத்தி, அவள் வயிற்றில் கைவைத்தபடி சொன்னான்...

"ரொம்ப அவசரப்படறியே ஸ்ரீராம். இன்னும் பத்து நாள் போகட்டும். டாக்டர் கிட்டே போய் உறுதிப்படுத்திண்டு அப்புறம் சந்தோஷப்படலாம்."

"இந்த டாக்டருக்கு உறுதியா தெரியறதே...!" தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டிச் சொன்னவன், அவளை இறுக்கி அணைத்துக் கொள்ள...

"விடு! மூச்சுத் திணறுது! வசந்திக்குக் கல்யாணம்னு சொல்லிட்டிருக்கேன், நீ வேற டிராக்குல போய்க்கிட்டிருக்கியே...!"

"என்னைக் கேட்டா கல்யாணம் நிச்சயம் பண்ணாங்க? போன வாரம் போயிருந்தோமே, ஒரு வார்த்தை இதப் பத்திப் பேசலை! இப்போ மட்டும் எதுக்கு போன் பண்ணணும்?"

தங்க நகை பரிசு

இந்த இருபத்தாறு வாரத் தொடர், ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதாசிரியர் பெயரில் வெளியாகி வருகிறது. ஆனால் அவர்களுள் ஒரே ஒரு நபர்தான் இதை எழுதி வருகிறார். தொடரை எழுதியவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம். கடைசி வாரம் வரை காத்திருந்து, அந்த இதழில் வெளியாகும் கூப்பனில் விடை எழுதி அனுப்புங்கள். சரியான விடைக்கு, தங்க நகை பரிசு! பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவரே பரிசு பெறுவார். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

"பார்த்தியா? திருவாளர் ஸ்ரீராமின் ஆண் ஆணவம். பரிபூரணமா வெளிப்பட்டுருச்சு. நீ மட்டும் அவங்களைக் கேட்டா என்னைக் காதலிச்சே...?"

"அது வேற விஷயம். வசந்தி கல்யாணம்ங் கறது எனக்கும் எங்கப்பாவுக்குமான கூட்டுப் பொறுப்புன்றது எங்களுக்குள்ள எழுதப்படாத உடன்படிக்கை. அவர் உடன்படிக்கையை மீறிட்டார்..."

"நீ அவர் எதிர்பார்ப்பையெல்லாம் தவிடு பொடியாக்கிட்டே. அதனால் அவரும் உடன் படிக்கையை மீறிட்டார்... விடு! ஏன் பழைய கணக்கையே பார்த்துக்கிட்டிருக்கணும்?"

"உனக்குத் தெரியாது! நீ சும்மா இரு..."

திருமணமான இத்தனை நாட்களில் ஸ்ரீராம் இவ்வளவு கோபமாகப் பேசிக் கேட்ட தில்லை.

"வசந்தி பொறந்தப்போ எனக்குப் பத்து வயசு. அவளைத் தூக்கி வளர்த்ததுல எனக் குப் பெரிய பங்கு இருந்தது. என் முதல் குழந்தை மாதிரி அவ... இதெல்லாம் அப்பா -அம்மாவுக்கும் தெரியும்... அப்படியிருந்தும் ஒரு வார்த்தை எங்கிட்டே சொல்லலை. இன்ன பையனைப் பார்க்கிறதா இருக்கோம்... ஜாதகம் பொருந்தியிருக்கு. பெண் பார்க்க வரப் போறாங்க... ஏதாவது சொன்னாங்களா...?"

"ஒருவேளை அதெல்லாம் திடீர்னு நிச்சய மாச்சோ என்னவோ...?"

"இம்பாஸிபில்! எங்கப்பாவை எனக்குத் தெரியாதா...?"

"உனக்குத் தெரியாதுங்கறதுதான் உண்மை ஸ்ரீராம். உன் தேர்வு சரியில்லைன்னு அவர் முடிவு செய்தாச்சு. அப்புறம் உன் தங்கைக்கு மாப்பிள்ளைத் தேர்வு செய்ய உங்கப்பா உன்னை ஆலோசனை கேட்பார்னு நினைச் சுக்கிட்டிருக்கியே... இப்படிக் குழந்தைத்தன மான எதிர்பார்ப்பெல்லாம் வைச்சுக்காதே..."

அவன் மனத்தைத் திடப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உண்மையைத் தோலுரித்துப் பேசி விட்டாள் சுகன்யா.

வெறுப்புடன் அவளை விலக்கி விட்டு, கண் களை மூடிக் கொண்டு மௌனமானான் ஸ்ரீராம்.

ஆளுக்கொரு மூலையாக அமர்ந்து, இறுக்க மான மௌனத்தில் அரைமணிப் பொழுதை ஓட்டினார்கள்.

சுகன்யா டீ தயாரித்து வந்து கொடுத்த போது, "அங்க வை..." என்றான்.

"ஊஹூம்! இதை நீ கைல வாங்கு இப்போ... பொதுவா மத்தவங்க போல இருக்கற கோபத் தைப் பெண்டாட்டி மேல காட்டற ஆளு இல்லை நீ. ஆனா இன்னிக்குக் கோபம் ரொம்ப 'ஸ்பெஷல். அதனால் பொறுத்துக் கறேன். இப்போ டீயைக் குடி..."



அவன் கையில் கப்பைத் திணித்துச் சொன்னாள்.

"கொஞ்சம் பிராக்டிகலா யோசனை பண்ணு ஸ்ரீராம். உன் நியாயங்கள் அடிப் படையில பார்த்தா, உங்கப்பா உன்னை ரொம்ப உதாசீனப்படுத்திட்டார்னுதான் தோணும். அதுக்காக நாமும் கோபப்பட்டு விட்டேத்தியாயிருந்தா உறவுகளெல்லாம் இன் னும் ரொம்ப சிக்கலாகிப் போய்ச் சங்கடம் அதிகரிக்கும். அவங்க எப்படி இருந்தாலும் நாம எப்பவும் போல இருப்போம்... நம்ம வசந்தி கல்யாணம் இது."

"உனக்கொண்ணு தெரியுமா சுகி...?"


"என்ன...?"

"என் வாழ்க்கைலேயே நான் செஞ்ச ரொம்ப உருப்படியான காரியம் உன்னைக் கல் யாணம் பண்ணிண்டதுதான்...."

"அப்பாடி! அதுல உங்க அப்பாவுக்கு ஒரு பங்கு இருக்குன்றதை மறுக்க மாட்டே இல்ல..? அதுக்காகவாவது இப்ப கிளம்பு... நாம போய் வசந்தி நிச்சயதார்த்தத்துக்கு என்ன ஏற்பாடு செய்யணும்னு கேட்டு வேலையை ஆரம் பிக்கலாம்..."

ஸ்ரீராம் எழுந்து புறப்பட்டான். சாக்லேட் டும் புதுப் புடைவையும் வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தபோது, இவர்களுக்கு எந்த வேலையும் மிச்சமிருக்கவில்லை!

(தொடரும்)



போட்டிக் கதை - 7

விஜயசாரதி

பிரபல ஆங்கிலப் பத்திரிகையின் ஒன்பதாம் பக்கத்திலே அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

"ராணுவ ஆராய்ச்சி ரகசியத்தை பாகிஸ்தானுக்கு விற்கச் சதி செய்ததாக, நடந்த வழக்கில், பிரபல விஞ்ஞானி பரமேஸ்வரன் மீது சாட்டப் பட்ட குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று கூறி சுப்ரீம் கோர்ட் இன்று தீர்ப்பளித்தது."

பரமேஸ்வரன் செய்தித்தாளை மூடி வைத்தார். இரண்டு ஆண்டுகளாக அவரது வாழ்க்கையில் வீசிய கடும் புயல் இப்போது ஓய்ந்து விட்டது. ஆனால் அது விளைவித்த சேதங்கள்...

பரமேஸ்வரன் மெல்ல எழுந்தார். ஐம்பது வயதிலும், இருபது வயது இளைஞனைப் போன்று அவரைச் செயல்பட வைத்த உற்சாகமும், உடல் வலிவும், இந்த இரண்டாண்டு அனுபவங்களால் பறி போய் விட்டது.

எழுந்திருக்கும் போதே இடுப்பின் கீழ்ப்புறம் 'சுருக்' கென்று வலி. இனி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் பாதங்களிலிருந்து, கால்களை மேல் உடலில் இணைக்கும் மூட்டுகள் வரை பல இடங்களிலிருந்தும் குரல் கொடுக்கப் போகும் உடல் வேதனைகளுக்கு இது ஒரு முன்னுரை! வெளி உடல் உறுப்புகள் தவிர, ஜீரண உறுப்புகள், இதயம், நுரையீரல் என்று உடலுக்குள்ளும் பாதிப்புகள்.

போலீஸ் விசாரணை மற்றும் சிறை வாழ்க்கையின் தழும்புகள் இவை!

தம் மீது குற்றம் இல்லை என்று நிரூபிக்கபட்டு விட்டதால், இந்தத் 'தழும்புகள்' மறைந்து விடுமா அல்லது தாம் அனுபவித்த உடல் வேதனையும், மன வேதனையும்தான் அகன்று விடுமா என்று அவர் நினைத்துப் பார்த்தார்.

பௌதீகத்தில் 'மீள முடியாத மாற்றம்' என்று படித்தது இவர் நினைவுக்கு வந்தது. 'ஒரு ரப்பர் வளையத்தை இழுத்து விட்டால் அது பழைய நிலைக்கு வந்து விடும். ஆனால் ஒரு இரும்புக் கம்பியை வளைத்து நிமிர்த்தினால், அது நிச்சயம் பழைய நிலைக்கு வராது' என்று கல்லூரியில் பேராசிரியராக இருந்தபோது மாணவர்களுக்கு

'எலாஸ்டிஸிடி' பற்றி எளிமையாக விளக்கியிருக்கிறார். அப்போதெல்லாம் கடினமான விஷயங்களையும் எளிமையாக விளக்கும் அவரது திறமைக்கு மாணவர்களிடம், பெரும் வரவேற்பும், ஆச்சர்யமும், பாராட்டும் கிடைக்கும்.

ஆனால் அவரது எந்த விளக்கத்தாலும், போலீசாரால் தாம் குற்றமற்றவர் என்று அவரால் நிரூபிக்க முடியவில்லை. கல்வித் துறையிலிருந்து, ராணுவ ஆராய்ச்சித் துறைக்கு வந்ததில் தாம் எவ்வளவு இழந்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டார். அரசு இயந்திரத்தின் சிவப்பு நாடாக்களையும் மீறி தேசப் பாதுகாப்புக்காக உழைக்கிறோம் என்ற பெருமிதத்துடனும், உற்சாகத்துடனும் செயல்பட்டு, கடந்த 25 வருடங்களில் அவர் தம் ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கிய முன்னேற்றங்கள் பல. ராணுவத் தலைவரிடமிருந்து இவருக்குப் பாராட்டுக் கடிதம் கூட வந்திருக்கிறது. ஏன், குடியரசுத் தலைவரிடமிருந்து 'பத்மபூஷன்' விருது கூட வாங்கியிருக்கிறார்.

எல்லாம், இரண்டு வருடங்களுக்கு முந்தைய அந்த மே மாதத்தில் மாறி விட்டது. இன்று இவர் விடுதலையை 9-ஆம் பக்கத்தில் கடமைக்காகப் பிரசுரித்திருக்கும் இதே பத்திரிகை, அன்று முதல் பக்கத்தில், 'பிரபல விஞ்ஞானி கைது - ராணுவ ரகசியக் கடத்தலில் உடந்தை' என்று இவர் கைதான செய்தியை கம்பீரமாகப் பிரசுரித்திருந்தது.

அப்போது ஒரு திருமணத்துக்காக அவர் விடுமுறையில் சென்னைக்கு வந்திருந்தார். அவரது ஆராய்ச்சி நிறுவனம் இருந்தது பெங்களூரில். சென்னையில், தி. நகரில் தமது தங்கையின் வீட்டில் தங்கித் திருமணத்தில் கலந்து கொண்டு விட்டு, அன்று இரவே சென்னையிலிருந்து கிளம்பி பெங்களூர் வந்து விட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, சில முக்கியமான ராணுவ ரகசியங்கள் ஒரு ராணுவ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒற்றர் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட இருந்ததாகவும், பாகிஸ்தானின் பெண் ஒற்றரைக் கைது செய்ததன் மூலம் கர்நாடக போலீஸ் இந்தச் சதியை முறியடித்து விட்டதாகவும் பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்து பரமேஸ்வரன் திடுக்கிட்டார்.

எந்த ராணுவ ஆராய்ச்சி நிலையம் என்று செய்தியில் குறிப்பிடப்படா விட்டாலும், அது இவரது தலைமையில் இயங்கும் ஆராய்ச்சி நிலையம்தான் என்பதில் சந்தேகம் இல்லை. தமது தலைமையில் இயங்கும் ஒரு அமைப்பில், தமக்குத் தெரியாமல் இப்படி ஒரு சதியா? அதுவும் பத்திரிகைச் செய்தி வந்த பிறகும் தமக்குத் தெரியவில்லையென்றால்...?

அவர் குழம்பினார்.

ஆனால் அவர் அதிக நேரம் குழம்ப வேண்டியிருக்கவில்லை. அவர் தமது அலுவலகத்துக்குச் சென்ற சற்று நேரத்துக்கெல்லாம் அவரைத் தேடிப் போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள். அவர் புரிந்து கொள்ள முடியாத பல கேள்விகளைக் கேட்டார்கள். ஒரு பாகிஸ்தானியப் பெண்ணின் படத்தைக் காட்டி 'தெரியுமா?' என்றார்கள். ரகசியங்களை விற்றதற்காகக் கிடைத்த பணத்தை என்ன செய்திருக்கிறார் என்று வினவினார்கள். அவரது சென்னைப் பயணத்தைப் பற்றித் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். 'ஒரு திருமணத்தில் கலந்து கொள்ள' என்று அவர் சொன்னதைப் புறக்கணித்துப் பயண நோக்கம் பற்றிப் பலமுறை கேட்டார்கள்.

அவர் சென்னையில் கழித்த 16 மணி நேரத்துக்கும் கணக்குக் கேட்டார்கள். திருமணத்துக்குச் சென்று வந்த பிறகு, உறவினர் வீட்டில் படுத்துத் தூங்கியதாக அவர் சொன்னதைக் கேட்டுச் சிரித்தார்கள். கடைசியாக, "ஓட்டலில் ரஸியாவைப் பார்த்து ரகசிய தஸ்தாவேஜுகளின் நகல்களைக் கொடுத்து விட்டு உடனே வர வேண்டியதுதானே? ரொம்ப நேரம் தங்கியது அவளுடன் சல்லாபம் செய்யவா அல்லது

பலி

ஒற்றுமையே வாழ்வின் சாராம்சம்



தாயும் மகளும்

மென்மை, அன்பு, பரஸ்பரம், புரிந்து கொள்ளுதல் இவை நிறையப் பெற்று எக்காலத்திலும் இணை பிரியாத ஒரு உறவு அது. காலம் செல்லச் செல்ல கனிவுறும் இவ்வுறவு, இருவரையுமே திறமை மற்றும் சக்திமிக்கவர்களாக ஆக்குகிறது.

தொடர்ந்து சதி வேலைகளுக்கான திட்டம் தீட்டவா?" என்று அவர்கள் கேட்டபோது அவர் முதல் முறையாக அதிர்ந்து போனார். "என்னையா சந்தேகப்படுகிறீர்கள்?" என்று அவர் நம்ப முடியாமல் கேட்டபோது, சினிமாவில் சொல்வது போல், "யூ ஆர் அண்டர் அரெஸ்ட்!" என்றார்கள். அவர் கண்ணியமாக நடத்தப் பட்டது அதுதான் கடைசிமுறை.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததுமே, விசாரணை முறை மாறிற்று. அதுவரை 'சார்' என்று மரியாதையாக அழைத்து வந்தவர்கள், அதற்குப் பிறகு அவரை விசாரிக்கப் பயன் படுத்திய வார்த்தைகளிலேயே மிகவும் மரியாதையான வார்த்தை, 'ஏண்டா' என்பது தான். கன்னடத்திலும், தமிழிலும் அவர் கேட்டிருந்த, மற்றும் கேட்டே அறியாத அனைத்து வசவுச் சொற்களும் அவரை விசாரிக்கப் பயன்படுத்தப்பட்டன.

மரியாதைக் குறைவாக நடத்தப் படுகிறோமே என்ற வருத்தம் சிறிது நேரமே நீடித்தது. பழகி விட்டது என்பதால், அல்ல. அதை விடக் கொடூரமான விஷயங்களை அவர் அனுபவிக்கத் தொடங்கி விட்டதுதான்.



காவல் நிலையங்களில், சித்திரவதை முறை'கள் பயன்படுத்தப்படுவதைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் அவை இவ்வளவு கொடூரமாக, நம்ப முடியாத அளவுக்கு மோசமாக, தாங்க முடியாத அளவுக்கு வேதனையளிப்பதாக இருக்கும் என்று அவர் கற்பனை செய்து பார்க்கவில்லை.

பொதுவாக அவருக்கு வலிதாங்காது. அவரது குழந்தைகள் விளையாட்டாக முதுகில் அடித்தால் கூட வலி தாங்காமல் அவர்களைத் திட்டுவார். 'குழந்தை அடிப்பதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே உங்களால்!' என்று அவர் மனைவி கூட அங்கலாய்த்துக் கொள்வாள். அப்படிப்பட்டவர், உடல் வேதனையின் உச்ச கட்டங்களுக்குச் சென்று மீண்டு வந்தார்.

தினமும் இரவில் தொடர்ந்த சித்திரவதைகளில், பொழுது சாயும் போதே உடலில் ஒரு கிலி பரவத் தொடங்கியது. இன்று விடுதலையாகி வீட்டில் இருக்கும்போது கூட மாலை வந்தாலே, தன்னையறியாமல் உடலில் ஒருவித நடுக்கமும், பயமும் பரவுகிறது.

அவர் குற்றவாளி என்பதில் போலீசாருக்குச் சந்தேகமில்லை. அவர்கள் தெரிந்து

கொள்ள விரும்பியதெல்லாம், அவருக்கு எவ்வளவு பணம் கிடைத்தது. அதை என்ன செய்தார், எங்கே வைத்திருக்கிறார், சுவிஸ் வங்கி எதிலாவது அவர் பேரில் பணம் போடப்பட்டிருக்கிறதா என்பதுதான்.

சில மாதங்களில் வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. அவருக்கு எதிராகச் சொல்லப்பட்ட சாட்சிகள் அவரை மலைக்க வைத்தன. அலுவலக ஜெராக்ஸ் அறைக்கு, அவர் அடிக்கடி சென்றதாகவும், சில ஜெராக்ஸ் காப்பிகளைக் கைப்பையில் போட்டு அவ்வப்போது வீட்டுக்கு எடுத்துச் செல்வதைத் தான் பார்த்தாகவும், அவருக்குக் கீழ பணி புரிந்த இளம் விஞ்ஞானி மஞ்சுநாத் சாட்சி சொன்னான்.

குறிப்பிட்ட தேதியில் 'அவரைப் போல் தோற்றம் கொண்ட' ஒருவரை குறிப்பிட்ட ஓட்டலில் பார்த்ததாக ஓரிரு சாட்சிகள் கூறினர்.

பரமேஸ்வரனை யாரும் நம்பியதாகத் தெரியவில்லை.' ஒரு தேசத்துரோகியின் மகளைக் கல்யாணம் செய்து கொண்டேனே!' என்று அவரது மாப்பிள்ளை அவரது மகளிடம் அங்கலாய்த்துக் கொண்டானாம்.

சிறையில் வந்து அவரைப் பார்த்த அவரது ஒரே மகன், "பணம் வேண்டுமானால் என்னிடம் கேட்டிருக்கலாம்" என்று ஒரே வரியில் சொல்லிவிட்டுப் போனான்.

அவரது மனைவி கூட, "நாம் இரண்டு பேர் தானே இருக்கிறோம்? இந்த வயதில் ஏன் இப்படிச் செய்து மாட்டிக் கொண்டீர்கள்?" என்று அழுதாள். "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்கிறாளா, "ஏன் மாட்டிக் கொண்டீர்கள்?" என்று கேட்கிறாளா என்று அவருக்குப் புரியவில்லை.

ஒரு வக்கீல் அமர்த்த முயன்றார். அவர் கேட்ட ஃபீஸ் இவருக்குக் கட்டுப்படியாகவில்லை. "என்ன செய்வது? மாட்டிக் கொண்டு விட்டால், 'சம்பாதித்த' பணத்தில் கொஞ்சம் செலவு செய்துதான் மீண்டு வர வேண்டும்" என்று நியாயம் பேசினார் வக்கீல்.

பரமேஸ்வரன் வக்கீல் இல்லாமல் தாமே வாதாடிக் கொள்வது என்று முடிவு செய்தார். அவருக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அவர் குற்றம் செய்திருந்தால், பணம் சம்பாதித்திருக்க வேண்டும். ஆனால் போலீசார் அவரது வீட்டைச் சோதனை செய்தபோது, அவருடைய



''நீங்க ஹாஸ்பிடலுக்கு வந்தா ஐம்பது ரூபா ஃபீஸ் தரணும். நான் உங்க வீட்டுக்கு வந்து செக்-ஆப் செய்தா நூறு ரூபா தரணும். உங்க வசதி எப்படி?

''டாக்டர்! இரண்டு பேரும் பொதுவா நடுவுலே எங்கேயாவது மீட் பண்ணுவோமே!''

-என்.உஷாதேவி

பொருளாதார நிலை சராசரி அளவில்தான் இருந்ததை உணர்ந்திருப்பார்கள். இந்த ஒரு உண்மையே தமக்குச் சாதகமாக இருக்கும் என்று அவர் நினைத்தார்.

ஆனால் ரஸியாவின் சாட்சியம் அவரது நம்பிக்கையை உலுக்கி விட்டது. அவர் ஒரு முறை கூடப் பார்த்திராத அந்தப் பாகிஸ்தானியப் பெண், அவர் தன்னை ஓட்டலில் சந்தித்து ரகசிய தஸ்தாவேஜுகளின் நகல்களைக் கொடுத்ததாக ஒப்புக் கொண்டாள். அவளைக் கைது செய்தபோது அவளிடமிருந்து அந்த நகல்கள் கைப்பற்றப்பட்டன. அந்த நகல்கள், பரமேஸ்வரன் பெயருக்கு வந்திருந்த ஒரு கவருக்குள் வைக்கப்பட்டிருந்ததால், இவர்தான் அந்த நகல்களைத் தம்மிடமிருந்த ஒரு காவிக் கவரில் போட்டு அவளிடம் கொடுத்திருப்பார் என்று சந்தேகிக்க ஏதுவாயிற்று. அவருக்குக் கொடுக்க வேண்டிய பணம் தனக்கு வந்து சேராததால், அவருக்கு இன்னும் தான் பணம் கொடுக்கவில்லை என்று அவள் சொன்னது, இவருக்குச் சாதகமாக இருந்த ஒரே விஷயத்துக்கும் உலை வைத்து விட்டது.

பரமேஸ்வரன் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, ஐந்தாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர் வக்கீல் வைத்தும் ஹைகோர்ட், கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை உறுதி செய்தது. பின்பு மிகுந்த பிரயாசையுடன், வேறொரு வக்கீலை வைத்து இவர் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். இடையில் பாகிஸ்தானியப் பெண் சிறையில் இறந்து போனாள். அது தற்கொலையா இல்லையா என்ற சர்ச்சை துவங்கியது.

சுப்ரீம் கோர்ட் இவரை நிரபராதி என்று இப்போது தீர்ப்பளித்துள்ளது. போலீசுக்குக் கடுமையான கண்டனமும், நாட்டில் ஒரு சிறந்த விஞ்ஞானிக்கு இத்தகைய கதி நேர்ந்தது பற்றிய வருத்தத்தையும் சுப்ரீம் கோர்ட் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

இப்போது இவர் வேலை பார்த்த அரசு நிறுவனம் இவரை மீண்டும் வேலைக்கு அழைத்திருக்கிறது. இரண்டாண்டுகளுக்கான சம்பளம், உயர்வு மற்றும் இவருக்குச் சேர வேண்டிய அனைத்தையும் வழங்கவும் இசைந்திருக்கிறது.

மீண்டும் வேலையில் சேர்வதா என்பது பற்றிய சிறிது குழப்பத்துக்குப் பின், பரமேஸ்வரன் வேலையில் சேர முடிவு செய்தார். அவர் முடிக்க வேண்டிய முக்கியமாக பணி ஒன்று இருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மீண்டும் தமது அலுவலக அறையில் நுழைந்தார். அவர் இடத்தை அரசாங்கம் இன்னும் நிரப்பாமல் வைத்திருந்ததால், இடையில் வேறு யாரும் அவர் நாற்காலியில் உட்கார வாய்ப்பு வரவில்லை. அவரைக் கைது செய்தபின் அவரது அறை சோதனை போடப்பட்டதை அவர் அறிந்திருந்தார். சோதனைக்குப்பின் ஒழுங்கு படுத்தப்படாமல் பூட்டியே வைக்கப்பட்டிருந்த அவரது அறை, அவர் மீண்டும் பணியில் சேருகிறார் என்று தெரிந்த பிறகு, அவசரமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

ஊழியர்கள் ஒவ்வொருவராக வந்து அவரை வாழ்த்தி, வணக்கத்தையும், தங்கள் மகிழ்ச்சியையும் தெரிவித்து விட்டுச் சென்றார்கள். அவருக்கு எதிராகச் சாட்சி சொன்ன மஞ்சுநாத்தும் வந்தான். அவனுடைய தயக்கத்தையும், சங்கடத்தையும் அவனால் மறைக்க முடியவில்லை. "சார்! உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்" என்றான்.

"உணவு இடைவேளையின் போது வா" என்றார் பரமேஸ்வரன்.

இடைவேளை வந்தது. மஞ்சுநாத்தும் வந்தான். சற்று நேரம் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தவன், "சார்! என்னை மன்னித்து விடுங்கள். போலீசாரின் நிர்ப்பந்தத்தால்தான் அப்படிச் சாட்சி சொன்னேன். நீங்கள் என்னை ஒரு மகன் போல் நடத்தினீர்கள். உங்களுக்குத் துரோகம் செய்து விட்டேன்" என்றான் மெலிதான குரலில்.

பரமேஸ்வரன் அவனை உற்றுப் பார்த்தார். அவன் சொன்னது சரிதான். அவர் அவனைத் தம் மகன் போல் பாவித்துத்தான் அன்பு

செலுத்தி வந்தார். சிறகு முளைத்துக் குஞ்சுகள் பறந்து விட்ட பிறகு, தாய்ப்பறவைக்குத் (தந்தைப் பறவைக்கும்தான்!) தன் அன்பை வெளிக்காட்ட வேறொரு ஜீவன் தேவைப்படுகிறது. அவர் இப்போது இங்கே வந்திருப்பது கூட அந்த 'தந்தைப் பாசத்தினால்தான்.'

"மஞ்சு! நான் ரொம்பக் கொடுமைகள் அனுபவித்து விட்டேன். இந்தக் கொடுமைகள் வேறு யாருக்கும் நிகழக் கூடாது. குறிப்பாக நான் மகன் போல் நினைத்து அன்பு செலுத்தும் உனக்கு நிகழக் கூடாது."

"சார்...."

"எனக்குத் தெரியும் மஞ்சு. ரகசியங்கள் திருட்டுப் போனது உண்மை. இந்த அலுவலகத்தில் யாரோ ஒருவர் அதற்கு உடந்தை என்பதும் உண்மை. என்னை ஏன் போலீஸ் சந்தேகப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை உண்மையான குற்றவாளியைக் காப்பாற்ற சதிகாரர்கள் சந்தேக அலையை என் பக்கம் திருப்பிவிட்டிருக்கலாம். உன் வாக்குமூலம் கூட அதன் ஒரு பகுதியாக இருக்கலாம்."

"சார்...."

"எனக்கு உண்மை தெரியாது மஞ்சு. எல்லாம் என் யூகம்தான். நான் மாட்டிக் கொள்வதால், நீ உன் 'வேலை'யைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கலாம். யாருக்கும் சந்தேகம் வந்திருக்காது. அதனாலேயே ரவியாவும் எனக்கெதிராகச் சாட்சி சொல்லும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கலாம். எப்படியோ ஒரு அப்பாவியின் வாழ்வைச் சிதைத்து விட்டீர்கள்..."

"சார்.... நான் சொல்வதை...."

"நான் எதையும் கேட்க விரும்பவில்லை. எனது யூகம் எல்லாம் தவறாகவே இருக்கலாம். ஆனால் நான் சொல்ல வந்ததைச் சொல்லியே ஆக வேண்டும். ரகசியங்கள் விற்பதை, இன்னமும் நீ தொடர்ந்து செய்து வந்தால், தயவு செய்து அதை உடனே நிறுத்தி விடு. தவறு செய்பவன் ஒருநாள் பிடிபடுவான். தவறு செய்யாத எனக்கே இவ்வளவு கொடுமைகள் நிகழ்ந்த பிறகு, தவறு செய்த உனக்கு அத்தகைய அனுபவங்கள் ஏற்படாது என்று சொல்ல முடியாது. என் அன்புக்குரிய உனக்கு அத்தகைய கொடுமைகள் நிகழ்வதை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. எனவே தயவு செய்து நிறுத்தி விடு. இப்போதே... உடனேயே! இதை உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். மற்றபடி தொடர்ந்து வேலை செய்வதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை."

அவன் பதிலை எதிர்பாராமல் அவர் கிளம்பினார். அவரது ராஜினாமாக் கடிதத்தை அன்று காலையிலேயே அவரது மேலதிகாரிக்கு அனுப்பி விட்டார்.



''கதாநாயகியைப் பாம்பு கடிக்கிற மாதிரி இருக்கிற காட்சியை மாற்றி, நாய் கடிக்கிற மாதிரி வச்சிருங்க...''

''எதுக்காக இப்படி சொல்றீங்க?''

''அப்பதானே... தொப்புளைச் சுற்றி ஊசி போடற மாதிரி... செக்ஸியா படம் பிடிக்கலாம், அதுதான்''

-திருத்துறைப்பூண்டி எஸ்.கந்தசாமி



வந்தவர்: ஒரு கேஸ்கூட வராமல் இன்னிக்கு பூரா சும்மாதான் இருந்தீங்களா, டாக்டர்!

டாக்டர்: ஆமாம். எப்படி கண்டு பிடிச்சீங்க?

வந்தவர்: ஸ்டெதஸ்கோப்பில் பாதியை கடிச்சுக் குதறியிருக்கீங்களே, அதை வச்சித்தான்!

-ஆலத்தம்பாடி ராஜகோபால்



''தேக்கு மரப் பண்ணைத் திட்டம் மாதிரி இப்ப ஒரு புது திட்டம் வந்திருக்காம்...''

''என்ன திட்டம்?''

''பத்தாயிரம் ரூபா முதலீடு செய்தால், 5 வருஷத்தில் 5 கோடி வருமானம் தர்ற பெட்ரோல் மூலிகைப் பண்ணைத் திட்டமாம்...!

-ச.சாந்தி

குறையொன்றுமில்லை

22

மட்டபள்ளி க்ஷேத்திரத்தில் குகைக்குள்ளே வாசம் பண்ணுகிறான் நரசிம்ஹன். யாரேனும் ஒருத்தர் தீவட்டி எடுத்துப்போய் வழிகாட்டினால்தான் உள்ளே போகலாம். அந்த மாதிரி குகை. வேதாந்த குகைக்குள்ளே தத்துவமாய் அடங்கியிருப்பவனை ஓர் ஆசார்யரின் வழிகாட்டலில்தான் சேவிக்க முடியும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான். அப்படி ஒருத்தர் வழிகாட்ட உள்ளே போய் விட்டோமானால், இன்றைக்கெல்லாம் சேவிக்கலாம். எம்பெருமான் வடிவழகைக் கண்டு ஸ்தோத்திரம் பண்ண எல்லா துன்பமும் போய்விடும் என்கிறது வேதம்.

எப்பொழுதும் பகவானின் பெருமையையே பேசணும் என்று வேதம் காட்டும் வழியைத்தான் ஆசார்யர்களும் காட்டுகிறார்கள். 'எம்பெருமானை உபாஸனை பண்ணு - அப்படி பண்ண முடியாவிட்டால் அவனை இந்த விஷ்ணு சஹஸ்ரநாமத்திலே வரும் 'விச்வம்' என்கிற சப்தத்தைச் சொல்லி அவன் பெருமையை நினை.'

கடினமான கனத்தை (வேதம்) அத்யயனம் பண்ணி மஹரிஷிகளைப் போல சிரமப்பட்டு, சரீரத்தை வருத்தி; ஊன் வாட வாட உண்ணாதிருந்து அவனை வேண்டிய காலம் மாறி விட்டது.

இப்போது சிரமமில்லாமல் காரியம் செய்ய வழிகள் ஏற்பட்டிருக்கிறது. அடியேன் பண்ணுகிற இந்த உபன்யாஸத்தையே எடுத்துக் கொள்வோம். இதிலே என்ன சிரமம். உடம்பு சிரமப்படாமலிருக்க, மின் விசிறி சுற்றுகிறது. குரல் எல்லாருக்கும் கேட்கும்படியா ஒலிபெருக்கி இருக்கிறது....

ஆனால் ஆதி காலத்திலே முனிவர்கள் பஞ்சாக்னியின் மத்தியில் நின்று பகவானை உபாஸித்திருக்கிறார்கள். நான்கு பக்கமும் நான்கு அக்னி தகிக்கும்; தலைக்கு மேலே சூரியன்; கடும் வெயில் காலம் - சித்திரை வைகாசியிலே இது நடக்கும். குளிர் காலத்திலே தனுர் மாசத்திலே - கழுத்தளவு ஜலத்திலே நின்று கொண்டு உபாஸனை பண்ண வேண்டும்! நமது இந்த்ரியங்கள் மிகவும் பலம் வாய்ந்தவையானதாலே அவற்றை நிக்ரஹம் பண்ணி, ஊன் வாட வாட உண்ணாதிருந்து உயிருக்குக் காவலிட்டு மஹரிஷிகளெல்லாம் பகவானைக் கண்டார்கள்.

இப்போது அந்த சக்தியெல்லாம் நமக்கில்லை என்பது ரொம்ப ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. கால வெள்ளோட்டத்தில் வேக வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறோம்...

'அப்படியானால் வேத அத்யயனமே நடப்பதில்லையா?' என்று கேட்டால், நடந்து கொண்டுதானிருக்கிறது. மகான்கள் பலர் அதைப் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 'நம்மால் பண்ண முடியாது' என்கிறவர்கள் சுலபமாய் அவனை இந்த விச்வ சப்தத்தினாலே ஆராதித்தால், ஒரு புஷ்பத்தை எடுத்துப் போட்டால்... அந்த வேத உபாஸனையின் பயனைச் சுலபமாய் அடையலாம்.

விச்வ யோனி : - விச்வத்துக்கெல்லாம் காரணமானவன் என்று அறியப்படுகிற அந்த நரசிம்ஹனை ஆராதித்தவர்கள் வேறு நினைப்பே மனத்தில் கொள்ளமாட்டார்கள்.

விச்வ சப்தத்தினாலே மறைத்துச் சொல்லப்படுகிறவன் நரசிம்ஹன் என்று பார்த்தோம். அந்த விச்வமாகிய பரபிரும்மம் ஒரு முறை அசுவமேத யாகத்துக்குப் போயிற்று! எங்கே...?


நர்மதா நதி தீரத்திலே நடந்தது அந்த அசுவமேத யாகம்.

ஒவ்வொரு நதிக்கும் ஒரு பெருமை உண்டு. நர்மதா நதியின் பெருமை கூர்ம புராணத்திலே பேசப்பட்டிருக்கிறது. சந்தியாவந்தனத்திலே இந்த நதி குறித்த தியானம் வருகிறது. நர்மதா நதியை தியானம் பண்ணினால் நம் பக்கத்திலே விஷ ஜந்துக்களே வராது.

சரி, அந்த நதிக்கரையில் யாகம் செய்தவன் யார்...?

பிரஹலாதனின் பிள்ளை விரோசினன். இந்த விரோசினனின் மகன் வைரோசினன். இவனுடைய பிள்ளை மகாபலி. அவன் நர்மதா நதிக்கரையிலே அசுவமேத யாகம் பண்ணினான்.

அசுவமேத மஹா மந்திரம் என்ற ஒன்று அந்த யாகத்தின்போது ஜபிக்கப்படும். அந்த மஹா மந்திரத்தைக் கேட்டாலே மஹா புண்ணியம்.



அதனால்தான் இப்போது கலிகாலத்திலும் நம்மால் அசுவமேத யக்ஞம் பண்ண முடியாவிட்டாலும் அந்த மந்திரத்தை மட்டும் பாராயணம் பண்ணுவது என்று தொடர்ந்து நடைபெறுகிறது.

சுவாமி தேசிகன் 'எல்லா மகான்களும் ஒருசேர ஏகாதசியன்று அசுவமேத மந்திரத்தைப் பாராயணம் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்.

அஹோபில மடத்திலே ஸ்ரீமத் அழகிய சிங்கர் அசுவமேத மந்திர பாராயணத்தை நடத்தி வைக்கிறார்.

இப்படியொரு விசேஷ மந்திரத்தை உள்ளடக்கிய யாகம் என்றால் அது எத்தனை சிரேயஸ் உண்டு பண்ணக் கூடியது!

இந்த அசுவமேத யக்ஞம் என்பது ரொம்ப பெரிய கர்மா என்கிறது வேதம்.

ஓர் அரசன் (மஹாபலி அல்ல..







● அதிர்ஷ்டமுள்ளவனுக்குச் சேவலும் முட்டையிடும்.

— கிரீஸ் பழமொழி

● மூட நம்பிக்கை மனவலிமையில்லாதவர்களின் மதம்.

— இங்கிலாந்து பழமொழி

வேறொருவன்...) சங்கல்கபம் செய்து கொண்டு இதை நடத்திக் கொண்டிருக்கிறான். நடத்தி வைக்கும் வேத வித்துக்கள் சர்வ சிரமங்களையும் அனுபவித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பூர்ணாஹுதிக்கு முன்னே அங்க ஹோமம் நடக்கிறது. நாற்பத்தெட்டு நாட்களாக சர்வ ஜாக்கிரதையாக ஹோமத்தை நடத்திய வேத விற்பன்னருக்கு அன்றைய தினம் தூக்கம் வந்து விட்டது! அவருடைய கை மட்டும் அனிச்சையாக திரவியங்களை எடுத்து, அனிச்சையாக அக்னியில் சேர்த்த வண்ணம் இருக்கிறது!

யாகம் நடத்தும் போது தூங்கக் கூடாது என்பது சாஸ்திரம். நடத்துபவரும் தூங்கக் கூடாது அதைப் பார்ப்பவரும் தூங்கக்கூடாது. ஆனால், அப்போதுதான் கட்டாயமாகத் தூக்கம் வரும்! உணவு கொள்ளாமல் விரதமாக இருந்து யாகம் நடத்தும் போதே தூக்கம் வரும்! அதைக் கட்டுப்படுத்தித் தொடர வேண்டும்.

அரசன் பார்த்துக் கொண்டே இருக்கும் போது, யக்ஞம் பண்ணுகிறவர் தூங்கினார்! அவரை எப்படி எழுப்பலாம் என்று பார்த்த மன்னன், செங்கோலால் அந்த வேத விற்பன்னரைத் தட்டுகிறான்....

அந்தத் தூக்கத்திலும் அவருக்கு ஸ்வப்னம் வந்திருக்கிறது! புலி துரத்துகிற மாதிரி ஸ்வப்னத்தில் வந்த அதே சமயத்தில் மன்னன் செங்கோலைக் கொண்டு முதுகில் ஒரு குத்து குத்த, ஸ்வப்னத்தில் புலி அப்போதுதான் அவர் மேல் பாய....

"ஹா! புலி!" என்று அலறியபடி பிரதான அக்னி குண்டத்திலே விழுந்து விட்டார்: பஸ்மமாகப் போய்விட்டார்!

அசுவமேத யாகம் பண்ணினால் பிரும்மஹத்தி தோஷம் நீங்கும் என்கிறது வேதம். ஆனால் இந்த அரசனோ, அசுவமேத யாகம் பண்ணப் போய் பிரும்மஹத்தியை மூட்டை கட்டிக் கொண்டான்!

யாகத்திலே இப்படியெல்லாம் தவறுகள் நடந்தால் கர்த்தா நாசத்தை அடைவதுடன் பார்க்கிறவர்களும் கஷ்டத்தை அடைகிறார்கள்.

ஹோமத்திலே புகை இருக்கக்கூடாது. அக்னி ஜொலிக்காத போது மேலே ஹவிஸைப் போட்டுக் கொண்டேயிருக்கிறார் ஒருத்தர்! இவ்வாறு போடுகிறவர் குருடராகிறார்! அதைப் பார்க்கிறவர்களுக்கும் பார்வை போகிறது!

ஹோம குண்டத்தில் நான்கு புறமும் தர்ப்பை போடுவது உண்டு. இப்படி நாலு பக்கமும் போடுகிற பரிஸ்தரணத்திலே முப்பது முக்கோடி தேவர்கள் உட்கார்கிறார்களாம். நமக்கும் இந்த தேவர்களுக்கும் இடையே பூதகணங்கள் உட்கார்ந்திருக்குமாம்.

அதனால்தான் பரிஸ்தரணத்துக்கு வெளியே எதுவாவது விழுந்து விட்டால் அதை அக்னியிலே சேர்க்கக் கூடாது என்று சொல்வார்கள். அப்படிச் சேர்த்தால் யாகம் கெட்டுப் போய்விடும். ஏனென்றால் இடம் தப்பி விழும் பொருள் பூதகணங்கள் உட்காரும் இடத்தில் விழுகிறது. அதைக்கூட பூதகணங்களுக்கென்றே அப்படி விழும்படியாகப் பண்ணுவது அக்னி பகவான்தான்!

பூர்வ காலத்திலே மஹரிஷிகள் ஹோம குண்டம் தயாரித்து, கையைக் காண்பித்தாலே அக்னி உண்டாகிவிடும். இது மிகவும் உயர்ந்த நிலை. இரண்டாவது நிலை : அரணியைக் கடைந்து அக்னி உண்டாக்குவது. மூன்றாவது நிலை, ஏதேனும் ஒரு முறையைப் பயன்படுத்தி அடுப்பிலிருந்து தணல்கள் எடுத்து வந்தோ, கற்பூரத்தை ஏற்றியோ - அக்னி உண்டாக்குவது.

முறையாகப் பண்ணப்படும் யக்ஞத்தில் மூன்று அக்னிகளுக்கிடையே பகவான் உபாஸிக்கப்படுகிறான். அக்னிக்கு இடையிலே பரமாத்மா காட்சியளிக்கிறான்.

இப்படி முறையாகச் செய்யப்படும் அசுவமேத மஹா யக்ஞத்திலே உலக க்ஷேமத்தைப் பிரார்த்திக்கும் மந்திரம் இருக்கிறது. அதனால்தான் தெற்கே பித்ரு தேவதா காலங்களிலும், வடக்கே மாங்கல்ய தாரணத்தின் போதும் இதைச் சொல்கிறார்கள்.

தினமும் 1008 காயத்ரி சொல்வதால் இரண்டு புருவங்களுக்கும் மத்தியிலே தேஜஸ் உடையவர்களான வேத வித்துக்கள் இந்த அசுவமேத யாகத்தைச் செய்ய வேண்டும்.

சத்புத்ரன் பிறக்க வேண்டியும், மழை வேண்டியும், தானியங்களின் விளைச்சல் வேண்டியும் இந்த யாகம் செய்யப்படுகிறது. உலகத்தில் உள்ள எல்லோருக்கும் யோக க்ஷேமம் வேண்டிச் செய்யப்படுகிறது.

யோகம் என்பது வேறு; க்ஷேமம் என்பது வேறு.

கிடைக்காதவையெல்லாம் கிடைப்பது யோகம்; கிடைத்த செல்வங்களெல்லாம் தங்கி நிலைத்திருப்பது க்ஷேமம்.

உலகத்தில் அத்தனை பேருக்கும் யோகமும் க்ஷேமமும் உண்டாகட்டும் என்கிறது அந்த அசுவமேத யாகம். இப்படிப்பட்ட உசத்தியான யாகத்துக்குத்தான் அந்த விச்வம் போனது....!

(தொடரும்)

சுஜாதா பக்கம்



உயிர் என்பது என்ன? நாம் எப்போது உயிர் பெறுகிறோம்? பிறக்கும் போதா இல்லை சூலுறும் போதா இல்லை அதற்கும் முன்னாலா என்று கேள்வி கேட்கவைக்கிறது. டைம்ஸ் பத்திரிகை செய்திக் குறிப்பு ஒன்று. (இதை வழக்கறிஞர் டி.வி.ஏ. ராமானுஜம் அவர்கள் எனக்கு அனுப்பியிருந்தார்.)

'இன்விட்ரியோ' முறை வந்து, கர்ப்பப் பைக்கு வெளியே ஆணின் விந்துவும் பெண்ணின் முட்டையும் ஒரு பெட்ரி டிஷ்ஷில் சேர வைத்து மீண்டும் தாயின் கர்ப்பப் பைக்குள் வைக்கும் வசதி வந்ததும் பிரிட்டனில் உள்ள கிளினிக்குகளில், ஐம்பதாயிரம் எம்ப்ரியோ என்னும் கருமுட்டைகள் உறைய வைக்கப்பட்டு, சூலுறத் தயாராக இருக்கின்றனவாம். இவற்றில் ஒன்பதாயிரம் ஐந்து வருஷங்களாகக் காத்திருக்கின்றனவாம். 1990ல் பிரிட்டனில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கருவுறாத எம்ப்ரியோக்களை அழித்து விடலாம் என்று சட்டம் கொண்டு வந்தார்கள்.

இன்விட்ரியோ எப்போதும் வெற்றி பெறுவதில்லை. அதனால்தான் தேவைக்கதிகமாகவே முட்டைகள் கைவசம் வைத்திருப்பது வழக்கம். அதனால் சேர்ந்து போன கருக்களை என்ன செய்வது என்று தர்மசங்கடம். இவை ஒரு மணற்துகள் அளவுதான் இருக்கும். இருந்தும் இவை எல்லாம் உயிர்கள் என்கிறது வாட்டிக்கனின் கத்தோலிக்க மத்தலைமை. அதனால் இவற்றைத் 'தத்து' எடுத்துக் கொள்ள இத்தாலியில் நூற்றுக்கணக்கான பெண்கள் தயாராக இருக்கிறார்களாம்.

நிசமாகவே இவை உயிரா? அல்லது உயிராகக் கூடிய சாத்தியமுள்ள முன்னுயிர்களா? இவற்றை அழிப்பதால் உயிரை அழிக்கிறோமா?

அறிவியல் தரும் விடையின்படி உயிர் என்பது ஒரு செல், கூட்டணு. ஆர்.என்.ஏ., டிஎன்ஏ, க்ரோமோசோம், ப்ரோட்டின் கொண்ட ஒரு மிகப் பெரிய கூட்டணு. அதில் கார்பன், நைட்ரஜன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் இவைதான் சரம்சரமாக உள்ளன.

உயிருள்ள கூட்டணுவுக்கும் உயிரற்ற கூட்டணுவுக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம் 'ரெப்ளிக் கேஷன்' படியெடுக்கும் திறமை. செல் பாதியாகப் பிரிந்து, தன் சுற்றுப்புறத்தில் உள்ள அணுக்களுடன் சேர்ந்து, ஒன்று இரண்டாகிறது. இரண்டு நாலாகிறது. அது என்ன செல் என்கிற செய்தி, அதன் ரசாயன அமைப்பிலேயே பொதிந் திருக்கிறதன்படி கண்ணாகிறது; தோலாகிறது; ரோமமாகிறது; நகமாகிறது. மனிதப் பிறப்பில் பெண் தரும் முட்டைக் கரு தானாகவே இந்த இரட்டிப்பு நிகழ்ச்சியைத் தொடங்குவதில்லை. ஆணின் விந்து வரக் காத்திருக்கிறது. அது நுழைந்ததும்தான் இதில் பாதி அதில் பாதி என்று செய்திகளைக் கொண்டு தன் இரட்டிப்பைத் தொடங்குகிறது.

எனவே, பெண்ணின் முட்டைக் கரு முழு உயிர் அல்ல; அரை உயிர். அறிவியல் உயிரின் ரகசியத்தைக் கண்டு பிடிக்குமா? செல்களின் கட்டட அமைப்பு, அவை இரட்டிக்கும் விதம், டி.என்.ஏ., வம்ச அடையாளங்களில் டி.என்.ஏ.வின் பங்கு, நம்முன் இருக்கும் நோய்த்தடுப்பு முறைகள் இவற்றையெல்லாம் அறிவியல் அறிந்திருக்கிறது. ஆனால் உயிரின் ரகசியத்தை அறிந்து கொள்ள அறிவியல் மட்டும் போதாது; மற்றொரு ஞானம் தேவை என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். எத்தனை அறிவு பெற்றாலும் உயிரின் ரகசியத்தை அறியவே முடியாது என்கிறார்கள்.

இது ஒரு ஆழமான தத்துவ விசாரம். பார்த்து, அறிந்து, வியக்க முடிகிறதே தவிர, காரணம் என்ன என்பதற்கு, அறிவியல் விடை தருவதில்லை. வேதாந்தத்திலோ கடவுள் தத்துவத்திலோதான் பதில் கிடைக்கும் எனத் தெரிகிறது.

> உயிர் என்பது ஒரு செல், கூட்டணு. ஆர்.என்.ஏ., டிஎன்ஏ, க்ரோமோசோம், ப்ரோட்டின் கொண்ட ஒரு மிகப் பெரிய கூட்டணு. அதில் கார்பன், நைட்ரஜன், ஹைட்ரஜன், ஆக்சிஜன் இவைதான் சரம் சரமாக உள்ளன.

(மீண்டும் அடுத்த வாரம்)

எனக்கென்று ஓர் இடம்

நிச்சயதார்த்தம் நடக்கும் பொழுது ராஜேஷின் வீட்டில் ஒரே கட்டளை அதுதான்.

"எங்கள் பையனுக்கு வரதட்சணை கூட வேண்டாம். அவனுக்கு நண்பர்கள் அதிகம். வர்றவங்களை நல்லவிதமா கவனிச்சு அனுப்பினாலே போதும். கல்யாணம் க்ராண்டா நடந்தா சரி."

கேட்கும் பொழுது ரொம்ப சாதாரணமாகத்தான் இருந்தது சுசீலாவின் குடும்பத்தாருக்கு.

பஸ்ஸிலும் பின்னே தனியாக இரண்டு வேன்களிலும் வந்து இறங்கிய இளைஞர் பட்டாளத்தைப் பார்த்ததும், அடிவயிறு கலங்கியது, எப்படி சமாளிக்கப் போகிறோம் என்று.

தங்குவதற்கு என்று தனியாக ஒரு கல்யாண மண்டபம் பிடித்து இருந்தது வசதியாகப் போனது.

"ராஜேஷ்... உன் வுட்பி தூள்... சுசீலாங்கறே.. நல்லாப் பாடுவாங்களா.." ஒல்லியாக அப்பாவி முகத்துடன் இருந்த ஒருவன் கேட்டதும் கூட்டம் சிரித்தது.

உறை கழற்றி நாதஸ்வர கோஷ்டியினர் உற்சாகமாக வாசிக்க ஆரம்பிக்க...

இரண்டு மாமிகள் வாசலில் கோலத்தை அழகுபடுத்த...

சமையல்கட்டிலிருந்து கேசரியின் மணம் மூக்கைத் துளைக்க...

அப்பாவும் அண்ணனும் ஓடி ஓடி உபசரித்துக் கொண்டிருந்தனர்.

வாசலில் கார் வந்து நிற்கும்போதெல்லாம் பரபரப்பு... யார் வருவது...

"அபி... நீ போய் டிபன் வந்ததான்னு கேட்டுட்டு வந்துடும்மா..."

"அண்ணன் தானே கொண்டு போனார். அப்புறம் நான் எதுக்கு..."

"அட லேடீஸ்ல யாராவது போய் விசாரிக்கணும்.. போம்மா..."

தயங்கித் தயங்கி நடந்தாள். இதற்கு என்ன நக்கல் செய்யப் போகிறானோ மூர்த்தி... சே!

"டிபன் வந்ததா... காப்பி சாப்பிட்டாச்சா?"

அந்த அமளியிலும் சுசீலாவின் தங்கை அபிநயாவிற்கு சிரிப்பு வந்தது.

"தங்க இடம் வசதியா இருக்கா..." விசாரிக்கப் போனவளை...

"தாராளமா... இருக்கு. இங்கேயே எங்க ஃப்ரெண்ட்ஸ்ல ஒருத்தனுக்குக் கல்யாணம் நடத்தலாம். அவ்வளவு வசதி... மீண்டும் அதே இளைஞன் கிண்டலுடன் பதில் சொல்ல...

"சும்மா இருப்பா மூர்த்தி... பெண் வீட்ல தப்பா நினைச்சுடப் போறாங்க" ராஜேஷின் அப்பா சொன்னதும் அபிநயாவிற்கு சமாதானமாக இருந்தது.

சுசீலா சந்தோஷ முகத்துடன் வளைய வந்து கொண்டிருந்தாள்.

"ஓ..."

"வேற ஏதாவது வேணுமா..."

"நீங்க...." மூர்த்தி இழுத்தான்.


"என்ன..." கொஞ்சம் கோபம்.

"நீங்க கேட்டதே போதும். டிபன் எல்லாம் ரொம்ப அமர்க்களம்."

சட்டென்று கோபம் அடங்கிப் போனது. எப்படி மாற்றி விடுகிறார்கள் வார்த்தையை. திருநெல்வேலி சாமர்த்தியம் என்றால் இது தானோ...?

"என்னம்மா... லைன் க்ளியர் ஆகப் போகுதா..."

யாரோ ஒரு நடுவயதுப் பெண் அபிநயாவைக் கேட்-





நா. நாகராஜன்

டது சரியாகப் புரியாமல் "ம்..." "ம்..." என்றபடி நடந்தாள்.

கல்யாணம் முடிந்து மாப்பிள்ளை வீட்டார் போவதற்குள் மூர்த்தியைப் பார்த்துப் பேசிவிடுவது என்று நினைத்துக் கொண்டாள்.

ஜானவாசம் முடிந்ததும் சாப்பிட்டுவிட்டு காதல் கோட்டை படத்திற்குப் பாதிக் கூட்டமும் சீட்டு விளையாட்டைத் தொடர பாதிக் கூட்டமும் போனதும் அபிநயாவிற்கு நிம்மதியாக இருந்தது.

சுசீலாவைச் சுற்றி அவள் தோழிகள் கிண்டலடித்தபடி இருந்தனர்.

அப்பா பணப் பையுடன் நடமாடிக் கொண்டிருந்தார்.

"என்ன மச்சி, ரூம் மட்டும் தான் போட்டு இருக்கியா... வேறு வசதி ஒண்ணும் பண்ணலியா...'' அண்ணனிடம் ஒரு சிறு கூட்டம் விசாரித்துக் கொண்டிருந்தது.

வரதட்சணை வேண்டாம் என்று சொல்லி விட்டு இப்படி கும்பலுடன் வந்து செலவு செய்ய வைப்பதும், சஃபாரி எடுத்துத் தரச் சொல்வதும் வரதட்சணை கொடுப்பதை விட கஷ்டமான காரியம் என்று அபிநயா நினைத்துக் கொண்டாள்.

''எவ்வளவு ஃபிரண்ட்ஸ் பார்த்தியாம்மா உன் மாப்பிள்ளைக்கு...''

''பிஸினஸ்



மாலைமதியின் மறுபக்கத்தில் மறைந்திருப்பதென்ன?

கண்டு பிடியுங்கள் இந்த நவராத்திரி நாட்களில்.


நவராத்திரி.

நல்லவற்றை பகிர்ந்து, பிறர் நலனையும்
போற்றச் சொல்லும் நன்னாள்.

உற்றார், உறவினர் மற்றும் நண்பரை கண்டு மகிழும்
இந்த நாட்களில், உங்கள் வெற்றியின் ரகசியத்தையும்
அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
ஆம் ஸ்ரீராம் சிட்ஸ்தான்.

குடும்பத்தில் ஒரு திருமணத்தைத் திட்டமிட்டு,
உங்கள் குழந்தையின் மேற்படிப்புக்கு
தொகை ஒதுக்கி, திடீரென ஏற்பட்ட மருத்துவ
செலவையும் கலங்காது நீங்கள் எதிர்கொள்ள
ஸ்ரீராம் சிட்ஸ் செய்த உதவியை கூறிடுங்கள்.

இழப்பற்ற, அதிக லாபம் தரும்



''ஓட்டப்பந்தயத்தில் ஏகப்பட்ட சாதனைகள் பண்றீங்களே, எப்படி முடியுது உங்களாலே?''

''இதுக்கு முன்னால நிறைய ஊர்ல ஃபைனான்ஸ் கம்பெனி நடத்தியிருக்கேன்...''

— நெய்வேலி ஜீவி

பண்றவர். பழக்கம் இருக்கத்தானே செய்யும்...'' அம்மா விட்டுக் கொடுக்காமல் பேசினாள்.

காலையில் மாப்பிள்ளை காசியாத்திரை கிளம்பும் பொழுது குளித்து ட்ரெஸ் செய்து ஃப்ரெஷ்ஷாக வந்து இறங்கியது நண்பர் குழாம்.

"காசிக்கா மாப்பிள்ளே..."

"ம்..."

"வேன்லயே போய்டலாமே..." மீண்டும் மூர்த்தி.

"வழில மாமனார் தேங்கா கொடுத்து மடக்கிடுவார்..."

"நீ அவருக்கு அல்வா கொடுத்திடு..." அலை அலையாய்ச் சிரிப்பு.

சாஸ்திரிகளும் சிரித்துக் கொண்டார்.

"ஏம்பா... வீடியோகிராபர், அறுநூறு மைல் தூக்கம் முழிச்சு கல்யாணம் பார்க்க வந்திருக்கோம். நீ மறைச்சுக்கிட்டு நின்னா எப்படி..."

அவர் திரும்பிப் பார்த்தார்.

"சாரி... நான் எல்லா ஃபங்ஷனும் கவர் பண்ணணும். ரெண்டு கேமிரான்னாலும் எதுவும் மிஸ் ஆயிடக்கூடாது இல்லையா..."

"சரி... மிஸ் ஆனா நாங்க கவனிச்சுக்க றோம்... எங்க கேமராவால..."

ராஜேஷுடன் ஊஞ்சலில் சுசிலா உட்கார்ந்து ஆடும் போதும் கிண்டல்.

"மாப்ளே... இப்படி ஆடிக்கிட்டே இருந்தால் போதும்னு தோணுமே. உறவு... நட்பு எல்லாம் அப்படியே காணாமல் போய் நீங்க ரெண்டு பேர் மட்டும் இருந்தால் போதும்னு தோணுமே..."

பச்சைப் பொடி – சாத்து உருண்டை – பெண் மாப்பிள்ளை தலையைச் சுற்றிப் போடும் போதும் கமெண்ட்...

"ராஜேஷ்... உன் தம்பி கிரிக்கெட் பிளேயர். ஒண்ணு விடாம கேட்ச் பண்ணிட்டான்."

சிரிப்பு.

"நம்ம மேல உருண்டை விழுந்தா சீக்கிரம் கல்யாணம் நடக்கும்..."

"கல்யாணம் ஆனவங்களுக்குமா..."

"ஆசையைப் பாரு. மாமி கூட வராத தைரியமா... நாளைக்கு காலம்பற முத வேளையா மாமிகிட்டே போய் இதைத்தான் சொல்லப் போறேன். நேத்து ராத்திரி தண்ணி அடிச்சிட்டு தூங்கியதை தலைல கட்டிண்டதைக் கூட இன்னொரு நாள்தான் சொல்லுவேன்..."

தாலி கட்டி முடித்ததும் ஒரு கட்டு பேப்பரை விநியோகம் செய்தார்கள்.

பிரம்மச்சாரி சங்கத்திலிருந்து கட்சி மாறிய மாப்பிள்ளையைச் சாடுவது மாதிரி கிண்டலடித்து இருந்தார்கள்.

பரிசளிக்கும் சமயத்தில் ஆளாளுக்கு விலை உயர்ந்த சாமான்களை அளிக்கும் போது அவர்களின் வசதி புரிந்தது அபிநயாவிற்கு.

கல்யாணம் முடிந்த திருப்தியில் அப்பா அம்மா...

கூட்டத்தில் வந்த ஒரு பெண் தோழியுடன் பேசிக் கொண்டு அண்ணன்.

கணவனிடம் தன் தோழியை அறிமுகப் படுத்திக் கொண்டு சுசிலா.

தனித்தனியே வீடியோவிலும் போட்டோவிலும் பதிவு.

கொஞ்ச நேரம் கிடைத்தது அபிநயாவிற்கு. மூர்த்தியிடம் பேசிப் பார்த்தால் என்ன...

இதற்கும் அவர்கள் கிண்டலடிப்பார்களா? நல்ல நேரத்திற்கு மூர்த்தி இன்னும் ஒரு காப்பி குடிக்க சமையல் ரூமிற்கு வந்தான்.

"ஹலோ மூர்த்தி..."

"ஹலோ அபிநயா. ரொம்ப சந்தோஷம். ரொம்ப க்ராண்டா அரேன்ஜ் பண்ணி இருந்தீங்க. ராஜேஷ் கல்யாணம் மறக்க முடியாதபடி க்ராண்ட்..."

"தேங்க்ஸ் மூர்த்தி. பட்... உங்க கிண்டல் சில சமயம் ஓவர். உங்க நகைச்சுவை உணர்வை மதிக்கறேன். ரசிக்கறேன். அது அடுத்தவங்களைக் காயப்படுத்தாத வரை..."

"சாரி... அபிநயா. எனக்குக் குடும்பத்தில பிரச்னை ஜாஸ்தி. ரெண்டு அக்கா, அண்ணன் கடைசியா நான். யாருக்கும் இன்னும் கல்யாணம் ஆகலை. என் வயசு முப்பது. எப்போ நடக்கும்னு தெரியலை. அதான் இந்த மாதிரி கல்யாணத்துல கலாட்டா பண்ணி எனக்கும் ஒரு இம்பார்டன்ஸ் கிடைக்க ட்ரை பண்றேன். பட் என் கமெண்ட்ல யாராவது புண்பட்டிருந்தா சாரி. இனி, நான் இது மாதிரி செய்ய மாட்டேன்..."

அதுவரை பார்த்த மூர்த்திதானா அது...

"இல்லே மூர்த்தி நீங்க ஜோக் அடிங்க. அதுல தப்பில்லை... என்றாள் அபிநயா திருப்தியுடன்.


புதிய

KKR

இந்தியாவின் முதல் முத்திரைப் பெற்ற பாமாயில்.

நவீன விஞ்ஞான முறையில் சுத்திகரிக்கப்பட்டது

போஷாக்கூட்டும் சமையல் எண்ணெய்



தாய்ப் பாலுக்கு சமமானது என நிரூபிக்கப்பட்ட கே.கே. ஆர் பாமாயில் தனித்தன்மை வாய்ந்தது. இதர சமையல் எண்ணெய்களிலிருந்து பல வகையில் மாறுபட்டது. பாமாயில் பாம் பழத்திலிருந்து பிழிந்தெடுக்கப்படுகிறது.

வைட்டமின் A & E இரண்டையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளதால் உயிரணுக்கள் சேதம் அடையாமல் பாதுகாத்து உடல் நலம் சீராக இருக்க உதவுகிறது. மாரடைப்பு, புற்றுநோய் மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படக்கூடிய அபாயத்தை குறைக்க வல்லது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.



கே.கே.ஆர் பாமாயில் விற்பனை நிலையத்தில் ரூ.28.50 (1 லிட்.) பாக்கெட் ரூ.32.00 (1 லிட்.)

சென்னையிலும் அதன் புறநகர் பகுதிகளில் மட்டும் கிடைக்கிறது

* கே. கே. ஆரின் செம் பனை பண்ணையில் இரண்டு யூனிட் (10 செண்ட் ஒரு யூனிட்) வாங்குபவருக்கு, ஒரு வருடத்திற்கு மாதந்தோறும் ஒரு லிட்டர் கே.கே. ஆர் பாமாயில் இலவசமாக வழங்கப்படும்.

KKR பாமாயில் (இந்தியா) லிட்.,

NO. 121, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு), பெரம்பூர், சென்னை 600 011. Ph: 5375456, 5376796.

கே.கே.ஆர் பாமாயில், தாய்மை மற்றும் முழு குடும்பத்தின் ஆரோக்கியம்

ஜூனியர் விகடனில் நாற்பது வாரங்களுக்கு 'இது ராஜபாட்டை அல்ல' என்ற தலைப்பில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தொடரை எழுதினேன். அப்போதே 'இந்தத் தொடருக்காக நான் பணம் பெற்றுக் கொள்ள மாட்டேன்' என்று தெளிவாகச் சொல்லியிருந்தேன்.

தொடர் முடிந்ததும் எனக்கு 3500 ரூபாய்க்



வி.ஐ.பி.க்கு வந்த கடிதங்கள் : நடிகர் சிவகுமார்

அன்புள்ள சிவகுமார் அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் திரு. மதன் அவர்களுக்கு எழுதியிருந்த 3.10.87 கடிதமும், இரண்டு காசோலைகளும் கிடைக்கப் பெற்றேன்.

1983-ம் ஆண்டு நாங்கள் உங்களுக்குக் கொடுத்த ஒரு காசோலையை காசாக்காமலேயே திருப்பியனுப்பியிருக்கிறீர்கள். ஆச்சர்யமாக இருந்தது! எங்கோ ஒரு மூலையில் சற்று வேதனையாகவும் இருந்தது.

எழுத்துக்குக் காசு அனுப்புவது அந்த எழுத்தின் விலையாகாது! ஏனென்றால், எழுத்தின் விலையை அதன் அளவைக் கொண்டு கணிக்க முடியாது! கீதையின் ஒரு சுலோகத்திற்கு அட்சர லட்சம் கொடுக்கலாம். அதே ஒரு பயனற்ற தொடர்கதைக்கு ரூ. 100 கொடுப்பதே அதிகம். இருந்தும் ஏன் எழுத்திற்கு பணம் கொடுக்கிறீர்கள், அதுவும் அளவை வைத்து என்று கேட்கலாம். நல்ல கேள்வி. அதற்கு ஒரே பதில், எழுத்தை வாங்கி, அதை விற்பதே பத்திரிகையின் வியாபாரம். அதுவே எங்கள் தர்மம்.

சினிமாவில் நடிப்பது உங்கள் வியாபாரம் - தொழில். அதில் இனாமாக நடியுங்கள் என்று கேட்டால் முடியுமா! சம்பளத்தை வேண்டுமானால் குறைத்துக் கொள்கிறேன் என்று சொல்லலாம். சம்பளம் இல்லாமல் நடிக்கச் சொல்வதும் சரியாகாதே! (கௌரவ தோன்றல் தவிர).

உங்கள் தொழிலைத் தவிர இதர உடல் சிரமங்களுக்குச் சம்பளம் வாங்குவதில்லை என்பது உங்கள் கொள்கை என்றும் தெரியும். உங்களைப் பொறுத்தவரை அது நியாயமே. ஆனால், எங்கள் தர்மத்தையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இனாமாக எழுத்தைப் பெற்று வியாபாரம் செய்யலாமா? அது எங்களுக்கு இழுக்கல்லவா?

''எழுத்துக்குச் சன்மானம் வாங்கும் நிலையை விட வசதியாகவே ஆண்டவன் என்னை

கான காசோலை ஒன்று விகடன் நிர்வாகத்தினரால் அனுப்பப்பட்டது.

'உங்கள் வாசகர்களிடம் – முக்கியமாக இளையதலைமுறையினரிடம் – என் கருத்துக்களை வெளியிட ஓர் அரிய வாய்ப்பைத் தந்ததற்காகவே நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். பணம் கொடுத்து என்னை மேலும் கடனாளி ஆக்கி விடாதீர்கள். எழுத்துக்குச் சன்மானம் வாங்கும் நிலையை விட வசதியாகவே ஆண்டவன் என்னை வைத்திருக்கிறான்' என்கிற வகையில் விகடனுக்கு ஒரு கடிதம் எழுதி, கூடவே அந்தக் காசோலையையும் திருப்பி அனுப்பியிருந்தேன்.

சில நாட்களில் விகடன் ஆசிரியரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கூடவே ஒரு ரூபாய்க்கான காசோலை ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் என்னை அசரவைத்தது. நடிப்பு வாசனையே தெரியாத எனக்கு ஏவி.எம்., ஜெமினி ஆகிய நிறுவனங்கள் தாய்வீடு போல. திரு. வாசனின் இயக்கத்தில் 'மோட்டார் சுந்தரம் பிள்ளை' படத்தில் சில காட்சிகள் நடித்திருந்தேன். ஜெமினி நிறுவனம் தயாரித்த 'விளையாட்டுப் பிள்ளை' படத்திலும் நடித்திருக்கிறேன். படத் தயாரிப்பு முடிந்தவுடன் 'உங்கள் ஒத்துழைப்புக்கு என் நன்றி' என்று தம் கைப்படவே அந்தத் திரையுலக மேதை எனக்குக் கடிதம் எழுதியதுண்டு. அவர்களின் பெருந்தன்மையை ஒரு நடிகனாக ஏற்கெனவே அனுபவித்தறிந்திருந்தேன். ஓர் எழுத்தாளன் என்கிற முறையில், அதே குடும்பத்தினரின் பெருந்தன்மையை நான் உணர இந்தக் கடிதம் எனக்கு உதவியது.

தொகுப்பு :

அருண்சரண்யா

என்னை அசரவைத்த கடிதம்!

வைத்திருக்கிறான்" என்ற உங்கள் வாதத்திற்கேற்பவே, 'எழுத்தை இலவசமாக வாங்கும் நிலையை விட வசதியாகவே ஆண்டவன் ஆனந்த விகடனை வைத்திருக்கிறான்' என்று நாங்களும் வாதிக்கலாமல்லவா?

தயவுசெய்து மேலே கூறியவை தங்களைப் புண்படுத்த அல்ல. மனவருத்தம் கொள்ளாதீர்கள். எங்கள் நிலையை சிந்தித்துப் புரிந்து கொள்ளுங்கள்.

எந்த வேலைக்குமே ஊதியம் பெற்றால்தான் அந்த வேலையின் மீது அவர்களுக்கு சட்டப்படி உரிமை பிறக்கிறது. அதற்காகவே, உங்கள் தொடரின் மீது உங்களுக்கு முழு சட்ட உரிமை ஏற்படுத்தும் வகையில் ஒரு காசோலையை இணைத்திருக்கிறேன். அதன் மதிப்பு ரூபாய் ஒன்றுதான். தயவுசெய்து ஏற்றுக்கொண்டு எங்களை கௌரவியுங்கள்.

சினிமாத் துறையை விட்டு முழுவதுமாக விலகிப் பத்து ஆண்டுகள் ஆகியும் அத்துறையில் உள்ள சில நல்லோரை என் மனம் மறந்ததேயில்லை. அதில் நீங்களும் ஒருவர்.

நன்றி.

இப்படிக்கு,

எஸ். பாலசுப்ரமணியன்.

இந்திர தனுசு

41. சீனத்து விசாரணை!

பெரும் காளைகள் பூட்டப்பட்ட அந்த எட்டு வண்டிகளும் தில்லையிலிருந்து தஞ்சையை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தன. ஓலைச் சுவடிகளுக்கும் அந்த வண்டிகளுக்கும் எந்த அபாயமும் நேரக் காரணமில்லையென்று தீர்மானித்திருந்ததால் பேரமைச்சர் நான்கு காவலர்கள் போதுமென்றே எண்ணியிருந்தார். காவலர்கள் அந்த ஓலைச் சுவடிகளில் பொதிந்திருந்த அறிவைப் பற்றி உணராததால் சற்று அசட்டையாகவே பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

கதிரவன் மேற்கில் சரியத் தொடங்கி விட்டதால், கொள்ளிடத்தைக் கடந்த வண்டிகளை, நேராக குடந்தையை நோக்கிப் பிரதானசாலையில் செலுத்தாமல் 'கரையோரமாகவே செலுத்தினர். பிறகு தெற்கில் திரும்பி, தஞ்சையை அடைந்து விடலாமென்று காவலர்கள் எண்ணினார்கள். ஆற்றை ஒட்டி வளர்ந்திருந்த மரக் கூட்டங்களில் காத்திருந்த அபாயத்திற்கு அந்த முடிவு அழைப்பு விடுக்குமென்பதை அவர்கள் உணர ஆரம்பித்த போது, நிலைமை கட்டு மீறிச் சென்று விட்டிருந்தது.

கொள்ளிடக்கரையை ஒட்டி நீண்டிருந்த பாதை சற்று கரடு முரடாக இருந்தாலும், வலதுபுறத்தில் சலசலத்து ஓடிய நீர்ப்பரப்பு மாலை வெயிலில் தங்கத் தகடாக மின்னிக் கொண்டிருக்க, இருபுறமும் செழித்துக் கிடந்த கோரைகளினூடே வெள்ளைக் கொக்குகளும் நாரைகளும் கடும் தவத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அவற்றின் தவத்தைக் கெடுக்க முயன்ற கிளிகளும் மைனாக்களும் பெரும் இரைச்சலுடன் ஆற்றோரத்துத் தோப்புகளிலிருந்து ஜிவ்வென்று கிளம்பி, நீர்ப்பரப்பின் மீது பறந்து, வட்டமடித்து, மீண்டும் தோப்புகளை நோக்கி இறங்கின. குறுக்கிட்ட சிறு கிராமங்களும், தலை சாய்த்துக் கிடந்த வயல் வெளிகளும் பார்வைக்கு மிக ரம்மியமாகவே தெரிந்தன. மெல்ல இருள் கவியத் தொடங்கியிருந்தது.

சலங்கைகள் ஒலிக்கச் சென்று கொண்டிருந்த காளைகள் திடீரென நின்றன. பின்னால் வந்து கொண்டிருந்த காவலர்கள், வண்டிகள் நின்றதன் காரணத்தை அறியும் பொருட்டு புரவிகளைத் தாண்டி முற்பகுதிக்கு வந்ததும் திகைத்தனர்.

பாதையின் குறுக்கே பல புரவிகள் நின்றிருந்தன. நடுவிலிருந்த புரவியில் காடவராயனையும், மற்ற காடவ வீரர்களையும் கண்ட காவலர் நால்வரும் வாட்களை உருவிக் கொண்டு முன்னால் பாய்ந்தனர். ஆனால் எண்ணிக்கையில் அதிகமாயிருந்த காடவ வீரர்களின் மூர்க்கமான தாக்குதல்களில், நான்கே காவலர்களும் வெறும் கழிகளுடன் காவலருக்கு உதவ முற்பட்ட வண்டியோட்டிகளும் ஈடு கொடுக்க இயலாததால், நாழிகை நேரத்தில் அந்தச் சிறு சண்டை முடிந்து போனது. தனது வீரர்களை வண்டியோட்டிகளாக்கி, தானே தலையில் சுற்றிய முண்டாசுடன் வண்டிகளில் அமர்ந்த காடவராயன், எஞ்சிய வீரர்களைத் தஞ்சைக்கு வந்து சேரவும், அரண்மனையில் புகையும் நெருப்புத் தோன்றும் அடையாளத்தை வைத்து ஒன்று கூடவும் உத்தரவிட்டு, வண்டிகளை மீண்டும் தஞ்சைப் பாதையில் செலுத்த ஆரம்பித்தான்.



தஞ்சை அரண்மனை மேன்மாடத்து உப்பரிகையில் அமர்ந்து, எதிரி

லிருந்த பூங்கோதையை நோக்கிய கொங்கு மன்னன் அவந்தனின் மனம் நிறைந்து கிடந்தது. மகளிடம் பரிவு தொனித்த குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தவன், வாசலில் ஒலித்த திடமான காலடியையும், கனத்த குரலையும் கேட்டதும் பதறி எழுந்தான். உள்ளே நுழைந்த துறவியாரைக் கண்ட அவன் முகத்தில் இலேசான படபடப்பும் சற்று அச்சமும் கூடத் தெரிந்தன.

அவனது அதிகப்படியான மரியாதையையும், படபடப்பையும் கவனித்த துறவியார் நிதானமாக இருக்கையில் அமர்ந்தபடியே அவனையும் அமரப் பணித்தார். அடுத்து சம்பந்தமே இல்லாத கேள்வியொன்றும் அவரிடமிருந்து உதிர்ந்தது.

"அவநிதா, உனக்கு சுப்ரதீபத்தைப் பற்றித் தெரியுமா?"

"தெரியும் துறவியாரே, சோழ மன்னரின் பட்டத்து யானை சுப்ரதீபம். பல போர்க் களங்களைக் கண்ட போர்க்களிறு" என்றான் அவநிதன்.

"ஆம். சர்வ லட்சணங்களும் பொருந்திய போர்க்களிறு அது. அதற்கு ஒரு வயது கூட நிரம்பாத நிலையில்தான் தஞ்சைக்கு வந்து சேர்ந்தது. அப்போது அதை அரண்மனைக்குப் பின்புறத்தில் கொட்டடிக்கு வெளியே சிறிய வேங்கை மரக் கன்று ஒன்றில்தான் கட்டிவைப்பார்கள்."

துறவியார் எதற்காக இதைக் கூறுகிறார் என்பதை அறியாத அவநிதனின் விழிகளில் குழப்பம் தெரிந்தது. "ஆம், துறவியாரே! நானும் பலமுறை அதைப் பார்த்திருக்கிறேன்" என்றான் குழப்பம் குரலிலும் ஒலிக்க.

"அவநிதா! சுப்ரதீபம் ஆரம்பத்தில் அந்த வேங்கை மரக்கன்றில் பிணைத்த சங்கிலியிலிருந்து விடுபட முயன்று முடியாததால், அங்கேயே நின்று பழகிவிட்டது."

துறவியார் கூறவந்தது என்ன என்பதைப் புரிந்து கொண்ட பூங்கோதையின் மலர் விழிகள் இன்னும் மலர்ந்து தந்தையை அனுதாபத்துடன் நோக்கின. துறவியார் தொடர்ந்தார்,


"இப்போது சுப்ரதீபம் அந்த வேங்கை மரத்தையே அனாயாசமாகப் பிடுங்கி எறியக் கூடிய வலிமை படைத்தது. ஆனாலும் அந்த மரத்தை விட்டு நகராமல் அங்கேயே நின்று கொண்டிருக்கிறது.

"அவநிதா, நீ இப்போது சோழருக்கும் பாண்டியருக்கும் இணையான சுதந்திர மன்னன். கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சுப்ரதீபத்தைப் போல ஏன் இன்னும் அடிமைத் தளையில் உன்னைப் பிணைத்திருப்பதாக எண்ணிக் கொண்டு என்னைக் கண்டு பதறுகிறாய்? நான் ஒரு சாதாரணத் துறவி அவநிதா. நீ இருபத்து நான்கு உபநாடுகளைக் கொண்ட கொங்கு நாட்டு மன்னன். சோழ மன்னரின் மருமகன். உன் நிலையைச் சரியாக உணர்ந்து கொள்" என்றார் துறவியார்.

"என்ன இருந்தாலும் நான் சோழ மன்னருக்கும், இப்போது சுந்தர பாண்டியத் தேவருக்கும் கடமைப் பட்ட சிற்றரசன்தானே?" என்றான் அவநிதன் சற்றுக் கழித்து.

"யார் சொன்னது அவநிதா? சோழ ராஜேந்திரனுக்குப் பின் பாண்டியரின் சார்பாக சோழ மண்டலத்தை ஆளப் போகிறவன் ஆதித்யன். உன் மகள் பூங்கோதை அவன் பட்டத்தரசி. புரிகிறதா?" என்றார் துறவியார்.

துறவியாரின் பேச்சு சற்றி



வனைத்து தன் திருமணத்தில் வந்து நிற்பதையும் அடுத்து அவரது பரிகாசப் பேச்சு துவங்கி விடும் என்பதையும் உணர்ந்து கொண்ட பூங்கோதை முகம் சிவக்க எழுந்தாள். அவளைக் கையமர்த்தியபடியே எழுந்த துறவியார், "பூங்கோதை, பட்டத்தரசி என்றதும் வேறொன்று நினைவுக்கு வருகிறது. சோழ மன்னரின் பட்டத்தரசியார் தமது ஆபரணங்கள் அனைத்தையும் உனக்கு வழங்கி விட உத்தரவிட்டு, தில்லையிலிருந்து ஓலையனுப்பியிருக்கிறார். நான் சென்று பொக்கிஷ அறையிலிருந்து அவற்றை எடுத்து வருகிறேன்" என்றபடியே முறுவலுடன் வெளியே நடந்து மன்னரின அந்தரங்க அறையை நோக்கி விரைந்தார்.

மரக்கிளைகளிலும், பாழ் மண்டபங்களிலும் வௌவால்கள் மட்டுமே தலைகீழாகத் தொங்குவதில்லை. சில சமயங்களில் மனிதர்கள் கூட அப்படித் தொங்குவதுண்டு என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தான் அந்தக் காடவ வீரன்! ஆனால் அவன் விரும்பி அந்தச் செயலைச் செய்யவில்லையென்பதை அவன் கால்களை மரக்கிளையுடன் இணைத்த கயிறுகள் நிரூபித்தன. தலைகீழாக ஊசலாடிய அவனது கறுத்த முகத்தில் எல்லையற்ற அச்சம் விரவிக் கிடந்தது. அவனது வாயும் திறந்து திறந்து மூடியதே ஒழிய வார்த்தைகள் ஏதும் வெளிவராமல் அர்த்தமற்ற ஒலிகள் மட்டுமே வந்தன.

அவனது இந்த நிலைக்குக் காரணமான யுவான் அவன் எதிரில், கரங்களில் இரு மெல்லிய ஊசிகளுடன் நின்று கொண்டிருந்தான. ஊசிகளைக் கண்ட காடவ வீரனின் விழிகளில் திகில் அதிகரித்தது. யுவானின் குரல் கடுமையுடன் ஆனால் நிதானமாக ஒலித்தது. "காடவனே, நீ இப்போது பதில் கூற மறுத்தால் இப்படியே நிரந்தரமாக ஊமையாகி விடுவாய். என்ன சொல்கிறாய்?"

தாற்காலிகமாக ஊமையாக்கப்பட்டிருந்த அந்தக் காடவ வீரனின் தலை வேண்டாமென்பதாக பலமாக ஆடியது. மீண்டும் அர்த்தமற்ற ஒலிகள் அவனிடமிருந்து எழுந்து, பதிலளித்து விடுவதாகவும் உணர்த்தின. ரத்தம் முழுக்கத் தலையை நோக்கிப் பாய்ந்ததால் சிவந்து கிடந்த அவன் விழிகள் யுவானைப் பரிதாபத்துடன் பார்த்துக் கெஞ்சின.

நிதானமாக அவனை நெருங்கிய யுவான் அந்த ஊசிகளை லாகவமாக காடவனின் கழுத்தில் பதித்து எடுத்தான். அடுத்த கணம் காடவனின் குரல் உயர்ந்து ஒலித்தது. "வேண்டாம் யுவான், வேண்டாம். என்னை விட்டுவிடு. விட்டுவிடு. நான் அனைத்தையும் கூறி விடுகிறேன்." எறக்குறைய கதறலாகவே ஒலித்தது காடவனின் குரல்.

அருள்வாக்கு

ரொம்ப ஜலக் கஷ்டமுள்ள இடத்தில் கிணறு, குளம் வெட்டுவதை ரொம்பவும் பெரிய தர்மமாக ஆதிநாளிலிருந்து ச்லாகித்துச் சொல்லியிருக்கிறது. இப்போது ராஜஸ்தான் ஸ்டேட்டில் சேர்ந்துவிட்ட ராஜபுதனம் ஒரே பாலைவனப் பிரதேசம் அல்லவா? அங்கே ஏழெட்டு மைலுக்கு ஒரு இடத்தில்தான் எவனாவது ராஜாவோ, பிரபுவோ கிணறு வெட்டியிருப்பான். ரொம்ப ஆழத்தில், ஆதிசேஷன் தலைவரைக்கும் என்பார்களே, அப்படிப் பாதாளம் வரைக்கும் தோண்டிக் கொண்டே போய்த்தான் இப்படி அபூர்வமாக எங்கேயாவது கிணறு வெட்டியிருக்கும். அந்தக் கிணற்றுக் கட்டைகளில் இந்த மஹா பெரிய தர்மத்தை இன்னான், இன்ன ராஜா காலத்தில் பண்ணினான் என்கிற

"சொல். காடவராயன் எங்கே?" கடுமையுடன் ஒலித்தது யுவானின் குரல்.

காடவராயனுடன் கலந்து கொள்ளத் தாமதித்து வந்து, யுவானிடம் சிக்கிக் கொண்ட அந்தக் காடவ வீரன் மளமளவென்று காடவராயரின் திட்டங்களை ஒப்பிக்கத் தொடங்கினான்.

காடவராயனின் வீரர்களின் நடமாட்டம் தஞ்சையில் அதிகரித்திருப்பதாக காவற்படைகள் கூட அதிகமில்லாத அந்த நிலையில் பாண்டிய மன்னனுக்கு ஓலையனுப்பிய துறவியார், காஞ்சியிலிருந்த யுவானுக்கும் ஓலையொன்றை அனுப்பியிருந்தார். அன்றே காஞ்சியிலிருந்து கிளம்பிய யுவான், தன் பார்வையில் பட்ட இரண்டொரு காடவ வீரர்களிடமிருந்தும் இறுதியாக கொள்ளிடக் கரையில் சிக்கியவனிடமிருந்தும் காடவராயனின் திட்டங்களைப் பூரணமாக அறிந்து கொண்டான். ஏற்கெனவே தான் தாமதித்துவிட்டதை உணர்ந்தவன், காடவராயன் தஞ்சையை அடைந்திருப்பானென்பதையும் புரிந்து கொண்டதால் மரக்கிளையிலிருந்து தொங்கிய காடவனை அவசரமாக இறக்கித் தரையில் அமரவைத்தான், "காடவனே, உன் கால்களை மடக்க முயற்சிக்காதே. நரம்புகள் பிசகி விடும். நான் சென்று வீரர்களை அனுப்பும் வரை இங்கேயே இரு" என்றபடியே தனது புரவியை அடைந்து ஒரே தாவலில் ஏறி அதை கொள்ளிடத்துப் பாதையில் பறக்கவிட்டான்.

இரண்டு காதங்கள் சென்றவன், கிராமத்து மக்கள் பலர் பந்தங்களுடன் கூட்டமாக நிற்பதையும் உடன் சோழ வீரர் சிலர் இருப்பதையும் கவனித்து, புரவியின் வேகத்தை மட்டுப்படுத்தினான். இருளில் புரவியின் வேகமான குளம்பொலி கேட்டுத் திரும்பிய கிராமத்தவர் வருபவன் யுவான் என்பது தெரிந்ததும் முகம் மலர்ந்தார்கள். கீழே குதித்தவனை வணங்கி,

details எல்லாம் ஸம்ஸ்க்ருதத்தில் கல்வெட்டுக்களாகப் பொறித்திருக்கும். நம்முடைய ஹிஸ்டரி, கல்ச்சர் இவற்றை 'ஷேப்' பண்ணுவதற்கு ரொம்பவும் உதவியாயுள்ள இந்தக் கல்வெட்டுகளுக்கு, 'வாபீ ப்ரசஸ்தி' என்று பேர். 'வாபீ' என்றால் ராஜஸ்தானியர்களான மார்வாரிகள் - அவர்களுக்கு ஜலக் கஷ்டம் நன்றாகத் தெரியுமாதலால் - கிணறு வெட்டும் தர்மத்தில் விசேஷமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.



க்ராமப் புறங்களில் எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டலாம். இருக்கிற குளங்களைத் தூர் வாரி சுத்தம் பண்ணலாம். பெரியவன் - சிறியவன் என்றில்லாமல் எல்லோரும் சேர்ந்து பண்ணுவது முக்யம். கோடீச்வரனானாலும், பெரிய பண்ணையாரானாலும், அவனும் மண் வெட்டி கொண்டு வந்து போட வேண்டும். சாஸ்த்ரங்களில் அப்படித்தான் எழுதியிருக்கிறது. அஸ்திவாரக்கல் நாட்டுவது, டேப் வெட்டுவது முதலானதுகள் சாஸ்த்ரத்தில் இல்லை. எத்தனை பெரியவனானாலும் அவனும் வாஸ்தவமாகவே உடம்பு வேர்க்க மற்றவர்களோடு ஸரிஸமமாகப் பூர்த்த தர்மம் பண்ணவேண்டும்; ரதோத்ஸவத்தில் எல்லா ஜாதிக்காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து வடம் பிடித்து இழுக்கிற மாதிரி தான் இதுவும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அழைத்துச் சென்றவர்கள் பாதையின் ஓரத்தில் காயமுற்றும் இறந்தும் விழுந்துகிடந்த சோழ வீரரையும் வண்டியோட்டிகளையும் காட்டினார்கள்.

யுவானின் முகம் இறுகியது. கீழே கிடந்தவர்களைச் சற்று நேரம் வெறித்தவன், அனைவரையும் தஞ்சைக்கு எடுத்து வரும்படி உத்தரவிட்டான். சற்றுமுன்பாக தன்னால் விசாரிக்கப்பட்ட காடவனைப் பற்றித் தெரிவித்தவன், புரவி மீது தாவியேறி தஞ்சையை நோக்கி காற்றாகப் பறந்தான். இரவு நடுநிசியை எட்ட முயன்று கொண்டிருந்தது.

அதே சமயத்தில் பல காதங்களுக்கப்பால் ஆதித்யனையும் யாங்சின்னையும் சுமந்த ரதம், கிருஷ்ணமல்லரின் சீடர்களான உப்பிலிமல்லனும் அவன் சகாக்களும் பின் தொடர, நேர் வடக்கிலிருந்து குடந்தையை இணைத்த பிரதானப் பாதையில் விரைந்து வந்து கொண்டிருந்தது. துறவியாரின் ஓலைகள் கிடைத்தவுடன் யாங்சின்னையும் ஆதித்யனையும் கிருஷ்ணமல்லரின் சீடர்களையும் உதவிக்கு அனுப்பிவைத்த மன்னன், நெல்லூர்புரக் கோட்டையை நிர்வகிக்க வீரர்களை நியமித்து விட்டுத் தானும் மறுதினமே திரும்பி விடுவதாகவும் தெரிவித்திருந்தான்.

ஓலைச் சுவடிகள் வரும் செய்தி முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்ததால் தஞ்சைக் கோட்டைக்குள் வண்டிகள் எந்தத் தடையுமின்றிப் பிரவேசித்தன. இரவு இரண்டாவது ஜாமம் நடந்து கொண்டிருந்தாலும் தஞ்சைக் கோட்டையினுள்ளே பந்தங்களும் தீபங்களும் இரவைப் பகலாகவே அடித்துக் கொண்டிருந்தன. வீதிகளில் ஆங்காங்கு நின்ற பந்தல்களும், தோரணங்களும், கண்களைக் கவர்ந்திழுத்த அரண்மனையின் அலங்காரங்களும் மக்களின் மகிழ்ச்சியைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

காடவராயன் உள்ளே எழுந்த பொறாமைத் தீயை மறைக்க துணியால் முகத்தைப் பாதி வரை மறைத்தபடி வண்டியைச் செலுத்தினான். மக்களோடு மக்களாக நின்று வண்டிகளை வேடிக்கை பார்த்த தனது வீரர்களை விழிகளால் எச்சரித்தவன், பந்தங்களின் ஒளியில் அதிகம் முகத்தைக் காட்டாமல், தனது வண்டியை இரண்டாவதாகச் செலுத்தினான்.

ஓலைச் சுவடிகளைச் சுமந்த வண்டிகளைப் பற்றிய உத்தரவு திட்டவட்டமாக இருந்ததால் அவற்றை வரவேற்ற வீரர்கள், அரண்மனையின் பக்கவாட்டில் வளைந்து திரும்பிய கிளைப்பாதையில் வண்டிகளைச் செலுத்துமாறு கூறிவிட்டு, சுவடிகள் சேர வேண்டிய மாளிகையையும் சுட்டிக் காட்டினர். மாளிகையின் கதவுகள் தட்டப்பட்டவுடன் திறந்து கொண்டன. உள்ளே இளம் புத்தத் துறவியொருவர் அமைதியான முகத்துடனும் கரத்தில் பிடித்த சர விளக்குடனும் காத்திருப்பது தெரிந்தது. ஓலைச் சுவடிகளைக் கண்ட அவரது முகம் மலர்ந்தது. துறவியைக் கண்ட வீரர்கள் வணங்கிவிட்டு அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் சுவடிகளை அடுக்க ஆரம்பித்தனர். தனது வீரர்களுக்கு சமிக்ஞை செய்த காடவராயன், தானும் சுவடிகளைச் சுமந்து மாளிகையின் உள்ளே குவிக்க ஆரம்பித்தான். அவன் சிரத்தையையும் வேகத்தையும் கண்ட காவலர்கள் வண்டியோட்டிகளுக்கு உணவுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அனுப்பி வைப்பதாகவும் கூறிவிட்டு வெளியேறினர். புத்தத் துறவியை அணுகிய காடவராயன், "ஐயா, இந்த இரவுப் பொழுதை நாங்கள் இங்கேயே கழித்து விட்டு விடிந்த பின்பு, தில்லைக்குத் திரும்பிவிடுகிறோம்" என்று கேட்டுக் கொண்டான், வெகு பவ்யமாக.

அந்த இளம் புத்தத் துறவியின் கவனம்

ஓலைச்சுவடிகள் மீதே பதிந்து கிடந்தது. தலையசைத்தபடியே சுவடிகளை ஆராய்ந்தவர் அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து மூலையி லிருந்த பேழைகளில் நிதானமாக அடுக்கத் தொடங்கினார்.

அரண்மனையின் பக்கவாட்டுப் பகுதியில் தாங்களிருப்பதை உணர்ந்து கொண்ட காடவ ராயன், சந்தடியின்றி நகர்ந்து மறு முனையி லிருந்த சாளரத்தை அணுகினான். சாளரத்தின் வழியே பார்வையைச் செலுத்தியவனுக்கு ஆனந்தம் காத்துக் கிடந்தது. மறுபுறத்தில் விரிந்து கிடந்தது தஞ்சையின் சிற்ப மண்டபம். காடவ மன்னன் கூறிய சிற்பமண்டபம் அது தான் என்பதையும், பொக்கிஷ நிலவறைக்குச் செல்லும் ரகசியப்பாதை அங்கு எங்கோதா னிருக்க வேண்டுமென்பதையும் புரிந்து கொண்டவன், தனது வீரர்களை அழைத்து, சாளரத்தின் வழியே சுட்டிக்காட்டியபடி ரகசியம் பேச ஆரம்பித்தான்.

எதையும் கவனிக்காமல் சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருந்த இளம் புத்தத் துறவி யின் விழிகளில் அறிவுத் தாகம் பளபளத்துக் கிடந்தது.

இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், யோக சாத்திரங்கள், திருமுறைகள், பிரபந்தங் கள், தொல்காப்பியம், குறள், இரட்டை மணி மாலை, யாப்பருங்கலக் காரிகை, சூளாமணி, வீர சோழியம், தண்டியலங்காரம், நேமி நாதம், நன்னூல், வச்சணந்தி மாலை, கீழ்க்கணக்கு நூல்கள், தொகை நூல்கள், புறப் பொருள் அகப்பொருள் வெண்பாக்கள், பிங்கலம், நந்திக் கலம்பகம், பெருந்தேவனாரின் பாரதம், கலித் தொகை, பரிபாடல், வாகுவலயம், இசை நூல் கள், முதுமொழிக் காஞ்சி, நான்மணிக் கடிகை, பழமொழி வெண்பா, சிறு பஞ்சமூலம், ஏலாதி, க்ஷேத்திர வெண்பாமாலை, மற்றும் அயல் மொழியில் தத்துவார்த்த மகா சாஸ்திரம், காளி தாஸனின் காவியங்கள், அர்த்த சாஸ்திரம், காவ்ய தர்ஸம், விக்ரமார்ச்சுன விஜயம், சங்க தேவரின் வான சாஸ்திரம், மங்கள ஹரத்துலு, வாகனுசாஸனா.... - சுவடிகளைப் பார்த்துப் பார்த்து மெய்மறந்து வியப்பில் விரிந்த விழி களுடன் அடுக்கிக் கொண்டிருந்த துறவியின் சித்தம் இத்தனை நூல்களையும் சேகரிக்க சுவாமி தேவர் எத்தனை சிரமங்கள் பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணியதால் நெகிழ்ந்து கிடந்தது. நடுநிசி கடந்து கொண்டிருப்பதையும் உணராமல் சுவடிகளில் ஆழ்ந்து கிடந்தவரது கவனம், மறுபுறத்திலிருந்து எழுந்த சரசர வென்ற ஒலியால் கலைந்தது. திரும்பியவர், வண்டியோட்டிகளின் தலைவனாக வந்து இருக்க இடமும் கேட்டவன், சுவடிகளின் அடிப்பகுதியில் ஏதோ துழாவிக் கொண்டிருப் பதைக் கண்டு எழுந்து, "என்ன செய்கிறாய் அப்பனே?" என்று கேட்டபடியே அவனை நெருங்கினார்.

அவர் நெருங்கியதும் சட்டென்று எழுந்த வனது கரத்தில் வாள் ஒன்று பளபளத்தது. துற வியைப் பார்த்து கொடூரமாக இளித்தவன், நகர்ந்து தூணில் செருகப்பட்டிருந்த பந்த மொன்றை எடுத்துக் கொண்டு ஓலைச் சுவடி களை நெருங்கினான். அவன் உத்தேசத்தைப் புரிந்து கொண்ட துறவி அலறினார். "மூடனே, என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? இவை யனைத்தும் அறிவு நூல்களடா...." என்று கூவி யவர் பாய்ந்து அவன் கரத்திலிருந்த பந்தத்தைப் பிடுங்கவும் முயன்றார்.

"ஆம் துறவியே. என் வீரர்களுக்கு அடை யாளம் காட்ட இவை பயன்படட்டுமே. அறிவு நூல்கள் எனக்கு இப்படித்தான் உதவும்" என்ற படியே அவரை வெகு அலட்சியமாக வாள் பிடித்த கரத்தால் ஒதுக்கியவன், பந்தத்தைச் சுவடிகளின் அடியில் செருகினான்.

இளம் துறவியின் இதயம் நின்றுவிடும் போலானது. பாய்ந்து சென்று பந்தத்தை எடுக்கக் குனிந்தவரது பின் கழுத்தில் வேகமாக இறங்கியது காடவராயனின் வாள்.

(தொடரும்)

மூன்று மணி நேரம் கையெழுத்துப் போட்டார்!



பல்வேறு குற்றங்களுக் காக சசிகலாவை செயலாக்கப் பிரிவினர் காபிபோசா சட்டப் படி கைதாக்கி ஓராண்டு சிறை யில் வைத்து விட்டது தெரி யும். இதற்காக 1533 பக்கங் களில் குற்ற ஆவணம் தயாரித் தது செயலாக்கப்பிரிவு. குற்ற வாளியிடம் இந்த ஆவணங் களின் எல்லாப் பக்கங்களிலும் கையொப்பம் வாங்குவது முறை. கையெழுத்துப் போட்டு முடிக்க சசிக்கு மூன்று மணி நேரம் பிடித்தது.

— பிரதீப்



சிவசக்தி

எடிசன் சினிமாவைக் கண்டுபிடித்த காலத்திலிருந்தே எடுக்கப்பட்டுவரும் கதை! வில்லனால் ஒரு குடும்பம் பாதிக்கப்பட, பழிவாங்கப் பல வருஷம் காத்திருந்து, ஜெயிக்கும் குடும்பத்தின் மூத்த பையன். அதிலே ஓர் இடைச்செருகலாக பிரபு. இடைவேளை வரைக்கும் சத்யராஜுக்கு நண்பன் போல வந்து, திடீரென்று 'ஸ்பெஷல் ஆபீசர் சக்திவேல் ரிப்போர்ட்டிங்' என்று போலீஸ் ஸ்டேஷனில் விரைப்புக் காட்டுவது நல்ல தமாஷ்.

படத்தில் நூறு சதம் சத்யராஜ் ஆட்சிதான். பொங்கிப் பொங்கி எழும் பாத்திரம். கண்முன்னால் அப்பாவை வில்லன் கொளுத்த, ஊரை விட்டே (தீவை விட்டு) ஓடி வந்து, வன்மம் வளர்ப்பது சரி; ஆனால், வில்லனை வெல்லத் தானும் வில்லனாகியே தீர வேண்டும் என்று முடிவுசெய்து, அதே கொலை, கடத்தல் என்று கச்சடாவாக இறங்குவதுதான் சகிக்கவில்லை.

அதுவும் ஓவர் நைட்டில் – மிகச்சில மாண்டேஜ் ஷாட்களில் பெரிய தாதா ஆகி விடுகிறாராம்!

அப்புறம் அந்தத் தீவு சமாசாரம். ஒரு தீவில் வாத்தியாராக இருந்தவர் சத்யராஜின் அப்பா. சரி. அங்கிருந்து இடம்பெயர்ந்தாகி விட்டது. ஆனால், என்னவோ அந்தத் தீவுக்கே அவர்தான் சொந்தக்காரர் என்பது போல, "தீவை மீட்டு என் அம்மாவிடம் கொடுத்து விட்டுத்தான் ஓய்வேன்" என்று சத்யராஜ் சூளுரைப்பது ஏனென்று புரியவில்லை. (அப்படியொரு தீவு இருப்பதே கவர்மென்ட்டுக்குத் தெரியாது; வில்லன்கள் அங்கே ஏகபோகமாக ஆயுத பிஸினஸ் பண்ணுகிறார்கள் என்பதாக அபத்த இலவச இணைப்புகள் வேறு.)

கொதிக்கக் கொதிக்க நகருகிற திரைக்கதையை அவ்வப்போது குளிரூட்ட ரம்பா. ரம்பாவின் உடை தேர்வு பற்றி யாராவது ஆய்வு செய்தால் தேவலை. எப்போதாவது அவர் முழங்காலுக்குக் கீழ் மூடுகிற மாதிரி உடுத்தியிருக்கிறாரா?

வசனம் பாலகுமாரன் என்று போடுகிறார்கள். மருந்துக்கும் அந்த வாசனை இல்லை. நிஜமாகவே பாலகுமாரன்தானா?

பிரபுவின் திறமைகளை கங்கணம் கட்டிக்கொண்டு நம் இயக்குநர்கள் ஏன் வீணாக்குகிறார்கள் என்று தெரியவில்லை.

இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு ஒரு வேண்டுகோள். ஒவ்வொரு படம் தொடங்கும்போதும் நீங்கள் ஏன் உங்கள் குரு கே. பாலசந்தரை ஒருதரம் ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடாது?

— ஆர்.பி.ஆ

நீங்கள் கேட்டவை –



• மேயர்...?

எஸ்.எஸ். சந்திரன் மேயரானால்..?

● கபி. இறைமகன், கருங்காலி

? 'ஒன்றுமே அறியாத அரசு அதிகாரிகளை அடக்கி, ஒடுக்கி, கசக்கிப் பிழிந்து, பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைச் சேர்த்தார்' என்று ஜெயலலிதாவை சிதம்பரம் குற்றம் சாட்டியிருக்கிறாரே... அப்படியானால் அதிகாரிகள் ஒன்றுமே அறியாத அப்பாவிகளா? முட்டாள்களா?

! அதான் அறுபதுக்கும் மேற்பட்ட அதிகாரிங்க மாட்டிக்கிட்டு முழிக்கறாங்களே.... இனிமேல் தெரியும்- அவங்க ஒன்றும் அறியாதவங்களா? இல்லை, விரும்பி ஊழலுக்குத் துணை போனவங்களான்னு...

● டி. பசுபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? இன்றைய சூழ்நிலையில் நம் சமுதாய வளர்ச்சியில் பத்திரிகைகளின் முக்கியப் பங்கு என்ன...?

! வாசகனின் ரசனையை உயர்த்த வேண்டும்.. அதலபாதாளத்துக்குத் தாழ்த்தக் கூடாது.

● நா. ரெங்கபிரசாத், சிறுகமணி. ☐

? அரசியலும் ஆன்மிகமும் இணைவது சரியா..?

!சரிதான். ஆனால் அ.வாதியும் ஆ.வாதியும் இணைவதுதான் ஆபத்து.

● வாசுதேவன், மும்பை – 86.

? அரசு அலுவலகங்களில் வேலை செய்பவர்களுடைய ரிடையர்மெண்ட் வயதை அறுபதாக்கப்போவதாக வந்துள்ள செய்தி குறித்து..?

! தேவையில்லாத நீட்டிப்பு!

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? சில லட்சம் பேர் படிக்கும் பத்திரிகைகள் செய்யும் விமர்சனத்தால் திரைப் படங்கள் பாதிக்கப்படாது என்ற ரீதியில், சுஜாதா சமீபத்தில் எழுதினார். இப்போது, பத்திரிகைகள் தவறாமல் நாடக விமர்சனம் செய்ய வேண்டும் என்கிறாரே...?

! எல்லா மனிதருள்ளும் சில சந்தர்ப்பங்களில் முரண்பாடு இருக்கத்தான் செய்யும். சுஜாதா விதிவிலக்கல்ல...

● சுப்பராயபுரம் சுபன், சென்னை – 33.

? ராமர் பெட்ரோலுக்கு மத்திய அரசு பேடன்ட் உரிமை வழங்க மறுத்துவிட்டதாமே.. பேடன்ட் என்றால் என்ன? இனிமேல் ராமர், பெட்ரோல் தயாரிக்க முடியாதா?

!பேடன்ட் என்றால் உரிமைப் பதிவு. ஒருவர் தமது கண்டுபிடிப்புக்கு உரிமைப் பதிவு செய்துவிட்டால், அவர் அனுமதி பெற்ற பிறகே, பிறர் அதைத் தயாரித்து விற்பனை செய்ய முடியும். அதற்கு ராயல்டி தொகை தரவும் வேண்டும். பேடன்ட் உரிமை பெற, பணம் கட்டி முதலில் பதிவு செய்ய வேண்டும். ராமர், மூலிகை பெட்ரோல் தயாரிப்பதில் தடை இல்லை. ஆனால் தயாரிப்பு ரகசியம் பிறருக்குத் தெரியவருமுன் பேடன்ட் உரிமை பெறப்பட வேண்டும் என்று விரும்புகிறார். பேடன்ட் உரிமைக்குச் சிபாரிசு செய்ய வேண்டிய விஞ்ஞான உலகில்தான் ராமரின் கண்டுபிடிப்பு பற்றி முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்கள் வெளியாகியுள்ளன. இது 'மூலிகை பெட்ரோல் சாத்தியம்தானா' என்கிற அடிப்படைக் கேள்வியையே எழுப்பியிருக்கிறது!

• விதிவிலக்கல்ல





• பொருந்தா ஆசை!

• 'ஏமாற்றிய...





....ஓடுகாலிகள்!'

● அ.க. கிருஷ்ணன், சென்னை -39.
? டிஸ்கவரி சேனல் பார்த்து வருகிறீர்களா?
! முழுமையான உபயோகமுள்ள ஒரே சானல் அதுதாங்க... பார்க்காமல் இருக்க முடியுமா?

● என். ஜெயராமச்சந்திரன், கோவில்பட்டி.
? மந்திரி, எம்.எல்.ஏக்களின் வீடுகளில் சோதனையின்போது கோடிக்கணக்கில் பணமும் நகைகளும் சிக்குகிற வேளையில், ஏ.கே. அந்தோணியின் வீட்டில் திருட வந்தவனுக்குக் கவரிங் நகைதான் கிடைத்ததாமே...?
! அதான் காங்கிரஸ் தலைமைப்பதவி அவருக்குக் கிடைக்கவில்லை...! இத்தகைய நேர்மை இன்றைய அரசியலுக்கு ஒத்து வருமா சொல்லுங்க...!



• உரிமை உண்டு!



• வாய்ப்பில்லை!

● வி. செம்பியன், மேலையூர்.
? பொன்விழா ஆண்டில் அடிவெடுத்து வைக்கும் 'குமுதம்' பற்றி...?
! சந்தோஷமுடன் வாழ்த்துகிறார், வைரவிழாவை நோக்கிப் போய்கொண்டிருக்கும் கல்கியின் காவல் தெய்வம்.

● வால்டர் வெற்றிவேல்,
பள்ளியக்ரஹாரம்.
? துரதிர்ஷ்டவசமாக எஸ்.எஸ். சந்திரன் மேயரானால், சென்னையின் நிலை..?
! அதான் நீங்களே சொல்லிட்டீங்களே 'துரதிர்ஷ்டம்' என்று....!

● ரா. சங்கர், நெய்தவாசல்.
? காங்கிரஸ் கட்சிக்கு இனி தேவையானது ஊட்டச்சத்தா அல்லது ஆபரேஷனா?
! போஸ்ட்மார்ட்டம்!

● எம்.விஜயா, மைசூர்
? தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று ஜெயலலிதா சொல்கிறாரே...?
! இப்படிப் பொய் சொல்வதே பெரிய தவறுதானே!

● ஷோபனாதாசன்,
நாட்டரசன்கோட்டை.
? ஜனாதிபதி நாற்காலியில் உட்கார சேஷனுக்கு ஆசையாமே..?
! நமது அரசியல் சாசனப்படி ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்கள் கிடையாது. ஆனால், சேஷனோ அதிகாரம் செய்தே பழகியவர். அந்தப் பதவிக்குச் சிறிதும் பொருத்தம் இல்லாதவர். அதனால் அவரை அந்த இடத்தில் அமர்த்துவதில் ஆபத்துக்கள் அதிகம். எனவே இதற்கு எந்த அரசியல்வாதியும் ஒப்பமாட்டார்... அடிமுட்டாளாயிருந்தாலொழிய!

● மு. இரவிச்சந்திரன், சேலம்-9.
? 'நாத்திகர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கருணாநிதி, பிள்ளையார் ஊர்வலம் செல்லும் பாதையை நிர்ணயிக்கத் தகுதியற்றவர்' என்கிறாரே பாரதீய ஜனதாவைச் சேர்ந்த இல. கணேசன்?
! அது கருணாநிதி என்கிற தனிநபர் நிர்ணயிக்கிற பாதை அல்ல... பொதுமக்கள் நன்மை கருதி, வன்முறை பிரச்னைகளைத் தவிர்க்க, அரசு சார்பில் போலீஸார் நிர்ணயிக்கும் பாதை. அவ்வாறு செய்ய அரசுக்கு உரிமை உண்டு என்று உயர்நீதி மன்றம், உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையே எடுத்துக் காட்டி தீர்ப்பு வழங்கிய பிறகும், இந்த வழக்கிலும் உச்சநீதி மன்றம் போவேன் என்பது வீண் பிடிவாதம்.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்.
? செயின்ட் கிட்ஸ் வழக்கிலும் ராவ் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தால் அவர் தப்ப முடியாது போல் உள்ளதே..?
! தாற்காலிகமாகத் தப்பிப்பதில் மன்னராகி விட்டார் எனினும், நிரந்தரமாகத் தப்புவாரா? சந்தேகம்தான்.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர்:
நா. ரெங்கப்பிரசாத்,
30, பாலாஜி நகர் கீழ்க்கட்டளை,
சென்னை - 600 097.

● ஜி.ஏ.வேளா, சென்னை - 15.
? என்னை ஏமாற்றி, கொள்ளையடித்து, பணத்தைக் காத்துக் கொள்ள ஓடிய ஓடுகாலிகள் என்று முத்துசாமியையும் கண்ணப்பனையும் ஜெ. சாடியுள்ளாரே!
! ஆகக்கூடி, கொள்ளையடித்தது தவறு என்று சொல்லவில்லை; இவரை ஏமாற்றிக் கொள்ளையடித்து ஓடியதைத்தான் தவறு என்கிறார்!

● வே. ஈஸ்வரன், பரமக்குடி.
? எந்த விஷயத்திலும் முடிவெடுப்பதில் காலதாமதம் செய்யும் நரசிம்மராவ் தமது ராஜினாமா குறித்து மட்டும் சடக்கென்று முடிவெடுத்துவிட்டாரே?
! அஸ்தயா விரைவான முடிவு என்கிறீர்கள்..? அட ஈச்வரா!



• மேஜர் புயோயா

நீயா – நானா?

ஒண்டிக்கு ஒண்டி சண்டையல்ல இது. இரண்டு இன மக்களிடையே மூண்டிருக்கும் தீராத சண்டை. சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது புருண்டி. இது ஒரு சிறிய மத்திய ஆப்பிரிக்க நாடு.

புருண்டியில் இரண்டு இன மக்கள். ஹூட்டு – டுட்ஸி. 85 சதவீதம் ஹூட்டு இனம்தான். மீதிதான் டுட்ஸி. ஆனால் விநோதம் என்னவென்றால் சிறுபான்மை டுட்ஸிக்கள்தாம் நாட்டு ராணுவத்தில் பெரும்பான்மை. எனவே அரசைக் கட்டுப்படுத்தும் பலம் உண்டு. கடந்த பல ஆண்டுகளாக டுட்ஸி நிர்வாகத்தில்தான் புருண்டி இருந்து வந்தது.

பொது மக்களுக்கிடையே பங்காளிச் சண்டைதான். இரண்டு இனமும் மோதிக் கொள்வது சர்வசாதாரணம். புருண்டி நாட்டு மண், புல், பூண்டு, செடி கொடிகளைப் பார்த்ததை விட ரத்தத்தை அதிகமாகப் பார்த்திருக்கும் என்றால் மிகையில்லை.

அமைதிக்கு அர்த்தம் தெரியாத புருண்டி

கடந்த மூன்று வருடங்களில் மட்டும் ஒன்றரை லட்சம் பேர் செத்திருக்கிறார்கள். காரணம் நீயா? நானா? தான்.

கிட்டத்தட்ட இதே மோதல்தான் புருண்டியின் அண்டை நாடான ருவாண்டாவிலும். அங்கே ஸ்கோர் அதிகம். 1994 கலவரத்தில் மட்டும் ஐந்து லட்சம் பேர் பிணமானார்கள்.

1993-ல் புருண்டி தேர்தலைச் சந்தித்தது. முடிவுகள் ஒரு வித்தியாசமான நிர்வாக அமைப்பை புருண்டிக்குத் தந்தன.

ஜனாதிபதி பதவிக்கு ஒரு ஹூட்டு இனத்தவரும், பிரதமர் பதவிக்கு ஒரு டுட்ஸி இனத்தவரும் என்று மக்கள் வாக்களித்திருந்தார்கள்.

ஒத்துப் போகவே முடியாத இக்கட்டான நிலை. நிடிபான்டுன்கன்யா என்பவர் ஜனாதிபதியானார்.

நம்மை ஒரு ஹூட்டு இனத்தவர் கட்டுப்படுத்துவதா என்று டுட்ஸிகளிடையே ஓர் எண்ணம். பொறுத்துப் பார்த்தார்கள். ஜூலை 25-ம் தேதி பொங்கி எழுந்தார்கள். கையில்தான் ராணுவம் இருக்கிறதே – ராணுவப் புரட்சியை அரங்கேற்றி விட்டார்கள். ஜனாதிபதியோ புருண்டியில் இருக்கும் அமெரிக்கத் தூதுவர் இல்லத்தில் மனைவியோடும், மைத்துனியோடும் தஞ்சமடைந்தார்.

புரட்சியில் மீண்டும் ஜனாதிபதி பதவி டுட்ஸிகளுக்கே வந்தது. புதிய புரட்சி ஜனாதிபதி மேஜர் புயோயா.

இப்படி இரண்டு அணிகள் முட்டி மோதிக் கொண்டால் மூக்கை நீட்டாமல், அமெரிக்காவால் இருக்க முடியுமா? வழக்கம் போல் பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழனாய் தன்னைக் காட்டிக் கொள்கிறது.

'ராணுவப் புரட்சியைக் கண்டிக்கிறோம் என்று அறிக்கை விட்டுக் கொண்டே, 'பரவாயில்லை. புயோயா அப்படி ஒன்றும் தீவிரவாதியல்ல. டுட்ஸி மிதவாதிதான். அவர் மனது வைத்தால் முன்னாள் ஹூட்டு இன ஜனாதிபதியுடனேயே பேச்சு வார்த்தை நடத்தி, புருண்டியில் ஒரு நிலையான அரசு அமைக்க உதவ முடியும்' என்கிறது அமெரிக்கா, இது சாத்தியப்படாத ஒரு நிலை என்பதை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டே.

'நான்தான் உண்மையான ஜனாதிபதி' என்று பதவி இழந்த ஜனாதிபதி அமெரிக்க தூதர் வீட்டுக்குள்ளிருந்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார் என்ன லாபம்?

ஹூட்டு, டுட்ஸி துப்பாக்கிகள் என்று கீழே விழுகின்றனவோ, அன்றுதான் புருண்டி மக்களுக்கு வாழ்க்கை.

– ராணிமைந்தன்

ஜாலி போட்டி - 11

பரிசு

ரூ- 5000!

இந்த இதழில் இடம் பெற்றுள்ள கதைக்கட்டுரைகளின் தலைப்புகளில் ஏதோ ஒன்று, கீழுள்ள கட்டங்களில் ஒளிந்திருக்கிறது. குறுக்காகவோ, நெடுக்காகவோ, உயரவாட்டிலோ, பக்க வாட்டிலோ-மூன்று கோடிழுத்தால் அந்தத் தலைப்பு அகப்படும். கண்டுபிடித்து, கூப்பனில் எழுதி 21.10.96க்குள் அனுப்பிவிடுங்கள். சரியான விடை எழுதுபவருக்குப் பரிசு ரூ.5000. பலர் சரியாக எழுதினால் குலுக்கலில் ஒருவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

ப	ரி	ள்	வி	சு	டி	மா	ணை	ப்	க
ம	க	ழ	க	அ	ன்	ட்	டா	க	வி
ணை	ந்	ர	அ	ர்	ப்	ப	ணி	ப்	த
சு	ம்	ய	செ	ய்	றா	கே	ஸ	வி	ப
வி	னி	ட	டு	வி	த	கி	கோ	தை	ய
த	ந்	து	வி	ட்	டு	த்	க்	ங்	ந்
க	ர	மா	எ	ன்	டி	ங்	டா	வி	தி
து	வ	ச	ந்	தா	ச	ப்	பு	து	த
று	மு	வ	ன	று	கு	பு	ப	ள	ம
மு	ச	ம்	பா	வி	க்	த	ஜ	ஊ	ரு

ஜாலி போட்டி – 11

ஒளிந்திருக்கும் தலைப்பு : ....

....

பெயர்: ....

முகவரி: ....



செய்திகள், வாசிப்பது செம்பியன்...

ஜெல்லிஃபிஷ் என்ற கடல் ஜந்து பரம சாது. இன்னொரு வகையான பாக்ஸ் ஜெல்லி ஃபிஷ் கொடிய விஷ ஜந்து. இது விசாகப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் காணப்படுகிறது. அண்மையில் கடலில் நீந்தப் போன ஒருவர், இதனால் கடிபட்டு இறந்தே விட்டார். ஆக, கடலில் நீந்தப் போகிறவர்களுக்கு எச்சரிக்கை செய்வதும், ஆபத்து சமயத்தில் உதவியளிக்க, பயிற்சி பெற்றவர்களை நியமிப்பதும் அவசிய மாகிறது. இது ஒருபுறமிருக்க, இந்தக் குட்டி சைத்தானுக்கு எமன், கடல் ஆமைகளாம். கடித்துத் தின்று விடுமாம்! ஆனால் கடற்கரை மணலில் கடல் ஆமைகள் இடும் முட்டைகளை மனிதன் அபகரித்துப் போய் தன் உணவாக்கிக் கொள்ளவே, கடல் ஆமைகளின் எண்ணிக்கை குறைந்து, அதனால் பாக்ஸ் ஜெல்லி ஃபிஷ்ஷின் எண்ணிக்கை அதிகரித்து, அவை மனிதனின் உயிருக்கே உலைவைக்கின்றன! இயற்கைச் சமன்பாடுகளில் மனிதன் மூக்கை நுழைத்தால் அது அவனுக்கே எப்படி ஆபத்தாக முடிகிறது பாருங்கள்!

உயர்நீதி மன்றங்களும் உச்சநீதி மன்றமும் சமீப காலமாக தட்டிக் கேட்பது என்று ஆரம்பித்திருக்கின்றன. லஞ்ச ஊழல் வழக்குகளில் அரசின் சட்டத் துறை, உளவுத் துறை முதலியவற்றின் மெத்தனப் போக்குகளை சகித்துக் கொள்ள முடியாது என்பதை வன்மையாக உணர்த்தி வருகின்றன. சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்பதை நிலைநாட்டி வருகின்றன. இதைப் பொறுக்க முடியாமல், தற்போது எதிர்ப்புக்குரல் கேட்க ஆரம்பித்திருக்கிறது. மக்கள் சபைத் தலைவர் சங்மாவே கூட நீதித்துறையின் தட்டிக் கேட்கும் போக்கு பற்றி சந்தேகம் எழுப்பியிருக்கிறார். நீதிமன்றங்கள் ஆட்சி அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு விடவில்லை. நாடாளுமன்றத்தின் உரிமைகளையும் பிடுங்கிக் கொண்டு விடவில்லை. பதவியைப் பயன்படுத்தி, மக்கள் பணத்தைச் சுரண்டி கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராக ஒரு புனிதப் போர்தான் நடத்துகின்றன. இதற்கு வேறுவிதமாகச் சாயம் பூசுவது ஆபத்தான போக்கு.

காங்கிரஸின் பொருளாளர் என்ற முறையில் சீதாராம் கேசரி, "மூட்டை மூட்டையாகப் பணம் வைத்திருக்கிறார்; அவரது நேர்மையை யாருமே சந்தேகித்ததில்லை" என்கிறது ஸண்டே வார இதழ். இது ஆச்சர்யமான ஒரு வாதம். சீதாராம் கேசரி காங்கிரஸுக்கு விசுவாசமாக இருந்து, பணத்துக்கு முழுப் பொறுப்பு ஏற்றும் இருக்கலாம். ஆனால் மூட்டை மூட்டையாக அடுக்கப்படும் பணம் எப்படிப்பட்டது, எங்கிருந்து, எவ்வாறு வந்தது என்பதில் எல்லாம் அக்கறை காட்டாமல், அவர் கண்களை மூடிக் கொண்டால், அவரை எப்படி நேர்மையாளர் என்று கருத முடியும்?

இவ்வாண்டு வள்ளலார் – காந்தி விழாவில், அன்பழகன் முக்கால் மணி நேரம் சிறப்புரை ஆற்றினார். ஒவ்வொரு நிமிஷமும் பயனுள்ள அறுபது வினாடிகளாக விளங்கியது. வழக்கமாகப் பேச்சாளர்கள், வள்ளலாருக்கும் காந்திக்கும் உள்ள ஒற்றுமைகளைத்தான் எடுத்துக் காட்டுவார்கள். அன்பழகனோ, 'வள்ளலார் அன்பே தெய்வம் என கட்டுப்பட்டு நின்றார், காந்திஜியோ வாய்மையே கடவுள் என்று வீறுகொண்டு எழுந்தார்' என்று அடிப்படை வேற்றுமையை உணர்த்தி, ஆழ்வார்கள், நாயன்மார்கள், கௌதமபுத்தர் என்று ஏராள மேற்கோள்களுடன் விரிவுரையாற்றினார். வீடு திரும்பும் போது, 'பகுத்தறிவுவாதத்தின் முதிர்ந்த நிலை இதுதான் என்றால், ஆத்திகத்தின் முதிர்ந்த நிலைக்கும் இதற்கும் வித்தியாசம் ஏதுமில்லையே' என்ற எண்ணமே மேலோங்கியது!

தேவேந்திரா சாரீஸ்

மிக மிக உயர்ந்த பட்டும், நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது.

H.O.27, ஏலா கந்தப்பன் தெரு, சென்னை - 3, போன் : 5350215
கிளை ஷோ-ரூம் கடை என் 7, ராம்ஸ் பஜார் (பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர், சென்னை - 17. போன் : 8283367

தேவேந்திரா புடவைகள் கிடைக்கும் இடங்கள் :

* **மதராஸ் டெக்ஸ்டைல்ஸ்,** 4/41, சரஸ்வதி மார்க், W.E.A. கரோல்பார்க், புதுடில்லி-110 005: * **காஞ்சிபுரம் சில்க் ஹவுஸ்** (சவுத் எண்டு) 9A/40, W.E.A. கரோல்பார்க், புதுடில்லி, போன் : 572398: * **பங்கஜம் சுந்தரராஜன்,** C6/A.D.D.A. Flats, முனிர்கா, புதுடில்லி - 67: * **நல்லீஸ் சில்க் சாரீஸ் சென்டர்,** 401, டெலாங் ரோடு, மாதுங்கா, மும்பை - 19: * **ஜெயஸ்ரீ,** 2/A, தேசப்பிரியா பார்க் ரோடு, கல்கத்தா - 26: **என். துர்காம்பாள்,** C-71, முதல் மாடி, 10th கிராஸ் மேற்கு விரிவு, தில்லை நகர், திருச்சி - 18. போன் : 34422. * **சித்ரா அசோசியேட்ஸ்,** 50/B, பாணாதுரை தெற்குவீதி, கும்பகோணம், போன் : 20972: * **ரங்காச்சாரி கிளாத் ஸ்டோர்ஸ்.** 123 சென்குப்தா தெரு, கோயம்புத்தூர் - 9: * **ஸ்ரீ முருகன் கிளாத் ஸ்டோர்ஸ்,** 3, ஆரோக்கியசாமி ரோடு கிழக்கு ஆர்.எஸ்.புரம், கோவை-2: * **முருகன் சில்க் ஹவுஸ்,** 439, என்.எஸ்.ஆர். ரோடு, சாய்பாபா காலனி, கோவை-11: * **பிரியா சாரீஸ்** 4, மஞ்சனக்கார தெரு, மதுரை-1. போன் : 33000: * **சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ்,** 90, தெற்கு மாசி வீதி, மதுரை-1, போன் : 25122: * **மகாலட்சுமி சில்க் சென்டர்,** நீன் பில்டிங் (உள்புறம்), 175/11,மேலவீதி, சிதம்பரம்: * **ஹேமாவதி ஏஜென்ஸீஸ்,** 2711, நாணயக்கார செட்டித் தெரு, தஞ்சாவூர்: * **திருமதி சாவித்ரி பாலசுப்பிரமணியம்,** 27-வது தெரு, நங்கநல்லூர், சென்னை-61. (பிள்ளையார் கோவில் அருகில்), போன் : 2343737: * **பாலாஜி கிளாத் சென்டர்,** No. 22/A, கக்கன் தெரு, வித்யா தியேட்டர் அருகில், தாம்பரம், சென்னை - 45. போன் : 236 7752. * **திருமதி சுலோசனா கோவிந்த்,** 2, எம்.ஐ.டி. லெவல் கிராஸிங், குரோம்பேட்டை, சென்னை - 44: * **ஹோம் சாரி ஷாப்,** 15, வடக்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை - 5: * **பர்வதா சாரீஸ்,** 1, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 4: * **எஸ். பொன்னப்பன் டெக்ஸ்டைல்ஸ்,** 2வது பஜார் (மார்க்கெட் போலீஸ் ஸ்டேஷன் அருகில்), செகந்திராபாத்: * **கபில் டிரேடர்ஸ்,** நெ. 7, பெரிய கண்ணாரத் தெரு, மயிலாடுதுறை: * **திருமதி கமலா நாகஸ்வாமி,** 52, சரஸ்வதி நகர், கடலூர், போன் : 112: * **திருமதி பிரேமா குருராஜன்,** 33, ஆஞ்சநேயர் கோவில் தெரு, தருமபுரி - 2:

குறிப்பு : எங்களுடைய டிரேட் மார்க் KRD இருக்கிறதா என்று சரிபார்த்து வாங்கவும்.



"நாச்சம்மை... ஏ நாச்சா...!" என்று உரத்த குரலில் அழைத்துக் கொண்டே படியேறி உள்ளே வந்தாள் அலமேலு ஆச்சி.

"வா அலமி" என்று வரவேற்றுக் கொண்டே வெளியே வந்தாள் கதிரேசன் செட்டியாரின் மனைவி நாச்சம்மை ஆச்சி.

நீளமான படிக்கட்டு முழுவதும் வேம்பின் நிழல் படர்ந்திருந்தது.

இருவரும் எதிர் எதிராகப் படிக்கட்டில் அமர்ந்து கொண்டனர்.

"நாச்சா, காலம்பற ஒம்பூட்டுப் பேத்திப் பொண்ணைப் பாத்தேன். இங்லீசு பள்ளிக்கூடம் போறாளாம். எல்.கே.ஜி. படிக்குதாம். சொன்னாக" என்ற அலமேலுவின் பார்வை நாச்சம்மையை ஊடுருவியது.

நாச்சம்மையின் முகத்தில் ஓர் ஆதங்கம் தோன்றி அடங்கியது.

"ஹும், பேத்திப் பொண்ணு நல்லா, தாட்டியமா இருக்காளா?" என்று கேட்டவளின் குரலில் ஏக்கத்தின் வேதனைகள்!

"ஓ! என்னமா இருக்காள்றே! யூனிஃபார்ம் போட்டுக்கினு கால்ல சப்பாத்து மாட்டிக்கினு, ரெண்டு சடை போட்டுக்கினு நல்லா இருக்காடி. ஒம்பூட்டுப் பேத்திப் பொண்ணு..." என்றாள் அலமேலு.

"ஹும்... ம்.."

"ஏன் நாச்சம்மை அலுத்துக்கிறே?"

"என்னவோ அவுகதேன் மாறிட்டாகன்னா, அவுக பிள்ளைகளையுமில்லா மாத்திப்பிடுவாக போலருக்கு" என்றாள் வேதனைக் குரலில் நாச்சம்மை.

"காலம் மாறுதுல்ல."

"அதுக்காக நாம கூட மாறிப்பிடணுமாக்கும்? சொல்லச் சொல்ல கேட்காமட்டேனுட்டு, 'அரண்மனை போல இருந்த வீட்டை, முகப்பை இடிச்சுப்பிட்டு புது மாடல்னு என்னவோ கட்டியிருக்காக. வீட்டோட அழகே போயிருச்சு அலமி..."

"ஏன் நாச்சம்மை, இப்பவும் வீடு நல்லாத்தானே இருக்கு. முகப்பை மட்டும்தானே மாத்திக் கட்டியிருக்காக. உள் வளவெல்லாம் மாத்தாம கொள்ளாம அப்படியேதானே

உள்வீடுகள்...

உமா கல்யாணி

இருக்கு."

"வீட்டோட அழகே முகப்புலதான இருக்கு அலமி! மலேயாவுல இருந்து பளிங்கும் பாவையுமாக் கொணாந்து வீட்டு முகப்பை அரண்மனை போல அலங்காரமாத்தேன் கட்டினாக செட்டியாரு. அதப் பூராவும் பேத்துப்பிட்டு, என்னவோ கன்னாபின்னான்னு பண்ணி மாத்திப்பிட்டானே! நானுந்தேன் தடுத்துப் பாத்தேன். கேட்க மாட்டேன்னுட்டாகளே!"

"படிச்சவுக. நாலு சீமை போய் வாரவுக. எல்லாம் நாகரீகமாய் இருக்கணும்னு நினைக்காக."

சமாதானம் பண்ண முயன்றாள் அலமேலு ஆச்சி. ஆனால் கலபத்தில் சமாதானமடைவதாக இல்லை நாச்சம்மை ஆச்சி.

"என்ன பெரிய நாகரீகம் வேண்டிக்கிடக்கு? எங்க குடும்பத்தையே 'நாச்சாள் குடும்பம்'னுதேன் சொல்வாக. எவ்வளவோ காலமாத் துலங்கி வர்ற பேரு இது! ஆனா... அவுக எம்பேத்திப் பொண்ணை இந்தப் பேர் சொல்லிக் கூப்பிடலியே. ஹேமான்னோ, கோமான்னோல்ல நாகரீகப் பேர் வச்சுக் கூப்பிடுதாகளாம்."

"போகுது விடு."

"திருவாதிரைக்கு உத்திரகோச மங்கை போய்ட்டு, அப்படியே ராமேஸ்வரம், திருப்புல்லாணி, சேதுக்கரை எல்லாம் போய்ட்டேனா, திரும்பி வர ஒரு வாரமாயிட்டுது. வந்து பாக்கிறப்ப மனசே பதறிடுச்சே! முகப்பை இடிச்சுப் போட்டுட்டானே. இவ்வளவு ஆன பின்னாடி இந்த மகன்கிட்டே என்ன பேச்சுன்னு இஞ்ச வந்தவதேன், அஞ்ச போக மனசே கொள்ளலை. மருமக நடையாய் நடந்து நடந்து கூப்பிட்டாளே! நான் போகலே. செட்டியார் அவுக கட்டினதை இவன் எப்படி இடிக்கப் போச்சு? நாந்தடுத்துப் பிடுவேன்னு தானே, நான் ஊர்ல இல்லாத சமயத்துல இடிச்சிட்டான்!"

"அவனுக்குப் புது மாடல்ல, பங்களா போல இருக்கணும்னு ஆசை. உனக்குப் பழசெல்லாம் மாறிடப்பிடாதுங்கிற நினைப்பு. அவுக முகப்பை இடிச்சு மாத்திக் கட்டிப் பிட்டாகன்னு உனக்குக் கோபம். உள்வளவு பூராவும் செட்டியார் அவுக கட்டி வச்சாப்பல அப்படியேதானே இருக்கு. அட நாச்சம்மை, இனிமே ஆளப் போறவுக அவுக. அவுக இஷ்டம் போல மாத்திக்கிட்டு போறாக. நீ எதுக்கு வீணாப் போட்டு அலட்டிக்கிறே?"

நாச்சம்மை மௌனம் சாதித்தாள். கொஞ்சம் சிந்தனை பண்ணவும் துவங்கி விட்டாள்.

"ரொம்ப அலட்டாம இரு. ஒம் பேத்திப் பொண்ணப் போயி பாத்துட்டு வா. ஒம்பேத்தி ஒன்மாதிரியே மூக்கும் முழியுமா இருக்கு. துருதுருன்னு அலையுது. அப்பத்தான்னு நீ இருக்கே, ஆனா அதுக்கு ஒன்னத் தெரியவே தெரியாதாமே! அந்தப் பச்சை மண்ணுகூட ஒனக்கென்ன மனத்தாங்கல்? போற வரைக்கும் எல்லார்ட்டயும் நல்லா இருக்கலாமில்ல? ஒரு நடை போய்ப் பாத்துட்டு வந்துரு நாச்சம்மை."

எதுவும் கூறாமல் இப்போதும் மௌனமாகவே இருந்தாள் நாச்சம்மை.

"வாங்க ஆச்சி!" என்று சிரித்தபடியே வரவேற்ற கமலா டீச்சர், "யாரைப் பார்க்கணும்" என்று கேட்டாள்.

"எம்பேத்தி இஞ்ச படிக்குதாமில்ல, அதைப் பாக்கோணும்" என்றாள் நாச்சம்மை.

"ஒங்க பேத்தியோட பெயர் என்ன ஆச்சி?"

"ஹேமாவோ... கோமாவோ... இந்த நாகரீகப் பேரெல்லாம் யாருக்கு வெளங்குது."

கமலா டீச்சர் மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

"ஹேமாங்கிற பேர்ல இங்கே யாரும் படிக்கலியே ஆச்சி..."

"இது எல்.கே.ஜி.தானே! இஞ்சதான் எம்பேத்தி படிக்குதுன்னு அலமி சொன்னா. என் மகன் பேரு தேனப்பன்..."

சிறிது யோசனை பண்ணிய கமலா டீச்சர், "தேனப்பன்...? இந்தியன் பாங்கிலே காஷியராய் இருக்கிற தேனப்பன் சார் மகளா...?"

"ஆமா... ஆமா... அவந்தேன்! அவந்தேன்!"

"அவங்க டாட்டர் பேரு ஹேமா இல்லையே!"

"பின்னே?"

"நாச்சம்மைன்னுல்ல ரிஜிஸ்தர்ல இருக்கு. ஒருவேளை வீட்ல ஹேமான்னு கூப்பிடுவீங்களோ?"

"நாச்சம்மை! நாச்சியார் கோவில் நாச்சம்மை! குலப் பெயரை மறந்து விடவில்லை. பதிவு பண்ணின பெயர் நாச்சம்மை என்றால், பரம்பரையைப் பழைமை என்று ஒதுக்கலேன்னுதானே அர்த்தம்! எல்லாமே வெளிநாகரீகம் மட்டும்தானே போல்ருக்கு!"

நாச்சம்மை ஆச்சிக்குப் புல்லரிப்பு!

"நாச்சம்மை நாச்சம்மை" என்று கமலா டீச்சர் அழைத்ததும் குடுகுடுவென ஓடிவந்த சிறுமி, தேனப்பன் சாயலில் தெரியவே பூரித்துப் போனாள் ஆச்சி.

அதே பூரிப்போடு மகனின் வீட்டுக்குச் சென்றவள், "பரவாயில்ல, முகப்பு அழகாத்தேன் இருக்கு. பங்களா போல இருக்கு..." என்று திருப்தியுடன் தன்னுள் கூறிக் கொண்டே மூன்றாண்டுப் பிரிவை இணைக்கும் முகமாக நாச்சம்மை ஆச்சி படியேறி உள்ளே போனாள்.



"கடலங்குடி"யின் தபால்வழி ஜோதிடப் பாடங்கள்

ENGLISH/தமிழ்

ஜோதிட கலாநிதி டாக்டர் (ஸ்ரீமதி) கே.என்.சரஸ்வதி கல்வித் தகுதிகளையும், ஜோதிடத் துறையில் சுமார் 50 ஆண்டுகளாக ஆற்றி வரும் சேவையையும், அவரது வெளியீட்டு நூல்களையும் அறியாதோர் யார்?

ஜோதிட சாஸ்திரத்தைச் சுலபமாகப் பலரும் கற்றுத் தெளிய ஓர் எளிய தபால் வழி பாடத் திட்டத்தைத் தமிழிலும், English-லும் உருவாக்கி *1977*ம் வருடம் முதல் ''கடலங்குடி ஜோதிட ஆய்வு மைய'த்தின் மூலம் நடத்தி வருகிறார். 4 மாதங்களில் ஜோதிடம் தபாலில் கற்பித்து இறுதியில் மையம் Diploma வழங்கும். ஆயிரக்கணக்கில் உள்நாட்டு, வெளிநாட்டினர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். பாடத் திட்டத்தின் நோக்கம், சிலபஸ், கட்டண விவரம், அடங்கிய ப்ராஸ்பெக்ட்ஸ் தமிழ் ரூ.*15/-*, English ரூ.*17/-* M.O செய்து தொடர்பு கொள்க. வெளிநாட்டோர் 2 பிரிட்டிஷ் பவுண்டு P.O அனுப்பி விவரம் அறியவும். விஜயதசமி *(21.10.96)* அன்று துவங்கும் புதிய வகுப்பில் சேர முந்துங்கள்.

நேரிடை ஜோதிடப் பலன்கள் மாலை 3.00 முதல் 6.00 வரை பார்க்கப்படும். ஞாயிறு விடுமுறை.

For appointment Ph: 4343406

Kadalangudi Astrological Research Centre

38, Natesa Iyer Street,
(Near T.Nagar Bus Stand) Madras - 600 017.



கடலங்குடியின் ஸ்ரீமத்பாகவதம் - 7 வால்யூம்கள்

புராணங்களிலேயே மனத்தால் நினைத்த உடனேயே மனதை உருக்கி நம்மைப் பரவச மூட்டுவது ''ஸ்ரீமத் பாகவதம்''. 1931லேயே இதை ஸ்ரீநாராயணீயத்துடன் ஸ்ரீதரீயவம்சீதரீய வ்யாக்யானங்களைத் தழுவி, முதன்முதலில் வெளியிட்டு அன்றும், இன்றும், என்றும் பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டவர் கோபால ரத்தவ ரக்ஷாமணி **பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகளாவர்.** *(4200 பக்கங்கள் கொண்டது).*

63 ஆண்டுகளுக்குப் பின் இரண்டாவது பதிப்பாக 12 அத்யாயங்களும் 7 வால்யூம்களாக, ஆப்செட்டில் பதிப்பித்து 1 செட் ரூ.900/-க்கு வெளிவர உள்ளன. அவற்றில் முதல் வால்யூம் ரூ.100/- இரண்டாவது வால்யூம் ரூ.150/- மூன்றாவது ரூ.125/- நான்காவது ரூ.100/- ஐந்தாவது ரூ.125/- வெளிவந்து விட்டன.

முழுசெட் வேண்டுபவர் முன்பணமாக ரூ.765/- (15% சிறப்பு சலுகை தள்ளுபடி போக) தபால் செலவு ரூ.60/- சேர்த்து ரூ.825/- 'Kadalangudi Publications' *என்ற பெயருக்கு டிராப்டோ* (or) M.O. *அனுப்பி முன் பதிவு செய்து கொள்ளுதல் நலம். இச்சலுகை* **விஜயதசமிக்காக (31.10.96 வரை) தான் உண்டு.** *உங்கள் ஊர் புத்தகக் கடைகளில் சலுகையில்லாமல் பெறலாம். சொற்ப காபிகளே அச்சிடுவதால் தேவைக்கு முந்துவது நலம். எமது இதர* English / *தமிழ் புத்தகங்களுக்கு* **விஜயதசமியை முன்னிட்டு (31.10.96) வரை 10% சிறப்புத் தள்ளுபடி உண்டு.** *கேட்லாக்கிற்கு ரூ.2/-* Stamp *அனுப்பவும்.*

பி.கு: காடகோப நிஷத் ரூ.50/- கசகேனோ உபநிஷத் ரூ.55/- தைத்திரீய உபநிஷத் ரூ.110/- வெளிவந்து விட்டன.

Kadalangudi Publications

38, Natesa Iyer Street,
(Near T.Nagar Bus Stand)
Madras - 600 017.

தடுமாற்றம்

அதோ ஒரு வேன் வருகிறது. டீலக்ஸ் டைப் போலத் தெரிகிறதே. மடக்கி விட வேண்டியதுதான்.

கான்ஸ்டபிள் துரை சுறுசுறுப்பானார். நடுரோட்டுக்கு வந்து கையை நீட்டினார்.

இவரது காக்கி பேன்ட்டையும், வெள்ளைச் சட்டையையும் டிரைவர் கவனித்து விட்டான் என்பது வண்டியின் வேகம் குறைந்ததிலிருந்து தெரிந்தது.

இடதுபக்கம் ஓரம் கட்டச் சொன்னார் வேனை.

வேனின் கண்ணாடியில் பட்ட வெய்யில், இவர் முகத்தில் ஒளிச்சிதறல்களைப் பரப்ப, முகத்தைத் திருப்பிக் கொண்டார் துரை.

வேனின் உள்ளே நோட்டமிட்டார். டவுன் பஸ் கும்பல் தெரிந்தது.

"எத்தனை பேரு உள்ளே?"

டிரைவர் நெளிந்தபடி பின்பக்கம் உள்ளே திரும்பிப் பார்த்தான்.

உள்ளே அமர்ந்திருந்த பெண்மணிகளின் தடித்த உடம்பில், தங்கச் சங்கிலிகளும், நெக்லசும் மின்னின.

எவனாவது வழிப்பறி கொள்ளைக்காரன் கையில் இவர்கள் மாட்டாமல் போய்ச் சேர வேண்டும்!

வேன் கதவைத் திறந்தபடி பட்டு வேட்டி, சட்டையில் ஒரு ஆள் இறங்கி வந்தார்.

'அம்பதாவது தேறுமா? நாமே கேட்பதா, இல்லை, அவர் கொடுப்பதை வாங்கிக் கொள்வதா?'

கான்ஸ்டபிள் துரையின் மனசுக்குள் தடுமாற்றம்.

"அண்ணே வணக்கம்."

இவருக்கு நான் அண்ணனா?

"புதுக்கோட்டை ஏரியா நம்மளுது."

பையிலிருந்து அடையாள கார்டை எடுத்து நீட்டினார் அந்த வேன் நபர்.

துரையின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. ஒரே டிபார்ட்மெண்ட், ப்ச்!

"நீங்க கிளம்புங்க. டிரைவர் பார்த்து, சீக்கிரமா ஊர் போய்ச் சேருங்க."

அந்தப் பெண்களின் உடம்பில் அணிந்திருந்த நகைகளைப் பார்த்தவாறே எச்சரித்தார்.

இவர்களுக்கு மட்டும் காசு, மரத்தில் காய்க்கிறதா?

புர்,புர் என இருமுறை உறுமிவிட்டு வேன் புறப்பட்டது.

மதியம் மூன்று மணி வெயில் மண்டையைப் பிளந்தது. சாலையின் இருபக்கமும் பார்த்தார். எந்த வாகனத்தையும் காணோம்.

பெருமூச்சு விட்டபடி மரநிழலில் ஒதுங்கினார்.

'நாம உப்பு விக்கப் போனா, மழை வர்ற அதிர்ஷ்டம்தான்.'

சத்தமாய் முணுமுணுத்தபடி, கூழாங்கற்களை பூட்ஸ் காலால் உதைத்தார்.

"ஆபரேஷன் செஞ்சுதான் குழந்தையை வெளியே எடுக்கணும். உங்க மனைவி ரத்த குரூப் ரேர் குரூப். யாராவது ஆள் கிடைக்குமான்னு பாருங்க."

காலையில் ஆஸ்பத்திரிக்குச் சென்ற போது டாக்டர் சொல்லி விட்டார்.

மேடிட்ட வயிறுடன் கட்டிலில் படுத்திருக்கும் மனைவியை நோக்கினார் துரை.

"ஆள் கிடைக்கலேன்னா ப்ளட் பாங்க்கிலேதான் வாங்கணும்."

செலவுத் தொகை பயமுறுத்தியது.

அரசாங்க ஆஸ்பத்திரிதான். போலீஸ் உத்யோகம் வேறு கைகொடுத்ததில், வசந்திக்கு நல்ல கவனிப்புதான்.

இருந்தாலும், செலவுக்குப் பணம் புரட்ட முடியாமல் திணறினார் துரை.

"இந்த மருந்தெல்லாம் ஆஸ்பத்திரியிலே கிடையாது. வாங்கிக் கொடுத்திங்கன்னா நல்லது."

திடீரென முளைத்த மாத்திரை இன்ஜெக்ஷன், பில்லே அறுநூறு ரூபாயை சாப்பிட்டு விட்டது இதுவரை.

இப்போது இரத்தம் வாங்க தனியாய் பணம் செலவாகும் போலுள்ளது.

அலைந்து பார்த்தும் ஆள் கிடைக்கவில்லை. ஒருத்தன் ஊரிலில்லை. இன்னொருவன் ரத்த தானம் கொடுத்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. ஆகமொத்தம் ஏமாற்றம்தான் மிஞ்சியது.

போன மாசம்தான் அம்மாவின் கைமுறிவுக்கு வைத்திய செலவு என்று தண்ணீரில்

போட்ட உப்பாய் பணம் கரைந்தது. பாத்ரூம் போகும் போது விழுந்து விட்டார்கள். வயசாகி விட்டது. தடுமாற்றம் இருக்கும்தான்.

தடுமாற்றம்!

துரை ஒரு விநாடி குறுகுறுப்பாய் நின்றார்.

இதுவரை கைநீட்டி யாரிடமும் லஞ்சம் வாங்கியதில்லை.

லாரி, வேன்களை சாலையில் மடக்கி, டாகுமெண்டுகளை சரிபார்க்கும்போது, இதுவரை யாரிடமும் கேட்டதில்லை, ஒரு பைசா!

இன்று, சற்று முன்தான் முடிவு செய்து விட்டார்.

மகானாய் இருந்து யாருக்குப் பிர யோஜனம்.

'துரையா, அவன் பைத்தியமாச்சே.'

டிபார்ட்மெண்டில் அவன் சகாக்களின் கேலி இன்றோடு முடியட்டும்.

அதோ ஒரு லாரி வருகிறதே! அதன் முகப்பு சிரித்தபடி இருக்கிறது.

ஒவ்வொரு லாரியின் முன்புறத்தையும் கவனித்தால், வேடிக்கையாயிருக்கும்.

சிலது அழும், சிலது சிரிக்கும்,

அந்தச் சிரிப்பிலும்



வகையுண்டு.

கம்பீரச் சிரிப்பு, கோமாளிச் சிரிப்பு, வெகுளியான சிரிப்பு... இது கம்பீர சிரிப்புடன் வரும் லாரி!

"என்னண்ணே, நம்ம ஐயாவோட லாரி. வரட்டுமா?"

ஒரு செகண்ட் நிறுத்தி, பறந்துவிட்டான் டிரைவர்.

இந்த ஊர் எம்.எல்.ஏவுக்குச் சொந்தமான லாரி. நிறுத்தவும் முடியாது, உள்ளே உள்ள சரக்கை பரிசோதிக்கவும் முடியாது.

ப்ச், போக்கத்தவனுக்கு போலீஸ்காரன் உத்யோகங்கறது சரியாய்த்தான் இருக்கிறது.

எல்லா போலீஸ்காரனுக்குமா இப்படி? அந்த நாகராஜ் புல்லட்டில் பறக்கிறான். கழுத்தில் மைனர் செயின். நாலு ஆட்டோ ஓடுகிறது டவுனில் அவனுக்கு.

தன்னைப் போன்ற நாணயமான ஆட்களுக்குத்தான் இந்தப் பழமொழி பொருந்தும்.

வெயில், மழையிலேயே நிற்கும் தங்களுக்கு சம்பளத்தையாவது கூட்டிக் கொடுக்கலாம்.

எல்லோருமே சூழ்நிலைக் கைதிகள் தானோ? வாங்கிய கடனே, விழி பிதுங்குகிறது. இனி கேட்டாலும் கொடுக்க மாட்டார்கள்!

ஆஸ்பத்திரி செலவுக்குத்தானே? லஞ்சம் வாங்கினால் என்ன தப்பு?

இதுவே தொடருமா? சேச்சே, இந்த ஒரு முறை மட்டும்தான்! நிறுத்த முடியுமா, ஒரு முறை வாங்கிப் பழகியபின்?

அதோ லாரி ஒன்று வருகிறதே! நிறுத்து. நிறுத்து. இதிலாவது அம்பது, நூறு கிடைக்குமா?

இவரின் சைகைக்கு லாரி தலை வணங்கி ஓரமாய் நின்றது.

"வணக்கம் சார், சௌக்யமா?"

அட, இவனை நிறைய முறை இந்த ரூட்டில் பார்த்திருக்கிறோமே! எல்லா டாகுமெண்டும் சுத்தமாய் வைத்திருப்பான். லாரி டிரைவராய் ஓட ஆரம்பித்து, இப்போது ஒரு லாரிக்கு அதிபதியான பின்னும், டிரைவராய் தொடர்கிறான்.

"வாங்க பரமு, பிசினஸ் ஓடுதா?"

வறண்ட காவிரி போல ஆனது துரையின் உள்ளம். ஒப்புக்கு, அவனுடன் பேசினார்.

இவனிடம் காசு கேட்கலாமா? அதிலென்ன தப்பு. மற்ற போலீஸ்காரர்களாயிருந்தால், தரமாட்டானா? ஓடும் வண்டியில் ஏதாவது ஒரு 'மிஸ்டேக்' கண்டு பிடிக்க முடியும். அது டிரைவர்களுக்கும் தெரியும். அதனால்தான் லஞ்சம் கொடுக்கிறார்கள்.

"அண்ணே...." என்று இழுத்தான் கிளீனர் பையன்.

"டேய், டேய், உள்ளே வைடா. சார் பார்த்தா கோவிச்சுக்கப்போறார்."

பரமு, இவரைப் பார்த்துச் சிரித்தான்.

"பையிலே தயாராய் பணத்தை எடுத்து வைச்சுக்க. ஆளைப் பொறுத்து பத்தோ, அம்பதோ கொடுக்கணும் ரூட்டுல போறச் சேன்னு' சொன்னேன். உங்களைத் தெரியாதா எனக்கு. கை சுத்தமாச்சே. லாரியிலே போய் உட்காருடா."

கிளீனரை விரட்டினான் பரமு.

கேட்டுவிடலாமா? கை சுத்தமாவது, கால் சுத்தமாவது? இப்படி சொல்லிச் சொல்லியே தன்னை ஏமாளியாக்குகிறார்கள். கேட்டு விட வேண்டியதுதான்.

தொண்டையை செருமிக் கொண்டார் துரை.

"என்னசார் வழக்கமான மிடுக்கைக் காணோம். உங்க முகத்துல? உடம்புல கூட விறைப்பு குறையுது?"

திடுக்கிட்டுப் பார்த்தார் துரை.

மனசில் ஏற்படும் மாற்றத்தால், நடவடிக்கைகளிலும் இவ்வளவு மாற்றங்களா?

"ஏன் சார், வீட்டுலே யாருக்கும் உடம்பு சரியில்லையா?"

அட, எப்படி கண்டுபிடித்தான்?

"நம்மளை மாதிரி ஆம்பளைக்கு செயல் தடுமாறுதுன்னா, வீட்டுல மனைவிக்கோ, குழந்தைக்கோ உடம்பு சரியில்லேன்னு அர்த்தம். சரியா சார்?"

துரை கடகடவென கொட்டிவிட்டார்.

"என்ன க்ரூப் சார்?"

சொன்னார்.

"அட, என் க்ரூப்பும் அதேதான். போன வாரம் எய்ட்ஸ் தடுப்பு முகாமிலேயிருந்து டாக்டர்கள் எங்களை மாதிரி டிரைவர்களை டெஸ்ட் பண்ணினப்பதான் தெரிஞ்சது. சொல்லுங்க சார், எப்ப வரணும் ஆஸ்பத்திரிக்கு. பணம் கைமாற்றாய் ஏதும் வேணுமா?"

பரமுவை நிமிர்ந்து பார்த்த துரையின் மனசுக்குள் நிம்மதிப் பூக்கள்.

நல்ல வேளை காப்பாற்றிவிட்டான்!



மழைக்காலத்தில் குடையை எடுக்கிறீர்கள். வெகு நாட்கள் பயன்படுத்தாமல் வைத்திருந்த உங்கள் குடையின் நிறம் மங்கி சாம்பல் பூத்த மாதிரி காட்சி அளிக்கிறது. அதை போக்க அமோனியா கலந்த வெந்நீரில் கழுவிப்பாருங்கள். புதிய குடையை விடப் பொலிவுடன் இருக்கும்!

– பா. அச்சுதன்

கடலோரக் கொலைகள்

கதை: பெனிட்டோ குமார்

(11)

படம் : சசி




ஆமா சார், பொருள்கள் வைச்ச இடத்துல இருக்காது. மண்வெட்டியை ஒரு இடத்துல வைச்சா, காலைல வேற இடத்துல இருக்கும். கேட்டை ஒயர் போட்டு கட்டிட்டுப் போவேன். காலைல அவிழ்ந்து கிடக்கும்...
சரி, நீங்க போகலாம். வழக்கம் போல நடந்துக்குங்க. நாங்க விசாரிச்சதா காட்டிக்க வேணாம்.
சரி, சார்.
அவர்கள் சென்றதும்...
மதிவாணன், ரெண்டு கான்ஸ்டபிள்களை மஃப்டியில் பண்ணை வீட்டைக் கண்காணிக்கச் சொல்லுங்க.
அன்று மாலை...
என்ன ஒரு மாதிரி இருக்கீங்க, நந்து?
ஒண்ணுமில்லியே!
ஆஷா! நீ கூடவா ஏமாத்திட்டே! என்னால் தாங்கிக்க முடியலியே!
இரவு...
கம்பு, கூடை, மேப், மண்வெட்டி, பாட்டரி லைட் எல்லாம் இருக்கா? சரி, நடங்க.
ஹலோ, ஹலோ! எஸ்.ஐ. ஸார்! புறப்படறாங்க... யெஸ், ஸார்!

(தொடரும்)

ப.சிதம்பரம் பிரதமராவாராம்!



அக்டோபர் 5-ஆம் தேதிக்குப் பிறகு நரசிம்மராவுக்கு நல்ல காலம் பிறந்துவிடும் என்று அவரது ஜோதிடர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குற்றப் பத்திரிகையில் அவர் பெயர் சேர்க்கப்பட்டதிலிருந்து, பெரிய ஆன்மீகவாதி மூடில் இருக்கிறார் நரசிம்மராவ். அரெஸ்ட் வாரன்ட் பிறப்பிக்கப்படும் பட்சத்தில், கைது செய்து கொண்டு போய் எங்கே தங்க வைப்பார்கள், தமக்கு எப்படிப்பட்ட பாதுகாப்பு இருக்கும் என்றெல்லாம் கூட சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார் ராவ். ஆந்திர எம்.பி.க்கள் உபேந்திரா, ஜி. வெங்கடசாமி; மல்லிகார்ஜுன் தவிர, அவருக்கு முழு ஆதரவு தரும் வட மாநில எம்.பி.க்கள் வெகு குறைவு. திங்கள் கிழமை காலை சுப்ரீம் கோர்ட் அறிவிப்பு வரும் வரை, விசிட்டர்கள் யாரையுமே ராவ் சந்திக்க விரும்பவில்லையாம்.

● ராவுக்கு மத்திய அமைச்சகத்தில் பிரதமர் தேவேகௌடாவைத் தவிர, சி.பி.ஐ இயக்குநர் ஜோகிந்தர் சிங், சட்ட அமைச்சர் ரமாகாந்த் கலாப், தில்லி போலீஸ் கமிஷ்னர் நிகில் குமார் என்று ஒரு நால்வர் படை வெகுவாக உதவி வருகிறது. 'ஜாமீனில் விடக் கோரி ராவ் தரப்பில் மனுச் செய்யப்பட்டால் எதிர்க்க வேண்டாம்' என்று தேவேகௌடா ஜோகிந்தர் சிங்கிடம் தெரிவிக்க, சிங் அதை சி.பி.ஐ. வக்கீல் கோபால் சுப்ரமணியத்திடம் சொல்ல, அவர் கோப சுப்பிரமணியமாகி, வழக்கிலிருந்தே விலகிக் கொண்டு விட்டார்! போலீஸ் கமிஷ்னர் நிகில் குமாரோ, 24, அக்பர் ரோடு சாலை காங்கிரஸ் அலுவலகத்தில் தலைவர்கள் விவாதிக்கும்போது, தமது ஆலோசனைகளைத் தாராளமாக வழங்குகிறார்.

● ஜார்கண்ட் முக்திமோர்ச்சா எம்.பி.க்களுக்குக் கோடிக்கணக்கில் ரூபாய் கொடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது அவர்களது வோட்டுக்களைப் பெற்ற வழக்கை விசாரித்து வரும் ஏ.கே. சின்ஹாவைத் தூக்கி சில்சார் என்கிற இடத்துக்கு மாற்றி விட்டது தேவேகௌடா அரசு. காரணம், ராவுக்கு எதிராக இந்த வழக்கில் நிறைய சாட்சியங்களை இவர் வைத்திருக்கிறாராம்! தமது அரசு கவிழ்க்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதை யதார்த்தமாக உணர்ந்திருக்கிறார் தேவேகௌடா!

● அரசாங்க அலுவல்கள் காரணமாக தில்லிக்கு வரும் கர்நாடக அதிகாரிகள், ஏதோ இந்திய அரசே தங்களுக்குச் சொந்தமானது மாதிரி நடந்து கொள்ளுகிறார்களாம். திட்ட கமிஷனுடன் தமது மாநில சார்பில் பேச்சு

வார்த்தைகளில் பங்குகொள்ள வந்த பெண் அதிகாரி, உரத்த குரலில் கத்திக் கத்தி அதிகாரத்துடன் பேச, திட்ட கமிஷன் துணைத்தலைவர் மதுதண்டவதேவுக்கு எரிச்சலாய்ப் போய் விட்டதாம். 'எதற்கு இந்தப் பெண் இப்படி 'காச் காச்' என்று கத்துகிறாள்?' என்று தம் அதிகாரிகளிடம் வருத்தப்பட்டுக் கொண்டாராம்.

● முக்கியமான விஷயங்களில் – குறிப்பாக நரசிம்மராவ் சம்பந்தப்பட்ட விஷயங்களில் – உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவைக் கலந்து ஆலோசிக்காமல் அலட்சியப்படுத்துகிற மாதிரி பிரதமரே முடிவுகள் எடுப்பது, கம்யூனிஸ்ட் கட்சிக்குத் துளியும் பிடிக்கவில்லை. கட்சிச் செயலர் ஏ.பி. வர்தன் தமது கோபத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தி வருகிறார். எப்போது பூகம்பம் வெடிக்குமோ தெரியவில்லை!

● தேவேகௌடாவின் அமைச்சரவைக் கூட்டங்கள் சில நாட்கள் இரவு ஒன்பதரை மணிக்கு மேல் ஆரம்பித்து, நள்ளிரவு தாண்டித்தான் முடிகிறதாம். ஏழரைக்குக் கூட்டம் என்றால் கூட தேவேகௌடா வரும்போது எப்போதும் ஒரு மணி இரண்டு மணி நேரம் தாமதம் ஆகிவிடுகிறது. இரவு 12 மணிக்கு மேல் அவர் தரும் டின்னரை எப்படிச் சாப்பிட முடியும் என்று ஓர் அமைச்சர் வருத்தப்பட்டாராம். தேவே கௌடா, டின்னர், அரட்டை எல்லாம் முடிந்து படுக்கப் போகும் போது மூன்று மணி ஆகிவிடும். காலை ஆறு மணிக்கு எழுந்து விடுகிறார். அதனால்தான் கேபினட் மீட்டிங்குகளிலும், பொதுக்கூட்டங்களிலும் மனிதர் தம்மை அறியாமல் கண்ணயர்ந்து விடுகிறாராம்!

● உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போகும் ப. சிதம்பரத்தைப் பற்றிய குறிப்பைத் தயாரிக்க தில்லியிலுள்ள உலக வங்கி அலுவலகம் படாதபாடு பட்டது. கடைசியாக, ஒருவழியாகத் தயாரித்து வாஷிங்டனுக்கு அனுப்பி வைத்தது. ஒருநாள், இந்திய நிதியமைச்சர் சிதம்பரம், இந்திய பிரதமர் ஆகிவிடுவார் என்றும் அந்தக் குறிப்புகளில் இருக்கிறதாம்.

● முன்னாள் குடியரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங்கின் சுயசரிதை, ஹர் ஆனந்த் பிரசுரமாக விரைவில் வெளிவரப் போகிறது. தமது உதவியாளர் எம்.எஸ். பாத்ராவுக்கு நாலு வருடங்களாக கியானிஜி சொல்லி வந்த நிகழ்ச்சித் தொகுப்பு, ஐந்நூறு பக்கத்துக்கு மேல் இருக்கிறதாம். ஆபரேஷன் ப்ளூ ஸ்டார் விஷயமாகத் தமக்கு இந்திரா காந்தி முன்கூட்டியே தகவல் சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார் ஜெயில் சிங். ராஜீவ் காந்தி அமைச்சரவையிலிருந்த இருவர், தம்மைப் பதவி விலகுமாறு ராஜீவ் காந்தியே கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்ததையும் குறிப்பிட்டிருக்கிறார்! 'பஞ்சாப் முதலமைச்சராக நீங்கள் சென்று விடலாமே?' என்று இருவரும் ஆலோசனை கூறினார்களாம். இந்திரா கொலையுண்டதும், தாம் அயல்நாட்டிலிருந்து திரும்பி வரும்போதே, பிளேனிலேயே ராஜீவ் காந்தியைத்தான் அடுத்த பிரதமராகப் பதவி ஏற்கச் செய்ய வேண்டும் என்று தாம் தீர்மானித்து விட்டதாக எழுதியிருக்கிறார். அருண்சிங்கும், ஆர்.கே. தாவனும் எப்படி தம்மை ஒற்றர் போல் கண்காணித்து வந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். ரகசியக் கோப்புகள் உள்பட எந்தவிதச் செய்தியையும் தமக்குத் தெரிவிக்காமலே ராஜீவ் அலட்சியம் செய்ததை அப்பட்டமாக எழுதியிருக்கிறார் ஜெயில் சிங். "இது எல்லா மொழிகளிலும் வெளியிடப்படும். பல அதிர்ச்சி தரும் சம்பவங்களின் கோவை இந்தப் புத்தகம்!" என்கிறார் பிரசுரகர்த்தரான நரேந்திர குமார்.

- நியூஸ்வாலா

ஜெயில்சிங்: அதிர்ச்சிதரப் போகிறார்...





• ராவ் : ஆன்மீக மூடில்...

"கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷமாயிருந்தது தண்டபாணி. பம்பாய் ஸ்டாருங்களுக்கு டச்-அப் பண்ண உன்னைக் கூப்பிட்டிருந்தாங்களாம்?"

"அட, உன் வரைக்கும் வந்திருச்சா செய்தி. ஒண்ணுமில்லை ஒஷ்டா. எல்லாம் அன்புத் தொல்லை. கோடம்பாக்கத்து ஹீரோயின்களெல்லாம் மட்டும் கண்ணுல ஒத்திக்கறாப்பல பளபளன்னு இருக்காங்க. எல்லாம் உன் கைங்கர்யம்தான். பம்பாய்க்கு வந்து எங்க பக்கமும் கொஞ்சம் கடைக்கண் பார்வை வீசக் கூடாதான்னு ஒரே கெஞ்சல்."

"போறுமே. உட்டா நூல் பிடிச்சி சூட் வுட்ருவியே. விஷயத்துக்கு வா. மும்பாய்ல எதனா விசேஷம் உண்டா?"

"அங்க விசேஷத்துக்கு என்ன பஞ்சம்? தரேன், அள்ளிக்கோ. கமலஹாசன் பாணியில ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு யாரையும் அலவ் பண்ணாம, சைலண்ட்டா அமிதாப்பச்சன் ஒரு படம் நடிச்சிட்டிருக்கார். 'ம்ருத்யுதத்தா'ன்னு படம் பேரு. மெகபூப் ஸ்டுடியோவுல இந்தப் படத்தோட ஷூட்டிங் நடக்கறதே பெரும்பாலும் யாருக்கும் தெரியாது. எப்படியோ ஒரு பேனாக் காரன் மோப்பம் பிடிச்சிட்டு உள்ள போகப் பார்த்திருக்கான். குண்டுக்கட்டா தூக்கிட்டு வந்து ஸ்டுடியோ வாசல்ல கொண்டு விட்டுட்டாங்களாம். ஒண்ணும் எழுதித் தொலைச்சுடாதடா மவனேன்னு கேட்டிட்டிருக்காங்க. அப்படியும் அவன் கை சும்மா இருக்குமா? இந்தப் படத்துல அமிதாப்பச்சன், அவ

• மனிஷா கொய்ராலா



அருணாசலத்தில் ரஜினிக்கு ஜோடி யார்?

ரோட நிஜ வயசுப் பாத்திரத்துல நடிக்கறார்னு எழுதி வெக்க, செமை ரகளை ஆயிடுச்சாம்.

"அப்புறம் ஒரு உன்னதமான செய்தி. நம் ஊர் ரேவதி அண்ட் கோ மாதிரி அங்க ரெண்டு பேர் சமூக சேவை, விழிப்புணர்வு விஷயங்கள்ல புறப்பட்டிருக் காங்க?"

"பஞ்சாயத்து எலக்ஷன் ஏதும் வருதாமா?"

"முழுக்கக் கேளு. அந்த ரெண்டு பேர் – ஐஸ்வர்யா ராயும் மம்தா குல்கர்னியும்! சமீபத்துல திடீர்னு ரெண்டு பேரும் ஒரு நாள் கண்தானம் பண்ணியிருக் காங்க! பாலிவுட்டே புல்லரிச்சுப் போயி நிக்க, மம்தா இன்னும் ஒருபடி மேலே போயி, அன்னை தெரசா உடல்நலம் சரியாக, சர்ச்சுக்குப் போய் பிரார்த்தனை பண்ணிட்டு வந்தாங்களாம்."

"அடடா, என்ன ஒரு மனசு!"

"நீ வேற. இதெல்லாம் மனிஷா கொய்ராலாவை வெறுப்பேத்தத்தான்னு பரவலான பேச்சு. தொழில் ரீதியில அங்க மனீஷாவுக்குப் போட்டி மம்தா பாப் பாதான்! 'இப்படியெல்லாம் ஸ்டண்ட் அடிச்சி, பேரைத் தட்டிட்டுப் போறாளே'ன்னு மனீஷ் செமை புலம்பலாம். உடனே தன்னோட சமூக அக் கறையைக் காட்ட ஏதாவது செஞ்சாகணும்னு துடியா துடிச்சிட்டிருக்காங்களாம்."

"நீ ஏதாவது நல்ல ஐடியா தர வேண்டியது



தானே?"

"கிண்டல் பண்ணாதே கிஷ்டா. முழுக்கப் பேச விடு. முதல் கட்டமா, மது அருந்துவதால் வரக்கூடிய தீமைகள் பத்தி சமீபத்துலதான் தெரிஞ்சுகண்டதாகவும் அதனால தண்ணி போடறதை அப்டீரப்டா நிறுத்திட்டதாகவும் சொல்லி இருக்காங்க."

"சபாஷ்!"

"அதனால அஞ்சு கிலோ உடனே எடை குறைஞ்சுடுச்சி. வேணும்னா எந்தப் பொது மேடையிலேயும் வெயிட்டை நிரூபிக்கத் தயார்னு சொல்லியிருக்காங்க."

"பார்றா!"

"இதெல்லாத்தையும் விட, என்னைக் குடைஞ்சிட்டிருந்த ஒரு விஷயத்துக்கு விடை



• மம்தா குல்கர்னி

கிடைச்சிடுச்சி..."

"அதென்ன?"

"தபுவுக்குக் கல்யாணம் இப்ப இல்லை."

"வாரே, வா! அதையும் விசாரிச்சுட்டியா?"

"பின்ன, அதைவிட என்ன பெரிய வேலை எனக்கு?"

"யாரோ சொன்னியே, சஜித்... என்னவோ வாலா? அவரை லவ் பண்ணலியாமா?"

"ப்ச். லவ்தானாம். வர்ற டிசம்பர் 16-ம் தேதி கல்யாணம்னு தேதியெல்லாம் குறிச்சி, இன்வி டேஷன் அடிக்கிற லெவலுக்குப் போயிருக் காங்க. கடைசி நிமிஷத்துல தள்ளிப் போன துக்கு அமிதாப்பச்சனோட சம்சாரத்துக்குத் தான் நன்றி சொல்லணும்."

"அவங்க எங்க குறுக்க வந்தாங்க?"

"கேளு. பம்பாய் போயிட்டு வந்ததும் இங்க பிலிம் சிட்டியில ஒரு ஷூட்டிங் போயிருந் தேன். அப்ப தற்செயலா தபுவை அங்க பார்த் தேன். என்ன மேடம் உங்களுக்குக் கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிடுச்சின்னு பேசிக்கறாங்களேன் னேன்."

"அப்புறம்?"

"அதை ஏன் கேக்கற தண்டபாணி? டிசம் பர்ல கல்யாணம் முடிச்சிட்டு, ஜனவரியில ஹனிமூனெல்லாம் கூட எங்க போறதுன்னு முடிவு செய்தாச்சு. கடைசி நேரத்துல அமிதாப் பச்சன் தயாரிக்கற படம் ஒண்ணுல நடிக்கக் கூப்பிட்டுட்டாங்க. பெரிய இடம். மறுக்க முடி யலை. சரி கல்யாணம் ஆவுறபடி ஆவட்டும். ஹனிமூனைத் தள்ளிப் போட்டுக்கலாம்னு முடிவு செஞ்சேன். ஆனா ஜெயா மேடம் என்னைக் கூப்பிட்டு, கல்யாணம் ஆயிட்டு நடிச்சா, உன் இமேஜ் அடிபட்டுடும். படம் படுத்துக்கும். படத்தை முடிச்சிக் குடுத்துட்டு, யாரை வேணா கட்டிக்க'ன்னுட்டாங்க. அதான், வேற வழியில்லாம ஒத்துக்கிட்டேன்' அப்படீன்னாங்க."

"ஆக, வண்ணாரப்பேட்டையில ஒரு அருமையான சிலையை இழந்துட்டாங்க."

"சிலையை இழக்கறது பெரிய விஷயம் இல்லை. ஆனா ஒரு அருமையான, கிடைத் தற்கரிய வாய்ப்பை இழக்கறது எப்பேர்ப்பட்ட சோகம்?"

"யார், எதை இழந்திருக்காங்க?"

"ரம்பா! ரஜினியோட 'அருணாசல'த்துல ரம்பாதான் ஹீரோயின்னு, ஃபீல்டுல அத்தினி பேரும் தலையில அடிச்சி சத்தியம் பண்ணாங் களா இல்லியா?"

"ஆமா?"

"ஆனா, ரஜினி சைடுலேருந்து ரம்பாவுக்கு சிக்னல் கிடைக்கலை."

"அடடா!"

"வாய்ப்பு மனிஷா கொய்ராலாவுக்குப் போகும். இல்லாட்டி வழக்கம் போல மீனான்னு பேசிக்கிட்டாங்க."

"சரி."

"ஆனா இன்றைய நிலவரப்படி கடைசி தகவல் - ஹீரோயின் ரம்பா, மனீஷா, மீனா யாருமில்லை. ஐஸ்வர்யாராய்தானாம்!"



"என்னப்பா ஆச்சு... பால்லே பெட்ரோல் வாசனை வருது!..."
"சனியன்புடிச்ச மாடு நேத்து பெட்ரோல் மூலிகையைத்தின்னு தொலைச்சிடுச்சுங்க...!"
— கே.ஜி.எஸ். கோவிந்தன்

"பார்த்தியா, கன்தானம் பண்ணதுக்குக் கை மேல பலன்!"

"ஆனந்தம் படத்துல அம்மணி எப்படி பண்ணியிருக்காங்கன்னு ரஜினி தரப்புல விசாரிச்சிருக்காப்பல. பதில் பாஸிடிவாவே வந்ததாம். சரிதான், புடிச்சிப் போட்டுடலாம்னு முடிவு பண்ணிட்டாங்களாம்."

"அது சரி. ஆனந்தத்துல ஐஸ்வர்யா ராய்க்கு ஜெயலலிதா மாதிரி கேரக்டர்னு கேள்விப்பட்டேன். மெய்யாவா?"

"அதை ஏன் கேக்கற? படத்துல நடிக்கற ஒவ்வொருத்தருக்கும் நாலஞ்சு நிஜ அரசியல் வாதிகளோட கேரக்டரைக் கலந்துதான் பாத்திரம் படைச்சிருக்கறதா சொல்றாங்க."

"பொங்கலுக்கு வந்திருமில்லை?"

"போற வேகத்தைப் பார்த்தா, தமிழ்ப் புத்தாண்டுக்கு வரதே பெரிய விஷயம்னு யூனிட்டுல இருக்கற நம்ம டச்-அப்காரப்பய ஒருத்தன் சொல்றான்."

"ஒரு வருஷமா யாகம் நடக்குதே தண்டபாணி?"

"இதை விடு. பல வருஷ யாகத்துக்குப் பலன் கிடைச்சுட்டதா இப்ப ஒருத்தர் குஷியாயிருக்கார் தெரியுமா?"

"யாரது?"

"ஜி.வி.! தெரியுமில்லை? மைக்கேல் ஜாக்சனை இந்தியாவுக்குக் கூப்பிட்டு, அவர் வராம பல லட்சம் நஷ்டமாயிடுச்சின்னு புலம்பிட்டிருந்தாரில்லை? இப்ப, இந்த வருஷம் ஜாக்சன் இந்தியா வர்றது நூறு பர்சன்ட் உறுதி ஆயிட்டதால, வர்ற போது ஒரு வழி பண்ணிடறதுன்னு முடிவுல இருக்காராம்."

"என்ன பண்ணப் போறாராம்?"

"முதல்ல கேஸ் போடலாம், அல்லது தனிப்பட்ட முறையில் நஷ்டஈடு கேக்கலாம்னு ஐடியா. இருந்திச்சாம். அப்புறம், 'பெரிய இடத்து விவகாரம். பேசாம சமாதானமா போயி, காம்பன்சேஷன் வாங்கிரலாம்'னு அன்பர்கள் யோசனை சொல்லியிருக்காங்க. இப்ப இன்னொரு ஐடியாவும் பரிசீலனைல இருக்காம். வர்றவரை அப்படியே வளைச்சிப் போட்டு, இன்னொரு ப்ரோக்ராம் நடத்திடறதுன்னு..."

"அப்படி நடத்தறவங்க மெட்ராஸ்ல நடத்தினா நல்லா இருக்கும். யார்கிட்டயாவது சொல்லி எனக்கொரு டிக்கெட் ஏற்பாடு பண்ணிடு தண்டபாணி."

"டிக்கெட்தானே? பண்ணிட்டாப் போச்சு. ஒரு ஆயிரம் ரூபா அட்வான்ஸா தள்ளிடு நம்மகிட்ட."

"ஜாக்சன் சமாசாரத்துல ஜி.வி. ஒருத்தர் ஏமாந்தது போதாதா? வேணாம்பா! ஆளை விடு."

— கிச்சா

ஜாலி போட்டி - 8; முடிவு!

12.9.96 தேதியிட்ட காலை தினசரிகளின் அடிப்படையில் சில செய்திகளை இரு பிரிவாகக் கொடுத்து, ஒன்றுக்கொன்று தொடர்புடைய செய்திகளைச் சேர்க்கச் சொல்லியிருந்தோம்.

சரியான சேர்க்கை :

1-J; 2-A; 3-I; 4-G; 5-B; 6-L; 7-D; 8-F; 9-E; 10-H.

சரியான விடை எழுதி, குலுக்கலில் தேர்வாகி, ரூ. 5000/- பரிசு பெறுபவர் :

ஆர். ரவிச்சந்திரன்,
த/பெ. வி. ராஜரத்தினம்,
செக்காரப்பட்டியான் வளவு,
குப்பம்பட்டி சாலை,
ஜலகண்டபுரம் - 636 501.
சேலம் மாவட்டம்


பரிசு பெறும் இவருக்கு நமது வாழ்த்துக்கள்!



"ஐயோ! கட்சி ஆபீஸ் வாசல்ல யாரோ வாழைப்பழத் தோலைப் போட்டு வைச் சிருக்காங்க— உடனடியா சி.பி.ஐ. விசாரணை கேட்டுப் போராடணும்..."


— இந்தியன் ஃபீச்சர்ஸ் சிண்டிகேட்

"பலமணி நேரம் விசாரணைக்குப் பிறகு சுக்ராம் கொடுத்திருக்கிற வாக்கு மூலம் இதுதான்..."



ஆஹா... ஹாஹாஹா...

"மூத்த அரசியல்வாதிங்க தங்கியிருக்கற இடத்தைப் பார்க்கணும்னு குழந்தை ஆசைப்பட்டான்..."



"தலைவருக்கு உதவ முடியுமான்னு பார்க்கறதுக்கு முன்னால நாம எல்லாரும் போய் முதல்ல முன் ஜாமீன் வாங்கிக்க முயற்சி பண்ணணும்..."





டாக்டராவாரா பிரதமர்?

பிரதமர் தேவேகௌடாவுக்கு டாக்டர் பட்டம் கொடுக்க பெங்களூர் பல்கலைக் கழகம் முன்வந்திருப்பது பற்றி ஏகப்பட்ட சர்ச்சை. டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும் என்றும், 'இதெல்லாம் ஒரு தவறான முன்மாதிரி' என்றும் இருவித கருத்துக்கள். 'என்ன காரணங்களுக்காக அவருக்கு டாக்டரேட்?' என்ற கேள்வி கேட்கப்பட்டதும் 'பிரதமராகியிருக்கும் முதல் கன்னடக்காரர் அவர்தானே!' என்று பதில் சொல்லியிருக்கிறது பல்கலைக் கழக நிர்வாகம். 'அப்படியானால் இந்திரா காந்தி கன்னடக்காரர் அல்லவே! அவருக்கு எதற்காக டாக்டர் பட்டம் கொடுத்தார்களாம்?' என்ற கேள்வி எழுப்பி – 'ஓஹோ ஒருவேளை அவர் பத்து வருடங்கள் கழித்து கன்னட மண்ணான சிக்மகளூரில் நின்று ஜெயிப்பார் என்பதனால் முன்கூட்டியே தந்தார்களோ என்னவோ' என்று கிண்டலடித்திருக்கிறது ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

டாக்டர் பட்டத்தைப் பிரதமர் பெற்றுக் கொள்வாரா இல்லையா என்பது இன்னமும் முடிவாகாத நிலையில், முன்னாள் முதல்வர் வீரப்பமொய்லியைச் சுட்டிக்காட்டி ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது. "மொய்லி இதற்கு மிகச் சிறந்த முன்னுதாரணம். அவரே ஒரு எழுத்தாளராகவும் கவிஞராகவும் இருந்தும் கூட பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் அளிக்க முன் வந்த போது, சர்ச்சைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று சொல்லிப் பணிவுடன் மறுத்து விட்டார். பிரதமரும் இதையே செய்யலாம்.'

இந்தச் சர்ச்சைகளெல்லாம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, பிரதமர் டாக்டராகி விடுவார் என்றுதான் தோன்றுகிறது!

பத்திரிகைகளின் மீதும் பத்திரிகையாளர்களின் மீதும் பிரதமருக்கு ஏற்பட்டுள்ள கோபம் இன்னமும் தணிந்ததாகத் தெரியவில்லை. நேரம் கிடைக்கும்போதெல்லாம் திட்டிக் கொண்டுதான் இருக்கிறார். தேவேகௌடாவின் இந்தப் போக்கு, மூத்த பத்திரிகையாளர்களுக்கு நம்ப முடியாத ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில் பத்திரிகையாளர்களிடம் மிகவும் அன்பாகவும் தோழமையாகவும் நடந்து கொள்ளும் தலைவர்களில் கௌடாவும் ஒருவர்.

நான்கு வருடங்களுக்கு முன்பு ஒவ்வொரு ஞாயிறன்றும் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதை வழக்கமாக வைத்திருந்தார் அவர். "எல்லாருக்கும் என்னுடைய அழைப்பிதழ் கிடைத்ததா? தேசிய நாளேடுகளின் நிருபர்கள் அனைவரும் வந்தாயிற்றா?" – என்று கேட்டுக் கொண்டுதான் பேசவே ஆரம்பிப்பார். "சென்ற முறை நடந்த (1994) கர்நாடக சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது ஓர் இளைய நிருபரின் கையைப் பிடித்துக் கொண்டார் கௌடா. நிருபருக்கோ தேவேகௌடாவின் பேரன் வயதுதான் இருக்கும். அப்படியும் அவருடைய கையைப் பற்றித் தம் தலை மீது வைத்து, 'நீங்கள் எனக்கு தந்தையைப் போன்றவர். எனக்கு ஆசி வழங்குங்கள்!' என்றார் கௌடா. அந்த அளவுக்குப் பத்திரிகையாளர்கள் மீது பற்றும் பாசமும் மட்டுமின்றி, மரியாதையும் வைத்திருந்தவர்.

இப்போதோ நேரெதிர் மாற்றம்! "நிருபர்களை... அதுவும் பெங்களூர் நிருபர்களைப் பார்த்தாலே எனக்கு அலர்ஜியாக இருக்கிறது. உங்கள் எழுத்துக்களின் மூலமாக ஒரு நாட்டின் பிரதமரைக் கீழே தள்ளிவிட முடியும் என்று கருதுகிறீர்களா நீங்கள்? உங்களாலா நான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன்? உங்களால் அப்படி என்னைக் கீழே இறக்க முடியும் என்று கருதினால் எழுதுங்கள். உங்கள் பேனா முள்ளின் முனை மழுங்கிப் போகும் வரை எழுதுங்கள்!" என்று முகத்தில் கோபம் பொங்க, சமீபத்திய பெங்களூர் வருகையின் போது பிரதமர் பேசவே, நிருபர்களுக்கு ஒரே அதிர்ச்சி.

பெங்களூரிலிருந்து : **அமுதவன்**

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.


ஷர்தா சேலைகளின் கோலாகல பரிசு திருவிழா



வென்றிடுவீர்

10 ஷர்தாவின் TOP

பரிசுகளை



மற்றும் 200 கவர்ச்சிகரமான பரிசுகள்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஷர்தா சேலையிலும் அதன் தரத்தை உறுதி செய்யும் ஒரு அழகிய ORIGINAL SHARDA ஸ்டிக்கர் உள்ளது. இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் - அந்த ஸ்டிக்கரை ஒரு தபால் கவரில் இணைத்து அத்துடன் நீங்கள் ஷர்தா சேலைகள் விரும்பி வாங்கும் காரணத்தை ஓரிரு அழகிய வாக்கியங்களாக எழுதி வாங்கிய கடை பெயரையும் விலாசத்தையும் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பிரமிப்பூட்டும் பல பரிசுகளை வெல்லுங்கள்.

Sharda® SAREES (INDIA)

பட்டு பாலியஸ்டர் சேலைகள்
மற்றும் பாவாடைகள்

புதிய அறிமுகம்
Vichitra Silks
&
Sun Silk
சேலைகள்



அனுப்ப வேண்டிய முகவரி:
ஷர்தாவின் பரிசுத் திட்டம்
தபால் பெட்டி எண் 3504, சென்னை - 7
அனுப்பவேண்டிய கடைசி நாள் : 15.11.1996
ஷர்தா நிறுவன ஊழியர்களும், சாரி விளம்பர நிறுவன ஊழியர்களும் இப்போட்டியில் பங்கு பெறக்கூடாது.
நடுவர் தீர்ப்பே இறுதியானது.



எல்லா பிரபல ஜவுளிக் கடைகளிலும் கிடைக்கும்.

CHARI